IV.—PRESENTATION OF THE REPORT OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, I, the Chairman of the Committee on Public Accounts, having been authorised by the Committee to submit the report on its behalf, present this Report on the Appropriation Accounts of the State of Madras for the year 1956–57 and the Audit Report 1958, and the Finance Accounts for the year 1956–57 and the Audit Report thereon.

V.— NON-OFFICIAL BUSINESS.

A—BILL.

THE MADRAS DOWRY PROHIBITION BILL, 1958 (L.A. BILL NO. 21 OF 1958).

Mr. SPEAKER : The hon. Member Sri Palanisami may move the Bill standing in his name.

Sri N. K. PALANISAMI : It may be postponed, Sir.

Mr. SPEAKER : I have no objection. The next item is the resolution given notice of by the hon. Member Sri Ramaswamy Mudaliyar on the Food Policy of the Government.

B.—RESOLUTION.

FOOD POLICY OF THE GOVERNMENT OF MADRAS

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, I move—

'That the Food policy of the Government of Madras be taken into consideration'.

Sri K. SATTANATHA KARAYALAR : I second the resolution, Sir.

Mr. SPEAKER : Motion moved—

'That the Food policy of the Government of Madras be taken into consideration'.

The Hon. Minister will reply to the debate at 4-15 p.m.

* Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, in moving this resolution, I wish to touch upon only some important aspects of the problems that are now facing the Government of our State. The question has been repeatedly discussed on the floor of this House on many occasions and it is now being seriously discussed in the Press and on public platforms. The position for

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [24th April 1959

all outward appearances at least is rather very gloomy though not very precarious. In the papers we see every day descriptions of scarcity conditions prevailing in almost all the parts of the State and soaring of prices in all important cities and towns. It is regrettable that the Government even after such a long time after the setting up of the State Trading Scheme has not been able to tackle this problem successfully. Recently I had been to some of the plantations in Coimbatore and the Nilgiris and enquiries reveal a very gloomy picture. The merchants both retail and wholesale are complaining bitterly about the scarcity of rice. Even in the plantation areas workers unions and others complained to me about scarcity of rice in their areas. It seems representations were also made by the Planters on behalf of the workers for supply of 700 tons of rice every month for the workers in the Anamalai Plantations. At one stage the Government asked the Planters to procure rice from Tanjore and with very great difficulty they were able to procure only about 50 tons because they had no regular organization, they had no procuring agency.

Everywhere this kind of thing is going on. Great difficulty is experienced especially by the poorer sections of the people. At one stage the Hon. Minister was telling us that there has been hoarding of foodgrains by the merchants. I do not know whether he has been able to book at least some of these hoarders. So also from the producers' point of view, he was telling us that the Government will have to resort to compulsory procurement in case the producers did not co-operate with the Government and surrender the requisitioned stock. My submission is that the ryots produce paddy not with a view to hoard but with a view to find a market as early as possible to meet his needs. We cannot say that if the ryots keep back their stock for a few months in the expectation of getting a better price, they are hoarding the stock. The Government have got a huge machinery under the State Trading Scheme. Have they taken the pains to send their officers incognito to find the truth whether the ryots are really hoarding their stocks or not? If there had been hoarding either by the merchants or the producers, have the Government taken action against the offenders? My submission is that this State Trading Scheme is a failure or it only proves the utter incompetence of the Government in providing or rushing foodgrains to the different parts of the State.

Then, Sir, we find procurement is allowed by merchants from the Andhra Pradesh for rice both boiled and raw. But at the same time a ban has been imposed on the import of paddy. This seems to be a rather funny thing. I do not know why the millers in our area should be allowed to suffer. So far as boiled rice is concerned I do not think, it will find a good market in our State. After the order for procurement of Andhra rice was issued, we find the position has eased to a certain extent. Even though paddy is procured

24th April 1959] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

at a certain rate from Andhra, it is sold at black-market rates here. The consumers do not want to starve. They want to get rice even at higher prices. The Andhra Government are not honouring the zonal arrangements. Though they say they are allowing the free movement of rice within the zonal area, we find that the price is very high in the Andhra Pradesh. Probably their Government are winking at this. They do not want to strictly enforce the price control. The Andhra Government are not giving us rice and the Kerala people, I understand, go about freely procuring paddy at a very high rate from our State. The rumour is that that Government would even go to the extent of subsiding merchants procuring paddy for that State. I do not know how far this is true. But still the fact is Kerala people are going about procuring paddy at a fabulous price. The Government must look into all these things very carefully and see that either we get the required quota from the Andhra Government or ask the Centre to procure paddy or rice for us from Andhra State and supply to us. If the Central Government is not to come to our aid we should see that we do not send a corn of paddy from our State to the Kerala State. That should be the policy of our Government. Unless something is done immediately the position will become worse.

Sir, we find that the Tanjore district has about 30,60,000 acres under paddy cultivation and each acre, on an average, yields about one ton of rice. So, according to statistics, about 4 lakh tons of rice can be given to the people of Tanjore and the balance can be taken to other areas. So far as other areas are concerned, my submission is that the free movement of paddy can be tried for some time and at the same time the price also can be watched and effectively controlled if possible. I hope the Hon. Minister will look into these matters in all seriousness. I do not know what the latest orders of the Government of India are in regard to this matter. About a fornight ago, our Hon. Minister and some officers went to Delhi and represented the matter. Still I find that the Central Government have not come to our rescue. Recently the Prime Minister had been touring our State and he had been going about from place to place and Hon. Ministers had been following him. I do not know whether a clear picture about the rice position here has been given to him and whether proper representation has been made to him. If proper representation had been made to him, it should have been possible for him to issue peremptory orders. I do not know what has happened?

Recently the State Food Advisory Committee met at Madras and some members of the Committee represented to the Government that a reasonable price acceptable to both the producer and the consumer should be fixed and the Hon. Minister also gave a categorical assurance that a price acceptable to both the parties

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [24th April 1959

would be fixed. Some members of the Committee worked out figures and placed them before the Committee. But we find that only yesterday they were circulated to all the members and it was also stated that they would be placed at the next meeting of the Committee to be held at Coimbatore on the 1st.

Sir, the Government have not come forward to give figures relating to the actual cost of the working of the seed farms. They have not also stated what is the reasonable price and they have not given directions to the officers concerned. The officers are shirking their responsibility. A senior officer who is in charge of the department should be in a position to go into the whole question and give his advice with regard to the fixation of price. It is a very serious problem and if something is not done, some of us are very seriously thinking of resigning our membership of this Food Advisory Committee as we find that nothing happens.

Ryots have been crying day in and day out about the high cost of production, non-availability of fertilizers, attack of insects and pests and so on. All these factors have to be taken into consideration in fixing the price. Some two days back, I happened to peruse the speech of Sri Venkatachari, retired Chief Engineer, who happened to serve as a member of the Food Procurement Committee, in 'The Hindu'. This is what he says—

"The Prime Minister has not been given proper advice by those associated with him. Whenever and wherever the Government stepped in, the prices of essential commodities went up, as in the case of sugar. When the prices of essential commodities looked like settling down, the price of rice has gone up due to talk of State Trading . . ."

Whatever it is, I am not one of those who say that the State Trading should be completely done away with. But my submission is that the Government should be in a position to bring down prices effectively or they should give up this scheme. There is no point in having this scheme in force and at the same time creating scarcity conditions and allowing starvation deaths to occur among the people. This is a very serious problem. The Government have not also controlled the prices of other essential commodities like dhol and gingelly oil. I do not know what the Government have done to bring down the prices. So, I would request the Government in all earnestness to see that the price of rice is immediately brought down by approaching the Centre to procure food on our behalf from the Andhra Pradesh, and if that is not possible, they must consider whether we cannot stop the export of rice to the Kerala State. At the same time we must see that a price reasonable to both the producers and the consumers should be fixed as early as possible. Sir, the Government are playing with fire. Let them not play with the life of millions of people. It is a very serious problem and it

24th April 1959] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

will have very serious consequences. Unless something is done, the position will become worse. So, I would request the Government in all earnestness to do something. If there is anything more to be said, I shall say so after the Hon. Minister has replied to my points. This is all my submission.

* **Sri A. R. SUBBIAH MUDALIAR :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி ஜில்லாவில் இன்று நெல்லினுடைய விலை 50 ரூபாயாக இருந்துகொண்டிருக்கிறது. உணவு விலைக் கட்டுப்பாடு இருக்கிறது. அது உண்மையில் கொள்கையாகவே இருக்கிறதே தவிர நடைமுறையில் எவ்வித பயனையும் அளிக்காமல் இருப்பது குறித்து மிகவும் வருந்த வேண்டியதாக இருக்கிறது. உயர்ந்த சம்பா நெல் கோட்டை 39 ரூபாய் என்று சர்க்காரால் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று நடைமுறையில் விற்கக்கூடிய விலை 50 ரூபாய். நேற்று திருநெல்வேலிச் செய்தி ஒன்றை ஹிந்து பத்திரிகையில் பார்க்கிறபோது ஊருக்குப் போகவேகூட பயமாக இருக்கிறது. கோட்டை 50 ரூபாய் என்று கொடுத்து வாங்கி சம்சாரிகள் சாப்பிடவேண்டுமென்றால் அவர்களுக்கு என்ன கஷ்டம் இருக்கும். நாட்டில் இவ்வளவு அதிகமான விலை விற்கிறபோது பொது ஜனங்களுடன் அதிகமாகத் தொடர்பை வைத்துக்கொண்டிருக்கிற என் போன்றவர்கள் மக்களைச் சந்திக்கும்போது என்ன ஆறுதல் அளிப்பது என்று தெரியவில்லை. மில்காரரர்கள் சொல்கிறார்கள். "நீங்கள் ரசீது கொடுக்க வேண்டாம். நெல் அளந்தால் போதும்" என்கிறார்கள். இரவு பகலாக லாரிகளின் மூலம் திருவனந்தபுரத்துக்கு நெல், அரிசி போகிறது. இதை நினைக்கும்போது என்ன கட்டுப்பாடு இருக்கிறது என்று தெரியவில்லை. பேப்பரில்தான் இவர்கள் நிர்ணயித்திருக்கக்கூடிய விலை இருக்கிறதே தவிர நடைமுறையில் ஒன்றும் இல்லை. ஒரு படி அரிசி ஒண்ணே அரைக்கால் ரூபாய் என்றால் ஏழை எளிய மக்கள் சம்சாரிக் குடும்பங்கள் என்ன ஆகும்? இதை எப்படி சகித்துக்கொண்டு அவர்களால் வாழ்க்கையை நடத்த முடியும் என்று தெரியவில்லை. நான் ஒரு விவசாயி. என்னிடத்தில் 48 ரூபாய் என்று கொடுங்கள் என்று ரைஸ் மில்காரரர்கள் வந்து கேட்கிறார்கள். சர்க்கார் நிர்ணயித்துள்ள விலைக்குத்தானே நீங்கள் விற்கவேண்டும் என்று கேட்டால் நாங்கள் மூன்று பங்குதானே தரப் போகிறோம். 75 சத விகிதம் கொடுத்துவிட்டு பாக்கியுள்ள 25 சத விகிதம் ப்ளாக் மார்க்கெட்டில் விற்றே நஷ்டம் இல்லாதபடி செய்துகொண்டு விடுவோம் என்கிறார்கள். நானும் ஆளும் கட்சியில் இருக்கிறேன். என்ன செய்வது என்று தெரியவில்லை. ரெவின்யூ அதிகாரிகளிடம் சொன்னால் எழுதிக்கொடுங்கள் என்று சொல்கிறார்கள். ரெவின்யூ அதிகாரிகளுக்கு இது சம்பந்தமாக என்ன அதிகாரம் இருக்கிறதோ தெரியவில்லை. நேரடியாக உற்பத்தியாளர்கள் விற்கமுடியாது. 10 மாண்டு வரை கொடுக்கலாம். அதற்குமேல் விற்றால் கணக்கு வைத்துக்கொள்ளவேண்டும். நாங்களும் ஒரு சந்தேகத்தைக் கிளப்பினோம். நெல்லுக்கும், அரிசிக்கும் வைத்திருக்கிற விலையைப் பார்த்தால் மில்காரரர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கும் லாபத்தைக் குறைத்து விவசாயிகளுக்குக் கொஞ்சம் கூட்டிக் கொடுத்தால் விவசாயிகள் சர்க்காரிடத்தில் நேரடியாக விற்க முன்வருவார்கள்.

நாற்பது ரூபாய் சர்க்கார் ரேட்டு ஆனால், 48 ரூபாய் ப்ளாக் மார்க்கெட் ரேட்டாக இருக்கும்போது எந்த சம்சாரி, எந்த நிலச்சுவான்தார் ஒழுங்காக நடக்கமுடியும் என்ற சந்தேகம் வருகிறது. ஏனென்றால் நெல் விலையை மட்டும் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். விவசாயிகள் வாங்கக்கூடிய புண்ணாக்கு, பருத்திக்கொட்டை விலையைக் கட்டுப்படுத்தவில்லை. "புண்ணாக்கு 17 ரூபாய்க்கு வாங்கும்போது நெல் விலை 35 ரூபாய். இப்பொழுது 25 ரூபாய்க்குப் புண்ணாக்கு வாங்கி நெல்லை கண்ட்ரோல்

[Sri A. R. Subbiah Mudaliar] [24th April 1959

விலைக்குக் கொடுக்க முடியுமா ? '' " என்று நிலச்சுவான்தார்களும்,, ப்ரொட்யூசர்களும் சொல்லுகிறார்கள். புண்ணாக்கின் விலையைக் கட்டுப் படுத்திக்கொடுங்கள் என்று சொன்னால் அது " ஆல் இண்டியா பாலிஸி " என்று சொல்லுகிறார்கள். " நாங்கள் அதில் தலையிட முடியாது " என்று சொல்லுகிறார்கள். செங்கோட்டைக்கு மேற்கே போகக்கூடியதையாவது, நிறுத்துங்கள் என்று சொன்னால் **South Zone**-க்குள் இருப்பதன் காரணமாக ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லுகிறார்கள். மக்கள் பிரதிநிதி என்ன செய்ய முடியும் ? விலை விஷம் போல் ஏறிக் கொண்டிருக்கிறது. எந்தச் சமயத்தில் நாட்டில் என்ன நடக்கும் என்று தெரியவில்லை ? சம்சாரிகள், விவசாயிகள் நிம்மதியுடன் வாழ்க்கையை நடத்த முடியவில்லை. மற்ற உணவுப் பொருள்களின் விலையும் ஏறிக் கொண்டே போகிறது.

ஒரு ஏக்கரில் சாகுபடி செய்ய 200 ரூபாய் செலவு ஆகிறது. ஒரு ஏக்கரில் உற்பத்தியான மொத்த நெல்லின் விலை 250 ரூபாய் இருக்கும். ஏக்கருக்கு 5 கோட்டை, 6 கோட்டை என்று நன்றாக விளையக்கூடிய நிலத்தில் இந்த நிலை. டெல்டா ஏரியாவில்தான் இந்த நிலைமை. நாங்கள் இருக்கும் இடத்திற்குக் கடவுள்தான் வழி காட்ட வேண்டும். அங்கு தண்ணீர் கிடையாது. கண்டிப்பாக விளையக்கூடிய நிலமாக இருந்தால் 250 ரூபாய் மொத்த வருமானம் இருந்தால் 200 ரூபாய் வரை விவசாயச் செலவு ஏற்படுகிறது. 50 ரூபாய் மிச்சம். விவசாயி எப்படி கண்ட்ரோல் விலைக்குக் கொடுக்க முன்வருவான் என்று தெரியவில்லை. எனக்குத் தெரிந்தவரையில் சில வழிகளைச் சொல்லு கிறேன். சர்க்கார் இதைப்பற்றி யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். முன்பு லெவி சிஸ்டம் வைத்திருந்தார்கள். **Levy** மூலம் கொள்முதல் செய்தது போக பாக்கியை **Free market**-ல் கொடுக்க லாம் என்ற வழி செய்தால் ஒழுங்கு ஏற்படும் என்று நினைக்கிறேன். அரிசி கொள்ளுமுதல் செய்வதாகத் தெரிகிறது. இரண்டு மாதத்திற்கு அரிசியைச் சேமித்து வைத்துவிட்டால் சர்க்காரால் அதை விற்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். நன்கு காயப்போட்ட அரிசியாக இருந்தாலும் ஒரு மாதத்திற்கு மேல் இருக்காது. ஒரு கோட்டைக்கு 112 படி நெல் என்று வைத்துக் கொண்டால் அதில் பாதி 56 படி அரிசி குத்தலாம். ஆனால் மில்காரர்கள் 70 படி அரிசி எடுக்கிறார்கள். கோவாப்ப ரேட்டிவ் டிப்பார்ட்மெண்ட், ரெவின்யூ அதிகாரிகள் எல்லோரும் அந்த அரிசியை வாங்கப் பதறுகிறார்கள். இந்த அரிசியைச் சேமித்து வைத்து ஜனங்களுக்குக் கொடுக்க முடியுமா என்ற பயம். சர்க்கார் நேரடியாகக் கொள்முதல் செய்வது ரொம்ப வருந்தத்தக்கது. அன்றாட வாழ்க்கைத் தேவைகளையெல்லாம் சர்க்காரே ஏற்று நடத்துவது என்பது நடக்காத காரியம். இதையெல்லாம் " செக் " பண்ணும் பொறுப்பை மட்டும் வைத்துக்கொள்ளவேண்டுமே தவிர இதையெல்லாம் சர்க்காரே நேரடி யாக நடத்தும் நிலை வந்துவிட்டால் **Sta e Trading** பிரயோசனப்படாது என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதோடு ப்ரொட் யூசர்கள் அவரவர்கள் கிராமத்தில் அரிசியாக மாற்றி விற்க ஒரு பர்மிஷன் கொடுத்தால் பொறுப்புள்ளவர்கள் விற்கத் தயாராக இருப்பார்கள் என்று சொல்லப் பிரியப்படுகிறேன். அதிகமாகப் பேச பயமாக இருக்கிறது. சர்க்கார் கட்சியின் அங்கத்தினராக இருப்பதால் நானும் கொஞ்சம் பயப்படுகிறேன். யுத்த காலத்தில்கூட இவ்வளவு துணிச்சலாக அதிக விலைக்கு விற்கப்படவில்லை. இதை எப்படி நிறுத்துவது என்பதற்குச் சர்க்காருக்கு வழி கிடைக்கவில்லையா ? **Zonal system** இருப்பதால் தான் இந்தக் கஷ்டம் ஏற்படுகிறது. இந்த ஸோனல் சிஸ்டம் இருக்கும் வரையில் திருநெல்வேலி ஜில்லா சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு நாளும் விலை இறங்காது. இதற்கு உடனடியாக ஒரு வழி செய்யாவிட்டால் பொது ஜனங்கள் ரொம்பக் கஷ்டப்படுவார்கள்.

Sri S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, சென்னை அரசாங்கத்தின் உணவுக் கொள்கையைப் பொறுத்து நடக்கும் இந்த விவாதத்தில் நானும் கலந்துகொண்டு ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

Mr. SPEAKER : ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 10 நிமிஷந் தான் கொடுக்கப்படும். இன்னும் 9 பேர் பேசவேண்டியிருக்கிறது.

Sri S. LAZAR : எனக்குத் தெரிந்த வரையில் சென்னை அரசாங்கத்தின் கொள்கை "நாட்டிலே உள்ள மக்களுக்குப் போதுமான அளவு உணவுப் பொருள் கிடைக்கவேண்டும். ஜனப் பெருக்கம் ஏற்பட ஏற்பட உற்பத்தி அதிகமாக்கப்படவேண்டும். உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவெண்டும். அதே சமயத்தில் பொது மக்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பொருள் கிடைக்கவேண்டும் என்பதுதான். மேலும், உபரி உண்வுப் பொருள்கள் நல்ல விலைக்கு இங்கே செலவிடப்படமுடியாத உணவுப் பொருள்கள் அந்நிய ராஜ்யங்களுக்குச் செல்லவேண்டியிருந்தாலும்கூட அதே சமயத்தில் வெளியிடங்களிலிருந்து வாடிக்கையாக வரவழைக்கப்படும் வேறு வகை உணவுப் பொருள்களையும் வழங்கவேண்டு மென்பது அரசாங்கத்தின் கொள்கை என்பது எனக்குத் தெரிந்த வரை இருக்கும் நிலைமை. இந்த அடிப்படையில் பல திட்டங்களை அரசாங்கம் தீட்டி இன்றைய தினம் இந்தக் காரியங்களை நடைமுறையில் செய்து வருகிறோம். உணவுப் பொருள்களைப் பெருக்கவேண்டுமென்ற அடிப்படையில் பல திட்டங்கள் இன்றைய தினம் நிறைவேற்றிக்கொண்டு வருகிறது. அவைகளைப் பற்றி விஸ்தாரமாகப் பேச காலம் இடம் தரவில்லை. விவசாயிகளுக்கு, உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டு மென்ற முறையினும் அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. அதே சமயத்தில் உணவுப் பொருள்கள் நியாயமான விலைக்குக் கிடைக்கவேண்டுமென்பதற்காகவும் பல உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருப்பதை நாம் இன்றைய தினம் பார்க்கிறோம். அதையனுசரித்து, பிப்ரவரி மாதம் முதற்கொண்டு பல உத்தரவுகள் இன்றைய தினம் வரிசைக் கிரமமாக வந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக நான் சொல்ல விரும்புவது, இன்றைய தினம் அடிக்கடி உத்தரவுகள் போட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆனால் அடிக்கடி உத்தரவுகள் வந்துகொண்டிருப்பதால் பெருமளவிற்கு உற்பத்தியாளர்களும், அதை வாங்குபவர்களும், அதே சமயத்தில் விவசாயிகளும் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்வதோடுகூட கூடுமான வரையில் நன்கு ஆலோசித்து அரசாங்கம் உத்தரவுகள் இட வேண்டுமென்றும் அந்த உத்தரவுகள் ஒரு சில நாட்களுக்காவது அமுலில் இருக்கவேண்டுமென்றும் நான் அரசாங்கத்தினிடம் சொல்ல விரும்புகிறேன். அடிக்கடி, தொடர்ந்து மாறி மாறி உத்தரவுகள் வருவதின் காரணத்தினால் எல்லோருக்குமே குறிப்பாக அதிகாரிகளுக்கு குழப்பம் ஏற்படுகிறது என்பதை நான் இங்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். 2-30 p.m.
இந்த உத்தரவுகள் காரணமாக எந்தளவிற்கு இந்த மாகாணத்திலுள்ள மூன்று வகைப்பட்ட மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நான் இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முதன்முதலாக, உற்பத்தியாளர்களைப் பொறுத்த வரையில் நான் தைரியமாகச் சொல்ல முடியும், இன்றைய தினம் அரசாங்கம் நிர்ணயித்திருக்கக் கூடிய விலை, நியாயமான விலை என்பதில் எந்த விதமான சந்தேகமும் இருக்க முடியாது. ரக வாரியாகப் பிரிக்கும்போது, உயர்ந்த ரகத்திற்கு கொஞ்சம் விலை குறைவாகவும், அல்லது தாழ்ந்த ஒன்றிரண்டு ரகத்திற்கு உயர்வாகவும் இருக்கிறது என்று சொல்லமுடியுமே தவிர விலையைப் பொறுத்த வரையில் நியாய விலை என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் ஒன்றை நாம் மனதில் கொள்ள வேண்டியிருச்கிறது. இப்பொழுதுள்ள நிலையில் இந்த விலை தொடர்ச்சியாக இருக்கவேண்டுமென்று சொன்னால் அதைப் பற்றி நாம் பயப்பட

[Sri S. Lazar] [24th April 1959

வேண்டியதில்லை. ஆனால் உற்பத்தியாளர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு ஆகும் செலவை மனதில் வைத்துப் பார்க்கும்போது, அவர்களது செலவு நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது என்பது தெரிய வரும். விவசாயத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இது நன்கு தெரியும். உழுவதற்கு கூலி கொடுப்பதிலும், களை எடுப்பது போன்ற மற்றய வேலைகளுக்கு கூலி கொடுப்பதிலும், உரம் வாங்கும் போதும், அறுவடை செய்யும்போது அந்தத் தொழிலாளர்களுக்கு கூலி கொடுப்பதிலும், ஆக எல்லாவற்றிலும் நாளுக்குநாள் செலவு அதிகப்பட்டுக் கொண்டேதான் செல்கிறது. அதோடு வ்வசாயத்திற்குவேண்டிய விவசாயக் கருவிகளை எடுத்துக் கொண்டால் அவைகளின் விலையும் நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகிறது. இவைகளை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு விலையை நிர்ணயித்தால்தான் அரசாங்கம் நிர்ணயித்திருக்கக் கூடிய விலையை நியாயமான விலை என்று விவசாயிகளால் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் நடைமுறையில் இந்தப் பொருள்களின் விலை ஜுரம் போல் ஏறிக்கொண்டேதான் செல்கிறது. அரசாங்கம் விநியோகம் செய்யும் உரப்பொருள்களின் விலை கூட அதிகமாகியிருக்கிறது, என்று சொன்னால் இதைப்பற்றி அரசாங்கம் கூடுதல் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு இன்றைய தினம் கிடைக்கக் கூடிய விலை முன்பிருந்ததை விட சிறிது அதிகமாகக் கிடைக்கிறது என்று சொன்னாலும் அந்த விலை இன்னும் ஏறாதபடி இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பதில் அவர்களுக்கு ஆட்சேபணை இருக்க முடியாது. அதே சமயத்தில் விவசாயிகளுக்கு தேவைப்படுகிற பொருள்களின் விலையும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அடுத்தபடியாக, பொது மக்களைப்பொறுத்த வரையில் இன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற கட்டுப்பாடு காரணமாக நாம் எதிர்ப்பார்த்த அளவிற்கு, எந்த நோக்கத்தோடு இந்த உத்தரவை வெளியிட்டோமோ, ஆனால் உணவுப்பொருள்களின் விலை நாளுக்குநாள் ஏறிக்கொண்டே போகிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த முறையைக் கையாண்டால் ஒருவேளை அதைச் சமாளிக்க முடியும் என்ற உத்தேசத்தில்தான் அரசாங்கம் இந்த உத்தரவை வெளியிட்டது. ஆனால் நடைமுறையில் பார்க்கிறபோது அவர்கள் எதிர்ப்பார்த்த அளவு இன்றையதினம் நிலைமையில்லை என்பதை எல்லோரும் இங்கு எடுத்துச் சொன்னார்கள். இப்பொழுது ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விலை இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, எந்த நோக்கத்தோடு அரசாங்கம் இந்த உத்தரவை வெளியிட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்பதைத் தான் நாம் இன்று பார்க்கிறோம். விலையை எடுத்துக்கொண்டால் நெல்லிற்கு அல்லது அரிசிக்கு மட்டுமல்ல, ஏனைய உணவுப் பொருள்களுக்கும், அன்றாடத் தேவைக்கு அவசியமான உளுத்தம் பருப்பு, மிளகாய், மல்லி போன்ற பொருள்களின் விலைகளும் ஏறித்தான் இருக்கின்றன. அதையும் நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆகவே, எந்த நோக்கத்தோடு நாம் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று நாம் நடவடிக்கைகள் எடுத்தோமோ அதேபோல் மற்றையப் பொருள்களின் விலைகளும் ஏறாதபடி அவைகளின் விலையும் கட்டுப்படுத்தப் பட வேண்டும். அப்படி அவைகளின் விலையும் ஏறாதபடி தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, மூன்றாவதாக, இன்றைக்கு தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஏராளமான மில்கள் இருக்கின்றன. குறிப்பாக திருச்சி ஜில்லாவைப் பொறுத்த வரையில் நான் சொல்ல முடியும், ஏறக்குறைய 80 பெரிய மில்கள் அங்கு இருக்கின்றன. ஆனால் இன்றைய தினம் அங்குள்ள நிலைமை, சராசரி தினசரி 20,000 மூட்டைக்கு குறைவில்லாமல் நெல் கொள்முதல் செய்து வேலை செய்து கொண்டிருந்த நிலைமை மாறி ஏறக்குறைய எல்லா மில்களும் இன்று மூடப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் அதைப் பற்றி நாம் கவலைப் படவேண்டியதாகயிருக்கிறது. மில்கள் மூடப்பட்டிருக்கின்றன என்று சொலலும்போது

24th April 1959] [Sri S. Lazar]

அதனால் மில் முதலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்வதோடு மட்டுமல்லாமல் அங்கு வேலை செய்யக்கூடிய 7,000 தொழிலாளர்களும் இன்று அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இன்று வேலை இல்லாமல் இருக்கிறார்கள். திருச்சியில் உள்ள பெரிய மார்க்கட்டு மணச்ச நல்லூர் என்பது எல்லோருக்கும் தெரியும். இன்று அந்த 80 மில்களும் மூடப்பட்டிருப்பதின் காரணமாக, அந்த மார்க்கட்டில்கூட, இன்று அங்குள்ள ஸ்டாக்கின் நிலையைப் பார்க்கும்போது அங்கு 800, 1,000 மூட்டைகள்கூட இல்லை என்று சொன்னால் சாதாரண மார்க்கட்டுகளில், ஆயிரக்கணக்கான மூட்டைகள் விற்பனையாகும் திருச்சி நகரத்தில் சாதாரணமாக பத்து, இருபது மூட்டைகள் உள்ள கடைகள் கூட இல்லை என்று சொன்னால் அதினால் பாதிக்கப்படுபவர்கள், பொது மக்கள்தான் என்பதை அரசாங்கம் உணரவேண்டும். கன்ஸ்ஸூமேர்ஸ் கோவாப்பரேடிவ் சொஸைட்டியில்கூட அரிசி கிடைக்கவில்லை. அந்த நிலை ஏற்பட்டிருக்கிறதென்று சொன்னால் மில்லர்கள் அல்லது முதலாளிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று மட்டும் இல்லாமல் சாதாரணத் தொழிலாளர்களும், பெருவாரியான மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால் நாம் அந்தப் பிரச்னையைத் தீர்க்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, திருச்சி ஜில்லாவில் மில்லர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் தஞ்சை ஜில்லாவிலிருந்து ஏராளமாக கொள்முதல் செய்து வந்தார்கள். ஆனால் இன்றைய நிலையில் தஞ்சையிலிருந்து நெல்லை வெளியே எடுத்துச்செல்லக் கூடாதென்ற ஒரு நிலை ஏற்பட்டிருப்பதால் அங்கிருந்து தாராளமாக இந்த வியாபாரிகளுக்கு கொள்முதல் செய்ய முடியவில்லை. அதோடு நெல்லை வியாபாரம் செய்யக்கூடிய ஒவ்வொருவரும் லைசென்ஸ் பெறவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த உத்தரவுப்படி அவர்கள் லைசென்ஸ் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் வாங்கியுள்ள லைசென்ஸ் வியாபாரம் செய்வதற்காகத்தான். அப்படியிருந்தும், தஞ்சைக்கு சென்று அவர்கள் நெல் கொள்முதல் செய்யவேண்டுமென்றால் மறுபடியும் அவர்கள் லைசென்ஸ் வாங்கவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. அதையும் நான் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இவர்கள் நெல் வியாபாரம் செய்ய லைசென்ஸ் வாங்கியிருக்கிறார்கள். அப்படியிருந்தும், மறுபடியும் தஞ்சைக்கு சென்று நெல் கொள்முதல் செய்ய மறுபடியும் லைசென்ஸ் வாங்க வேண்டியிருக்கிறது. இவர்கள் அங்கு சென்று நெல் வாங்கும்போது ஏற்கனவே அவர்களுக்கு கிடைத்து வந்ததுபோல் நெல் அவர்களுக்கு கிடைப்பதில்லை. அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட விலைக்கு மேல் விற்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருந்த போதிலும், வியாபாரிகள் போய் நெல் வாங்கும்போது அவர்களுக்கு அந்த விலைக்கு கொடுக்க மறுக்கிறார்கள். அரசாங்கம் 13 ரூபாய் என்று விலை நிர்ணயித்திருந்த போதிலும் 15 ரூபாய் கொடுத்தால்தான் அவர்கள் கொடுக்கிறார்கள். அப்படி விலை கொடுத்து வாங்கி அதை மில்லில் அறைத்து விற்கும்போது, அரசாங்கத்திற்கு கொடுக்கவேண்டிய கோட்டா 75 சத விகிதம் கொடுத்துவிட்டு எஞ்சிய 25 சத விகிதத்தை என்ன விலைக்கு அவர்கள் விற்க முடியும்? ஆகவே அதை கூடுதல் விலைக்கு விற்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆகவே, நேர்மையுள்ளவர்கள், நியாயமான முறையில் நடக்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் ஒதுங்கிவிடுகிறார்கள் அந்த வியாபாரத்திலிருந்து. ஆனால் நேர்மையில்லாதவர்கள் இரவு பகலாக திருட்டுத் தனமாக அதிகவிலைக்கு விற்கும் ஒரு நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. இன்றைய தினம் திருச்சியில் உள்ள வியாபாரிகள்கூட ரங்கூனில் உள்ள நிலைமையைப்பற்றி குறிப்பு எடுத்திருக்கிறார்கள். இங்கு இன்றைய தினம் குருணி அரிசி என்ன விலைக்கு விற்கப்படுகிறதோ அதற்குப் பாதி விலைக்கு அவர்கள் சென்னையிலேயே டெலிவரி கொடுக்க முடியும் என்று இன்றைய தினம் தெரிவித்திருக்கிறார்கள். துவரை, உளுத்தம் பருப்பு, போன்ற பொருள்கள்கூட இங்குள்ள விலைக்கும் அங்குள்ள விலைக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது.

[Sri S. Lazar] [24th April 1959

ஆகவே, உணவுப்பொருள்களின் விலைகளை குறைக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் நமது அரசாங்கத்திற்கு இருக்கும்போது ரங்கூனிலிருந்து இவைகளை இறக்குமதி செய்வதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். பாரின் எக்சேஞ்ச் பிரச்னை இதில் குறுக்கிடலாகாது. மக்களின் வயிற்றுப் பிரச்னைதான் முக்கியம். ஆகவே, மத்திய அரசாங்கத்திற்கு இதில் ஆட்சேபணை இருந்தபோதிலும்கூட நமது அரசாங்கம் அவர்களிடம் இதை எடுத்துரைத்து இந்த உணவுப்பொருள்களை ரங்கூனிலிருந்து இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்யவேண்டு மென்று நான் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

(Deputy Speaker in the Chair.)

அதைப் போல இன்னும் விவசாயிகள் நல்ல முறையில் உணவுப்பொருள் களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்யலாம். நாம் எதிர்ப்பார்த்த அளவுக்கு நிலைமையை சமாளிக்கமுடியும் என்ற முறையில் அவர்களுக்கு வசதியாக இருப்பதற்கு பல நல்ல சிறிய நீர்ப்பாசன திட்டங்களை அரசாங்கம் பரிசீலனை செய்து தயாராக வைத்திருக்கிறது. அந்தத் திட்டங்களை காலம் கடத்தாமல் உடனடியாக நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும். அவர்களுக்கு தக்க சமயத்தில். உரம் முதலிய சாதனங்கள் கிடைப்பதற்கு வழிவகைகள் செய்யவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்

* **Sri K. SATTANATHA KARAYALAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நாட்டிலே மக்களைப் பாதிக்கக் கூடிய மிகப் பெரிய பிரச்னையாக இருப்பது உணவுப் பிரச்னை. கழிந்த சில மாதங்களாக உணவுப் பொருள் விலைக்கு கட்டுப்பாடு வந்தபிறகு, விலை ஏறுமுகமாகத் தான் இருந்துகொண்டிருக்கிறதே தவிர, இறங்குமுகமாக அல்ல. அறு வடை காலத்திலே விலை இறங்கும் என்பது சாதாரணமாக உள்ள நடை முறை. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் அப்படி நிகழவில்லை. விலைவாசி மேலும் ஏறிக்கொண்டே போகிறது. எனக்கு முன்பு பேசிய நண்பர் ஒருவர் குறிப்பிட்டதுபோல, ஒரு மூட்டை அரிசி 48, 50 ரூபாய் விற்கக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலைமை நீடிக்குமானால் மத்தியதர வகுப்பினர்களும், கடைக்கோடியிலே வாழ்க்கை நடத்துபவர் களும் எந்த நிலையிலே வாழ்க்கையை நடத்திக்கொண்டு போகமுடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தப் பிரச்னையில் இரு குரல்கள் எழுப்பப்படுகின்றன. ஒன்று, உற்பத்தியாளர்கள் அவர்களுக் குள்ள கவலையை குறிப்பிடுகிறார்கள். மற்றொன்று உபயோகப்படுத்துகிற வர்கள் அவர்களுக்கு இருக்கக்கூடிய சங்கடங்களை சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். நமது மாகாணத்தைப் பொறுத்தமட்டில், தங்களது சுய தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யக்கூடியவர்களின் குரல் மிகப் பெரிய குரலாக நாட்டிலே தெரிகிறது. அவர்களோடுகூட வியாபாரிகளும் ஒருங்கே சேர்ந்து கொண்டு எப்படியாவது "ஸ்டேட் ட்ரேடிங்", விலைவாசிக் கட்டுப்பாடு இவை களைத் தகர்த்துவிடவேண்டும் என்று நினைக்கிறார்கள். சர்க்காரைப் பொறு த்தமட்டிலே, திட்டவட்டமாக ஒரு கொள்கையை மேற்கொள்ளாமல், "ஹாப் ஹார்டெட்" ஆக ஏதோ செய்தோம் என்ற ஒரு முறையிலே ஒரு திட்டத்தை வகுக்கிறார்கள். அவர்கள் திட்டவட்டமாக ஒரு கொள்கையை கையாளவில்லை என்பது குறிப்பிடவேண்டிய விஷயம். ஏனென்றால், விலை வாசியை எப்பொழுது கட்டுப்பாடு செய்தோமோ, நியாயமான விலையை எப்பொழுது நிர்ணயம் செய்தோமோ, அதே நேரத்தில் அந்த விலைக்கு அப்பொருள்கள் மக்களுக்கு கிடைக்கச் செய்வது நமது கடமையாகும். ஆனால், இன்று அந்த விலைக்கு மக்களுக்கு கிடைப்பதில்லை என்று ஒருமுக மாக இந்தச் சபையிலுள்ள அங்கத்தினர்கள் பலரும் குறிப்பிட்டிருக்கிறார் கள். ஏன் கிடைக்கவில்லை? ஒன்று, உற்பத்தி செய்யக்கூடியவர்கள் அவர் களுக்கு கிடைக்கக் கூடிய விலை போதாது என்ற காரணத்தைக் கூறிக்

24th April 1959] [Sri K. Sattanatha Karayalar]

கொண்டு அவர்கள் பொருள்களை மார்கெட்டுக்கு கொண்டு வருவதில்லை. அதே நேரத்தில் மில் மூலம் ப்ரொக்யூர் செய்யவேண்டுமென்ற திட்டம் தங்களை பாதிக்கும் என்ற எண்ணத்தில் மில் முதலாளிகள் தாங்கள் எவ்வளவு உண்மையிலேயே வாங்குகிறார்களோ அதை காண்பிக்காமல் மறைக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவு. இந்த முறையில் இரு சாரர்களும் இந்த உணவுப் பிரச்னையை சமாளிப்பதற்கு எதிராக வேலை செய்கிறார்கள். நிலப் பிரபுத்துவத்தை இந்த நாட்டிலே ஒழிக்கவேண்டுமென்று திட்டம் போட்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில், அவரவர்கள் நிலத்தில் அவர்களே இறங்கிப் பாடுபட்டு சுய தேவையை பூர்த்தி செய்துகொள்ள வேண்டும், நிலத்திற்கு உச்சவரம்பு கட்டவேண்டும் என்ற நிலைமையிலுள்ள கால கட்டத்தில், நாம் ஒரு திட்டவட்டமாக ஒரு கொள்கையை வைத்து, விவசாய வருமானவரி கொடுக்க தகுதியுள்ள விவசாயிகளிடம் உபரியாக உள்ள, எல்லா நெல்லையும் கொள்முதல் செய்யவேண்டும், அந்த முறையில் ஒரு லெவி ஸிஸ்டம் ஏற்படுத்தி சுயதேவைக்கு அதிகமாக உள்ள பொருள்களை அவர்களிடமிருந்து ப்ரொக்யூர் செய்தால் மாத்திரம் தான் நாட்டில் இருக்கக் கூடிய நிலைமையை சமாளிக்க முடியும். அப்படி கொள்முதல் செய்து ஒவ்வொரு முக்கியமான நகரங்களிலும், முனிசிபாலிடிகளிலும், மேஜர் பஞ்சாயத்துகளிலும், தொழிலாளி வர்க்கம் அதிகமாக வாழக்கூடிய பகுதிகளிலும், இங்கெல்லாம் நியாயவிலைக் கடைகள் திறந்து மக்களுக்கு தேவையான தானியங்கள் குறைந்த விலைக்கு கிடைக்கச் செய்வது நமது கடமையாகும். அதைச் செய்தால்தான் இன்றைய விலைவாசி குறையும் விலைவாசி குறைய வேண்டுமென்றால் இம்மாதிரி ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அதிகத் தொகை கொடுத்து வாங்கக் கூடியவர்கள் இருப்பதினால்தான் விற்பவர்களும் அதற்கு என்று பொருள்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதிக விலைக்கு விற்பதற்கு முடியாத, சந்தர்ப்பம் கிடைக்காத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். ஏற்கனவே நாம் எதிர்பார்த்தபடி இன்றைக்கு கிட்டத்தட்ட நாட்டிலே ஒரு லட்சம் டன் தானியம் ப்ரொக்யூர் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தத் தானியத்தை வைத்துக்கொண்டு உடனடியாக எல்லா இடங்களிலும் நியாய விலைக் கடைகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு இருக்கக்கூடிய விலை உற்பத்தியாளர்களுக்கு கட்டுப்படியானதாக இல்லை என்று பல நண்பர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், என்னைப் பொறுத்தமட்டில, இந்த விலை அவர்களுக்கு ஒரு வேளை கட்டுப்படியாக இல்லை என்றாலும், வாங்கி உபயோகிக்கக்கூடிவர்களுக்கு இந்த விலைதான் கட்டுப்படியாகக் கூடிய விலை, நியாயமான விலை. இதை உயர்த்துவது சரியல்ல. நெல் விலையும் உயர்ந்தால் புல் விலை உயரும். அதேமாதிரி நெல் விலை குறைந்தால் புல் விலை குறையும் என்ற அடிப்படையில் நெல் விலை குறைந்தால் புண்ணாக்கு போன்ற சாதனங்களின் விலையும் குறையும். ஆனால் கொஞ்சம் நாள் ஆகும். சர்க்காரும் நீண்ட காலம் கடத்தாமல் இம்மாதிரி சாதனங்களின் விலையைக் குறைப்பதற்கு வேண்டிய திட்டவட்டமான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தால்தான், நன்மையாக இருக்கும்.

அடுத்தபடியாக, அரசாங்கம் உரம் போன்ற பொருள்களை விநியோகம் செய்வதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. உரத்தை உபயோகப்படுத்துபவர்களுக்கு அது சரியான முறையில் காலாகாலத்தில் கிடைக்கக் கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். விஞ்ஞான ரீதியிலே பல ஆராய்ச்சிகள் செய்து பூமியை பல தரங்களாகப் பிரித்து, இன்னென்ன தரத்திற்கு இன்னென்ன முறையில் உரம் இடவேண்டும் என்ற முறையில் சொல்லப்படுகிறது. ஆனால் அந்த ஆராய்ச்சி முறை சாதாரண விவசாயிகளுக்கு இன்னும் போய்ச் சேரவில்லை. அது அவர்களுக்கு போய்ச் சேரக்கூடிய முறையில் இந்த மாகாணத்தில் பல்வேறு பகுதிகளிலே உள்ள மண்

[Sri K. Sattanatha Karayalar] [24th April 1959

வளத்தை நல்ல முறையிலே பரிசீலனை செய்து (ஸாயில் டெஸ்ட் செய்து) என்னென்ன பூமிக்கு எந்த அளவு உரம் இடவேண்டும் என்பதை விவசாயி களுக்குச் சொல்லவேண்டும். அப்படி அவர்களுக்குச் சொல்லவில்லை யென்றால், அளவுக்கு மிஞ்சிய உரத்தை பூமியிலே பல இடங்களில் போடுகிறார்கள். ஆகவே, "ஸாயில் டெஸ்ட்" பரவலாக எல்லா இடங்க ளிலும் செய்வதற்குள்ள வழிவகைகளை ஏற்படுத்தவேண்டும். இப்பொழுதும் "ஸாயில் டெஸ்ட்" செய்வதற்குள்ள சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாக இருக் கின்றன. ஆண்டுக்கு 1,000, 1,500 டெஸ்டுகள்தான் செய்யலாம். இப்பொழுது நமது மாகாணத்திலுள்ள லேபரட்டரிகளை வைத்துக்கொண்டு. ஆகவே, "ஸாயில் டெஸ்ட்" செய்வதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு "மொபையில் யூனிட்" ஏற்படுத்தி, குறைந்த மலிவான கட்டணத்தை நிர்ணயம் செய்து, எங்கெல்லாம் "ஸாயில் டெஸ்ட்" தேவைப்படுகிறதோ, அங்கெல்லாம் செய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண் டும். எல்லா இடங்களிலும் மண் வளத்தைப் பரிசீலனை செய்து, தகுந்த ஆலோசனைகளை விவசாயிகளுக்குக் கூறுவது விவசாய இலாகாவின் முக்கிய மான கடமையாகும்.

அடுத்தபடியாக, மத்தியதர வகுப்பினரைச் சார்ந்த என். ஜி. ஓ. க்க ளுக்கு தேவையான பொருள்களை (எஸென்ஷியல் ஆர்டிக்ள்ஸ்) குறைந்த விலைக்கு, கட்டுபாட்டு விலைக்கு கிடைப்பதற்குள்ள வழிவகைகளைச் செய்ய வேண்டும். அதற்காக ஒவ்வொரு ஜில்லா தலைமையிடத்திலும் கூட்டுறவு சங்கங்களின் மூலம் அங்குள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் அத்தனை பேர்களுக்கும் தேவைப்படக்கூடிய அத்தனை பொருள்களும் குறிப்பாக அரிசி, எண்ணெ, பருப்பு இவைகள் நிர்ணயிக்கபட்டிருக்கக் கூடிய விலைக்கு கிடைப்பதற்கு உள்ள திட்டத்தை வகுத்து, அந்த முறை நிர்வகிக்கவேண்டும். சர்க்கார் "ஸ்டேட் டிரேட்டிங்" எடுத்த அதே கையிலே இந்தத் திட்டத்தை கொஞ்சம் கூட பரவலாக அமைத்துக்கொண்டு வந்தால் தான் இந்தப் பிரச்னையைச் சமாளிக்க முடியும். அது இல்லாதவரையில் காலதாமதம் செய்துகொண்டு போகப் போக, விலையும் ஏறுமுகமாக ஏறிக் கொண்டே இருக்குமே தவிர, வேறு எந்த நிலைமையும் ஏற்படாது.

அடுத்தபடியாக, நெல்லை ஜில்லாவில் செங்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அங்கிருந்து கேரளாவிற்கு அதிகமாக உணவுப் பொருள்கள் போய்க் கொண்டிருக்கிறது என்று பல நண்பர்கள் குறிப்பிட்டார்கள். அது அப்படி. அல்ல. இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இங்கிருந்து போவது மிகவும் கஷ்டமான காரியம். நீலகிரிக்கு எப்படி "காட் செக்ஷன்" வழி யாக வரவேண்டுமோ, அப்படித்தான் அங்கும் "காட் செக்ஷன்" வழியாக ஒரே ஒரு பாதை மூலம்தான் கேரளாவுக்கு நெல்லைக் கொண்டு செல்ல வேண்டும். எங்கள் செங்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் 18 ரைஸ் மில்கள் இருக்கின்றன. 18 ரைஸ் மில்களும் கழிந்த 3 மாதங்களாக எந்தவிதமான வேலையும் செய்யாமல் இருக்கின்றன. ஏனென்றால், அவர் கள் கள்ளக்கணக்கு காட்டமுடியாத ஒரு காரணம்தான். எவ்வளவு நெல் அறைத்தாலும், அறைத்த நெல்லை கோளாவுக்குத்தான் அனுப்ப வேண்டும். கேரளாவிற்கு அனுப்பும்பொழுது அங்கு ஒரு "செக் போஸ்ட்" இருக்கிறது. எவ்வளவு பொருள் எந்த மில்லினால் அனுப்பப்பட்டது என்பதற்கு அங்கே புள்ளிவிவரம் கிடைக்கும். அப்படிக் கொள்முதல் செய்த மொத்த தானியத்தில் அவர்கள் கிட்டத்தட்ட 75 சதவிகிதம் சர்க்காருக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் கொடுக்கவேண்டும்.

இதற்கு அஞ்சி அவர்கள் வியாபாரம் நடத்துவதையே விட்டு விட்டார்
2-50 கள். ஆனால் மற்ற மாவட்டங்களில் அப்படியல்ல, லோக்கல் கன்ஸ்ஸம் ஷனுக்கு கொடுப்பதாக சொல்லி கள்ளக் சணக்கு வைத்துக்கொள்ளமுடி யும். ஆகவே எங்கள் பகுதியிலிருந்து அதிகமாக கேரளத்திற்கு தான்யங்கள்

24th April 1959] [Sri K. Sattanatha Karayalar]

போய்க்கொண்டிருக்கிறது என்று சொல்வது சரியில்லை. முக்கியமாக பார்த்தால் எங்கள் வட்டாரத்திலிருந்து நெல் அதிகமாக ராமனுதபுரம் ஜில்லாவுக்குத்தான் போய்க்கொண்டிருக்கிறது. அங்கு அறுவடை மோசமாக இருக்கின்றது என்றும் சொல்லுகிருர்கள். அதன் காரணமாகத் தான் அங்கு அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். உண்மையில் கேரளத்தில் இருக்கின்ற நெல்விலையை எடுத்துக்கொண்டால் நம்முடைய ராஜ்யத்தில் இருக்கின்ற விலையை விட குறைவாக இருக்கிறது. காரணம் சர்க்காரே ஸப்ஸிடி கொடுத்து நியாய விலை கடைகளை ஏற்படுத்தி குறைந்த விலையில் தான்யங்களை விற்று வருகிருர்கள். ஆகவே நம்முடைய ராஜ்யத்திலும் எல்லா இடங்களிலும் குறைந்த விலையில் தான்யங்கள் கிடைப்பதற்கு நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri P. S. CHINNADURAI: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, எந்த ஒரு கொள்கையை சர்க்கார் ஏற்றுக்கொண்டாலும், அதை பூரணமாக ஏற்று எடுத்து நடத்தாவிட்டால் எந்த மாதிரியான சங்கடங்கள் ஏற்படும் என்பதற்கு நம்முடைய சர்க்காரின் உணவு நிலைமையின் மீது எடுத்துக்கொண்ட கொள்கை ஒரு சரியான உதாரணமாக இருக்கிறது. உணவு தான்யத்தை வாங்குவதை சர்க்கார் மேற்கொள்ளக்கூடாது என்றும் பலர் சொல்லி வருகிருர்கள், இதை சர்க்கார் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று சொல்லி அதை தடுப்பதற்கு பல முயற்சிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக இன்றைய தினம் நாட்டில் உணவு தானியங்களின் மீது இருக்கின்ற விலை கடுமையாகிக் கொண்டு வருகிறது என்பதை நான் வலியுறுத்திக்கூற ஆசைப்படுகிறேன். சுமார் இரண்டு லட்சம் டன் தான்யம் அரசாங்கம் கொள்முதல் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறது. ஆனல் இன்னும் அந்த இரண்டு லட்சம் தானியத்தை கொள்முதல் செய்ய முடியவில்லை. வரையறுக்கப் பட்ட அளவில் மூன்றில் ஒரு பங்கு என்ற முறையில் சுமார் 62 ஆயிரம் டன் தானியம்தான் அரசாங்கத்தால் இதுவரை கொள்முதல் செய்து கொள்ள முடிந்தது என்று தெரியவருகிறது. அரசாங்கத்தின் திட்டப்படி என் பூரா தான்யத்தையும் கொள்முதல் செய்து கொள்ள முடியவில்லை என்று தெரியவில்லை. இவ்விதம் அரசாங்க திட்டத்தின்படி கொள்முதல் செய்ய வேண்டிய அளவு தான்யத்தை கொள்முதல் செய்வதில் ஏற்படுகின்ற காலதாமதத்தின் காரணமாக உண்மையிலே பாதிக்கப்படுகின்றவர்கள், இந்த நாட்டிலுள்ள பொதுமக்கள்தான். ஒரு பக்கத்தில் சர்க்கார் 75 சதவிகிதம் தான்யத்தை ரைஸ் மில்களிலிருந்து கொள்முதல் செய்ய வேண்டும் என்று சொல்லியிருந்தும் அந்த முறையில் கொள்முதல் செய்து கொள்ள முடியவில்லை, ரைஸ்மில்களுக்கும் நெல் வருவதில்லை, அதனுல் கொடுக்க முடியவில்லை என்று அவர்களும் கூறுகின்றுர்கள். அப்படியென்றுல் இந்த நெல் எல்லாம் எங்கே பதுங்கி இருக்கிறது என்பதை அரசாங்கம் கண்டு பிடித்தாக வேண்டும். தாங்கள் கொள்முதல் செய்து அதில் 75 சத விகிதம் சர்க்காருக்கு கொடுக்கவேண்டியிருக்கிறது என்ற காரணத்திஞல் ரைஸ் மில்காரர்கள் தங்கள் தொழிலை நிறுத்தியிருக்கிருர்கள். அப்படியென்றுல் பதுங்கி கிடக்கும் நெல்லை கொள்முதல் செய்வதற்காக இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது? அல்லது இனிமேல் ரைஸ்மில்காரர்களிடமிருந்து கிடைக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதா என்றுதான் தெரியவில்லை. நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விலையின் காரணமாக ரைஸ்மில்காரர்கள் பாதிக்கப்படுகின்றுர்கள் என்று சொன்னுல் அதையும் அரசாங்கம் பரிசீலித்துப் பார்க்கவேண்டியதுதான். அதல்லாமல் இவ்விதமாக குறைந்த விலை கொடுத்து வாங்கி சர்க்காருக்கு தர முடியாது என்று நினைத்து ரைஸ்மில்காரர்கள் எல்லாம் தங்கள் தொழிலை நிறுத்திக்கொண்

[Sri P. S. Chinnadurai] [24th April 1959.

டிருப்பதை அரசாங்கம் அனுமதித்துக்கொண்டிருக்கலாம் என்று நினைக்கின் றதா என்றும் தெரியவில்லை. ஆகவே இம்மாதிரியே நிலைமை நீடித்துக் கொண்டு போகுமானால் இதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் யார் என்பதை நாம் பார்க்கவேண்டும். அதே சமயத்தில் இப்போது சர்க்காரால் நிர்ண யிக்கப்பட்டிருக்கும் விலை மிகவும் குறைவு, அதை அதிகப்படுத்தவேண்டும் என்று விவசாயிகளிடமிருந்து முறையீடுகள் வந்துகொண்டிருக்கின்றன, உண்மையிலேயே நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விலை குறைவாக இருந்தால் அதை அதிகப்படுத்துவதற்கு முடியுமா என்பதைப்பற்றியும் அரசாங்கம் ஆலோசனை செய்யவேண்டும். இப்போது நிர்ணயித்திருக்கும் விலையைக் கூட்ட வேண்டும் என்று நான் சொல்வதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. உண்மையிலேயே விவசாயிகள் கூறுகின்ற காரணத்தின்படி நெல் விலை மிக வும் குறைவு என்று அரசாங்கம் உணருமானால் சிறிதளவு நெல் விலையை உயர்த்தலாம். இன்றையதினம் கோயம்புத்தூர் ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அரசாங்கம் நிர்ணயித்திருக்கின்ற விலையிலிருந்து அதிகப்படி யாக மூட்டை ஒன்றுக்கு 10 அல்லது 15 ரூபாய் கொடுத்துத்தான் வாங்க வேண்டிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இவ்விதம், 10, 15 ரூபாய் அதிகவிலை கொடுத்து வாங்குவதற்குப் பதிலாக அரசாங்கமே இப்போது நிர்ணயித்திருக்கும் விலையில் கூடுதலாக ஒன்றிரண்டு ரூபாய் அதிகப்படுத் தினால் என்ன கெட்டுவிடும் என்று அரசாங்கத்தை கேட்க விரும்புகிறேன். ஆகவே விவசாயிகளின் முறையீட்டில் நியாயமிருக்கும் என்று அரசாங்கம் உணருமானால் நிச்சயமாக இப்போது நிர்ணயித்திருக்கும் விலையை அதிகப் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் நாட்டி லுள்ள மக்கள் வெளியில் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப் பந்தம் ஏற்படும். முக்கியமாக தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்ற நகரங்களிலும், இதர தொழிலாளர்கள் வசிக்கும் பிராந்தியங்களிலும் அங் குள்ள தொழிலாளர்கள் படுகின்ற துன்பங்களை சொல்லி முடியாது. அவர் கள் ஆங்காங்கு இருக்கின்ற ஸொஸைட்டிகள் மூலம் தான்யங்களை வாங்க வேண்டியிருக்கிறது. அந்த ஸொஸைட்டிகளுக்கு எல்லாம் தான்யங்கள் மத்திய கூட்டுறவு ஸ்தாபனத்திலிருந்து வரவேண்டும். அந்த முறையில் தொழிலாளர்கள் பிராந்தியங்களில் இருக்கும் ஸொஸைட்டிகளுக்குப்போதிய அளவு தான்யங்களை சப்ளை செய்ய மத்திய சங்கத்தால் முடிவதில்லை. ஒரு பிராந்தியத்தில் இருக்கின்ற ஸொஸைட்டிக்கு வேண்டிய அளவில் ஆறில் ஒரு பங்கோ அல்லது எட்டில் ஒரு பங்கோதான் கிடைக்கின்றது. இதைப்பற்றி சென்ற வாரத்தில் கோயம்புத்தூர் ஜில்லா கலெக்டர் அவர் களிடம் தெரிவித்தோம். நடைமுறையில் இதற்கு எந்தவிதமான நட வடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. உதாரணமாக ஒரு ஸொஸைட்டிக்கு 500 மூட்டை வேண்டுமென்றால் 50 அல்லது 60 மூட்டைதான் கொடுக்கப்படுகிறது. இதனால் தொழிலாளர்களுக்கு போதிய அளவு தானி யங்கள் கிடைப்பதில்லை. இவ்விதம் இருக்கின்ற நிலைமையில் தொழி லாளர்கள் தங்கள் வேலைகளைப் பார்க்கப் போவார்களா அல்லது அரிசியை வாங்குவதற்கு போவார்களா அல்லது அரிசி கொடுப்பது போதாது என்று சொல்லி ஆர்ப்பாட்டம் நடத்துவார்களா ? இதில் இந்த அரசாங்கம் எதை விரும்புகிறது ? தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்துகின்ற சமயத்தில் அந்த பிராந்தியத்தில் இருக்கும் அரசியல் கட்சிகள் ஏதாவது சம்பந்தப் பட்டால் அதற்கும் ஏதாவது அரசாங்கம் சொல்ல ஆரம்பித்துவிடுகிறது. மலைப்பிரதேசங்களிலிருக்கும் தொழிலாளர்களுடைய நிலைமையும் இதே விதத்தில்தான் இருந்துகொண்டிருக்கிறது. அவர்களுடைய குறைகளை பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே இவ்விதம் தொழிலாளர் கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற சமயத்தில் நாம் வெறும் சட்டங்களை மட்டும் பேசிக்கொண்டு இருந்தால் தொழிலாளர்களின் கதி என்னவாகும் என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அரசாங்கம் உண்மையிலேயே ரைஸ் மில்காரர்களிடமிருந்து

24th April 1959] [Sri P. S. Chinnadurai]

75 சதமானம் தான்யங்களை வாங்குவதற்குப் பதிலாக, தானியங்களை கொள்முதல் செய்வதற்காக அவர்களையே ஏஜென்ஸிகளாக நியமித்திருக்கவேண்டும். அவ்விதம் ரைஸ்மில்காரர்களை ஏஜென்ஸிகளாக நியமித்து விலையையும் கட்டுப்படுத்தி அவர்கள் மூலமாக கொள்முதல் செய்வதற்காக, அவர்களுக்கு கமிஷன் கொடுப்பது என்கின்ற முறையில் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருந்தால் தான்யங்களை கொள்முதல் செய்கின்ற கொள்கை வெற்றிகரமாக நடந்திருக்க முடியும். இனிமேலாவது இந்த முறையில் ஏதாவது நடவடிக்கைகளை எடுக்க முடியுமா என்பதைப்பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் நாட்டிலுள்ள தொழிலாளி மக்கள், நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதை அரசாங்கம் கவனிக்காமல் விட்டுக்கொண்டிருந்தால் இதன் காரணமாக கிளர்ச்சிகள் ஏற்படுவதைப்பார்த்து பின்னால் வருந்துவதில் எந்தவிதமான லாபமும் இல்லை. அதோடு அரசியல் கட்சிகள் இதில் தலையிட்டு லாபம் சம்பாதிக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுவதிலும் பயனில்லை. எங்களைப் பொறுத்தவரையில் உணவுப் பிரச்னை என்பது தேசீய பிரச்னையாகவே கருத வேண்டும. அந்த முறையில் கட்சி வேறுபாடு இல்லாமல், எல்லா மக்களுக்கும் நல்ல முறையில் தான்யங்கள் கிடைக்கக்கூடிய வழியில் வேலை செய்யவேண்டும். கேரளத்திற்கு அரிசி அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்பது சர்க்காருக்கு தெரிந்திருந்தாலும், அதிலும் இவ்வளவு போய்க்கொண்டிருக்கிறது என்ற நிர்ணயம் சர்க்காருக்கு இருக்கவேண்டும். தனிப்பட்ட முறையில் கேரளத்திற்கு அரிசி போவதைவிட ராஜ்ய சர்க்கார்கள் மூலமாகவே போவது நல்லது என்று கருதுகின்றேன். நம்முடைய ராஜ்யத்தின் கதவுகள் கேரள ராஜ்யத்தின் வேண்டுகோளுக்கு இணங்கி அரிசி கொண்டு போவதற்கு திறந்து கொடுப்பதற்கு தயாராக இருக்கக் கூடிய நிலையில் இருக்கவேண்டும்.

கடைசியாக ஒரு வார்த்தை. நாம் வாங்குகிற தானியத்தைச் சரியான 3 p.m.
படி பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். சரியானபடி பத்திரப்படுத்தி வைக்காவிட்டால், சில காலத்திற்கு முன் மத்திய சர்க்கார் கிடங்குகளிலேயிருந்து கெட்டுப்போன அரிசியை மிக மோசமான விலைக்கு விற்றார்களே, அம்மாதிரி கேடான சூழ்நிலை நமக்கு ஏற்படக்கூடாது. பத்து கோடி ரூபாய் வரையில் இதிலே ஈடுபடுத்துகிறோம். பத்து கோடி ரூபாய்க்கு வாங்கி வைக்கும் அரிசி சரியானபடி பாதுகாக்கப்படாமல் பின்னால் கெட்டுப் போய்விட்டது என்ற நிலைமை ஏற்பட்டால் அது ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்காது என்று இன்றைக்கே நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். அரசாங்கம் வியாபாரிகளோடு கலந்து ஆலோசித்து, எந்த முறையில் அதைப் பத்திரப்படுத்தவேண்டும் என்று நன்றாக ஆராய்ந்து, அந்த முறையில் அரசாங்கம் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும், அதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் வேண்டிக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

* Sri R. SRINIVASA IYER : Sir, we are discussing the Food policy of the Government. No party is satisfied with the policy that is followed. The public are not satisfied, the producer is not satisfied, and the merchant also is not satisfied. I expected constructive proposals from the previous speakers, and I am yet to find any. We have got 57·25 lakhs acres of wet lands in which paddy is grown. In this State, production is 31·96 lakhs tons of rice. We have at the same time 54 lakhs of acres under millets. The population is increasing. Along with this the population that is taking to rice is increasing. Who takes cholam or ragi or cumbu

[Sri R. Srinivasa Iyer] [24th April 1959

as was being done ten years ago? We have got to take this into consideration. We have rushed into this policy in the midst of the season, after a major portion of paddy had been sold out. In the middle of last year, the Ashok Mehta Committee report was published. As soon as I learnt that the Government of India would fix prices for the agricultural produce, I started correspondence in September last, and have been writing to this Government and the Central Goveirnent that the price of at least paddy must be fixed in consonance with the cost of production. It cannot be gainsaid that if we take the 1939 cost of production as Rs. 100, the cost of production now is Rs. 200. I have given figures to the Food Advisory Committee that the cost of cultivation now, without using even a pound of fertiliser, is Rs. 200 per acre. What can the producer get? My friend Sri Lazar has stated that the cost of production has gone up and that this had not been properly taken into consideration. When the Central Government wanted to fix the price, they did not take into consideration the increased cost of production. The cost of production in 1958–59 is different from that in 1956–57. It has risen at least by ten or twelve per cent. The price that is fixed to-day is the price that was prevailing in 1956–57.

Sir, this zonal system has been functioning for a time for certain purposes. There is no Act nor there is any rule by which this zonal system can be forced upon us or continued in spite of our difficulties. When was this price fixed? Why was it fixed? What is the total qunatity of production that we have? What is our need of rice? What is the population of Kerala, and what is their need? Are the figures given by Kerala State correct? Somebody will have to verify them and find out the real need of Kerala.

SRI N. K. PALANISAMI : Sir, I rise on a point of order. Is it in order for an hon. Member to say that the figures given by another State must be verified.

DEPUTY SPEAKER : There is nothing wrong.

* SRI R. SRINIVASA IYER : Sir, I have not stated that the figures are not correct. I have stated that we have to verify them. We have also got to know who is to supply Kerala, and how much we have to supply. It is said that we have got a surplus of ten lakhs tons of rice available for sale. We find the price of rice is increasing. The Government have got a duty both to the producer and also the consumer. Nearly twenty per cent of the population, who live in cities and towns, have got to be supplied rice, and the price of rice in their case has got to be controlled. We have got to give them rice at reasonable rates. At the same time we have got to consider that every commodity required by the producer has increased in price. Let alone all commodities. Even the

24th April 1959] [Sri R. Srinivasa Iyer]

wherewithal which he has got to get on everyday, has increased in price. In Salem and Chittoor districts, there was no yield of tamarind this year. The Mysore people have taken away all the available tamarind from Chittoor. This is what I find from the papers. We have got to take all these into consideration. At the same time we have got to think of how to get out of the zone. It is stated that there is a certain kind of rice in our State, which is not consumed here. When there is the need we have got to consume everything. What did we eat during war time? We were eating Burma rice, which was not previously used by anyone. When the need arises, and when our needs cannot be met by the production here, whatever quality of rice is produced, we will have to eat that rice. Our poor people will pay for it at the lower rate and eat it. I agree that Kuruvai produce in Tanjore district particularly is being taken away by Kerala. But we did not calculate all these things particularly before we rushed to fix the prices. Now there is the complaint by the merchants. I will tell the House what exactly is happening. Fifty per cent of the paddy that is purchased by the merchants should be handed over to the Government. The balance he sells as he likes, to whomsoever he likes, to Kerala merchants and makes large profits. Who is the producer? Where is his stock? How does he stock paddy for six months? We have to consider all this. Can the Government stock paddy for six months in the same manner in which the purchaser stocks it? The producer stocks the paddy for several months in bins made of straw which stands the weather well. There is also the question of aeration. Where is the Government or purchaser going to stock the paddy? Government have no godowns fit enough to stock rice or paddy. Hon. Members who spoke earlier have complained that the rice sold by the miller is bad in quality. It cannot stand being kept in the godown for even fifteen days. If fifteen bags are stored one above another in ago down, possibly the last bag would have gone loose to about four inches thick by crushing. It gets damaged and crushed. It is said that the rice sold in fair price shops is not good. This is true. In Tirunelveli, the District Co-operative Society refused to take paddy from the millers in Tanjore, because the rice was not equal to the sample. This is what happens. The merchants are complaining now against the producers because of two things. The margin that is given to them now is far more than they were getting when ration rules were in force—during the war. Even with this margin they are not satisfied. Government take 75 per cent of the purchase by the miller and leave 25 per cent. This extra 25 per cent they want to sell at very heavy prices—Rs. 4 to Rs. 6 more per bag of rice to all merchants who come from other States. The hon. Member Sri Palanisami will take me to task if I say that merchants from Kerala come and purchase the stock. People from other States come and purchase rice. There is no voucher, and this 25 per cent

[Sri R. Srinivasa Iyer] [24th April 1959

extra rice allowed to them is being sold at very high prices by the merchants. One suggestion I would make here. The Zonal Council may say 'You cannot prevent rice from going to other States—neighbouring States within the zone'. I ask, 'Why not these merchants sell this 25 per cent at fair prices within this State itself?'. The chowki system is not being worked properly. There is a lot of complaint that the chowkidars are not doing their duties properly. These chowkidars are, after all, petty officers. Therefore, there may be complaints against them, and such complaints are bound to be made. But the rice that is going out of the Tanjore district does not fully come into account. That is another point for consideration.

Sir, I am glad that the Hon. Minister has constituted a Food Advisory Committee. We have had two meetings. And the third meeting is going to be held on the 1st May 1959 at Coimbatore. I hope that the discussion we are having here will enable us to evolve a proper system which would avoid complaints from all quarters and all parties. Because there was a proposal to fix the price of rice, and also because the people knew the price fixed will be less, most of the producers sold all the stocks immediately after harvest. The Government Order came on the 28th February. By that time, most of the harvest was over, and most of the paddy was sold. There is no hoarding by the producer. How and where can the producer hoard paddy? He cannot hoard it in boxes or in his pockets. He has got to keep it only outside his house. It has got to be sold. A moment's scrutiny will show whether the producer has got paddy. His requirements can be easily calculated. The merchants complain that because these producers are not selling the small extra that they have got, they are not able to make the extra profit, which they hope to get from outsiders who purchase. Purchase receipts are made at the controlled rates, but the extra price is paid. I know, as a matter of fact, that this is what is happening.

There is the cry that mills have been closed. Why? Is this a correct picture? You should get at correct statistics and find out what is wrong.

I want to make one constructive suggestion in this connection. If the Government want to control the price of paddy and also if they want to have sufficient stocks of paddy, even in the beginning of the harvest season, they should call for tenders. Let them say that they want, for instance 2½ lakhs tons of paddy or a particular quantity of rice as the case may be. Let them say that any merchant or dealer may submit his tender within a particular time and let them also be told that they will have to deliver the paddy or rice within a particular time at a particular price. When this

24th April 1959] [Sri R. Srinivasa Iyer]

is done and when the Government get sufficient stocks to meet their requirements, they can have their fair price shops and all those things. That is my respectful submission.

My second suggestion is this. Even before the harvest begins, the Government may fix the price and introduce a sort of levy system. They may say that so many bags of paddy per acre—say two bags per acre—should be delivered to the Government. If this is done, within the harvest season itself—within 28th February or so—they could have the required quantities and much more. If they were able to procure the required quantities of paddy or rice as the case may be, they could very well satisfy the consumers in cities and towns who are clamouring about high prices. Only about 15 to 20 per cent of the population purchase rice. The others—agricultural workers, harvesters and others—are paid in kind, that is, they get paddy or rice for wages. So, they do not care about these prices of paddy or rice. They care more for the prices of chillies, tamarind and other commodities of daily necessity. We will have to control the price of other articles of daily necessity which are required by the producers, I mean, agriculturists. Then only, we will be able to keep down the prices of all articles. The slogan that, 'if the price of rice goes down, the price of all other articles will go down' is wholly wrong. When the price of all other articles is high, it is not proper to expect the producer of paddy to lower his price in the hope that the price of other articles which he requires very badly will in due course come down, in future years. We have learnt by experience that the system of control which was in vogue for some years in this State, did not work satisfactorily and properly. Therefore, we had given up control. During the war years we had rationing and control. As that system did not work well, we had lifted the controls and we had derationed. We know how the public were glad at the lifting of the controls in those days when they were lifted. Therefore, I wish to point out that the haphazard and hurried order in the middle of the season and the various changing orders issued from day to day and the cry of the millers that they do not get enough paddy for milling, as they were not able to make huge profits, are the reasons for this clamour and for this complaint from all quarters. from the consumers and other people. Thank you, Sir.

Sri M. S. SELVARAJAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பிரஸ்தாபத்தில் இருக்கும் உணவு விஷயம் இந்த ராஜ்யத்திற்கு மாத்திரம் தனிமையானது அல்ல. தேசம் முழுமையிலும் இருக்கக்கூடிய நிலைமை நம்மையும் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. தேசத்தில் இருக்கும் நிலையை உத்தேசித்து இந்த ராஜ்யத்தையும் இணைத்து, தென் பகுதியில் இருக்கும் மற்றும் சில ராஜ்யங்களோடு ஸோனல் ஸிஸ்டம் அமுலில் கொண்டுவர அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. ஸோனல் ஸிஸ்டம் அமுலில் நடத்தப்படுவதினால் அது ஒன்றைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. மைசூர் போன்ற ராஜ்யம் தந்நிறைவுகொண்டதாகயிருக்க, ஆந்திரப்பிரதேசம் எல்லை மீறிய உற்பத்தி செய்ய, கேரளம் தேவையில் இருக்க, நாம்

[Sri M. S. Selvarajan] [24th April 1959

ஓரளவுக்கு கொடுக்கவும் வாங்கவும் இருக்கக்கூடிய நிலையில் இருக்கிறோம். இந்த நிலையில் ஸோனல் ஸிஸ்டம் தவிர்க்கமுடியாதது என்று நம் மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

நம்முடைய ராஜ்யத்தைப் பொருத்தமட்டில், மிகவும் நாணயமான அளவிலே நாம் நடந்துகொள்வதற்கு முயற்சிக்கிறதுதான் நம்முடைய குற்றம். அதுதான் இந்த ராஜ்யத்தின் கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் என்று சொல்லக்கூடிய நிலையில் ஆந்திர ராஜ்யத்திலே எல்லை மீறிய அளவுக்கு உற்பத்தி பெருகியிருந்தாலும்கூட, அரசாங்கம் தன்னுடைய பொறுப்பை, தங்களுக்கு நியாய பூர்வமாக இருக்கும் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்கு முயற்சிக்கிறதை நாம் பார்த்து வருகிறோம். நடைமுறையில் நமக்குக் கிடைக்கவேண்டிய உணவுப் பொருள் தகுந்த விதமாக, தக்க நிலையில் நம்முடைய கைக்கு வந்து சேரக்கூடாத அளவுக்கு ஆந்திர அரசாங்கம் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறது என்று எண்ணக்கூடிய அளவுக்கு நமக்குத் தேவையான உணவுப் பொருள் நமக்கு வந்து சேரவில்லை. அந்த நிலையிலேகூட, மிகவும் நாணயமான முறையில் நாம் யாருக்குக் கொடுத்து உதவக்கூடுமோ அவர்களுக்குக் கொடுக்கத் தயங்காத நிலையில் கேரளா வானது நம்மிடமிருந்து பறித்துச் செல்கிறது.

இந்த நிலையை எண்ணிப் பார்க்கும்போது, அரசாங்கத்தின் குறிக்கோள் நிச்சயமாக உணவுப் பொருள்களின் விலை எல்லை மீறிய அளவுக்கு ஏருமல் தடுத்துவிடமுடியும். ஜனங்களுக்கு நியாயமான அளவுக்கு விநியோகிப்பதற்கு முடியும் என்பது. அதற்காகத்தான் இந்தத் திட்டம் என்று அரசாங்கம் யோசித்து இந்த முடிவுக்கு வந்தது. மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் கூட இதுபோன்ற விஷயத்தில் அதிகமாக யோசித்துத்தான் இந்த முடிவு செய்தது. ஆனாலும்கூட, இன்றைய நிலையில் அந்தக் குறிக்கோள் நிறைவேறவில்லை. ஜனங்களுக்குத் தேவையான அளவுக்கு, தகுந்த கிரயத்தில் கிடைக்கவில்லை. வாங்கி உபயோகிப்போருக்கு இருக்கும் கஷ்டம் தவிர்க்கமுடியாததாகிவிட்டது. அதைத் தவிர்ப்பதற்காகத்தான் இந்தத் திட்டம் என்று சொன்னால், அந்தத் திட்டம் எதற்காக போடப்பட்டதோ அந்தத் திட்டத்தின் பலன் உண்மையிலேயே கிடைக்கவில்லை, அந்தத் திட்டம் தோற்றுவிட்டது என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்றையதினம் இந்த அமைப்பு இருக்கிறது. எந்த இடத்தில் கோளாறு இருக்கிறது என்பதை ராஜ்ய அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் யோசிக்கவேண்டிய கட்டத்தில் இருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் நமக்கு என்று தனியாக ஒரு திட்டத்தை ஏன் தீட்ட முடியாது என்று எண்ணக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறோம். இந்த ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில், மத்திய அரசாங்கத்தில் இன்றிருக்கும் நிலையை மாற்றி அமைக்கவேண்டும். இந்தத் திட்டத்தில் கோளாறு இருக்கிறது என்று இந்த ராஜ்ய அரசாங்கம் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்திருப்பதாக நாங்களெல்லாம் நினைக்கிறோம். என்றாலும்கூட, மத்திய அரசாங்கம் இந்த ராஜ்யத்தினுடைய நியாயமான கோரிக்கைக்குச் செவி கொடுக்க மறுத்தால் உண்மையிலேயே இதைவிட பெரிய பிரச்னை இன்றைய நிலையில் இந்த அரசாங்கத்திற்கு இருக்க முடியாது. இனியும் இருப்பதற்கில்லை. இந்த தேசத்தில் வேறுசில பகுதிகளில் இருக்கும் நிலைமையைப் பார்க்கும்போது, நம்முடைய ராஜ்யத்தை எதிர்நோக்கியிருக்கும் அளவு அவ்வளவு கஷ்டமான நிலை மற்ற இடங்களில் இல்லை என்று சொல்லத் தோன்றுகிறது. அந்தந்த ராஜ்யத்தில் விசேஷ ஏற்பாடு இருக்கிறது. விசேஷ முறைகளை எடுத்துச் சொன்னால், சிந்திக்கும்படியான நிலையில் இருக்கிறது. இந்த நிலையை மாற்றியமைக்க, இந்த ராஜ்யத்தினுடைய பிரச்னை, உணவுப் பொருளைப் பொறுத்தமட்டில் தன்னந்தனியாக இருந்து இந்த ராஜ்யத்தின் மூன்று கோடி மக்களுக்கும் நியாய பூர்வமான அளவுக்கு அப்பீல் செய்து, இந்த ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கும் கொந்த

24th April 1959] [Sri M. S. Selvarajan]

ளிப்புக்கு உரிய நிலையிலே, மனதில் பதியக்கூடிய அளவுக்கு விற்கிறவர்களுக்கும், விவசாயிகளுக்கும், வாங்கி உபயோகிப்பவர்களுக்கும் அவர்களுக்கு நம்முடைய நிலையை சவிஸ்தாரமாக எடுத்துக்காட்டி, இந்த ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கும் கஷ்ட நிலையைத் தவிர்த்துக்கொள்வதற்கு நாம் தனியாக நின்று நம்முடைய காரியங்களைத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்கக் கூடிய கட்டத்தில் வந்திருக்கிறோம். இந்த ராஜ்யத்தில் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ராஜ்ய அரசாங்கத்தோடு ஒத்துழைத்து மத்திய அரசாங்கத்திற்கு ஒன்றுபட்ட குரலில் இடித்துச் சொல்லக்கூடிய விஷயங்களை இடித்துச் சொல்லக்கூடிய நேரத்தில் இடித்துச் சொல்லி, இந்தத் திட்டத்தில் இருக்கும் கோளாறைத் தக்கவிதமாகத் தெரிவித்து தனியாக நின்று நம்முடைய ராஜ்யத்தின் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ராஜ்யம் இன்றையதினம் ஒரு சிக்கலில் இருக்கிறது. இதை மேற்கொண்டு தொடர்ந்து இன்றையதினம் இருக்கும் நிலையிலே இத்தகைய சிக்கலை முற்றிலும் தீர்ப்பதற்கு எந்த அளவு தீர்த்துக்கொள்ளலாம் என்று பல்வேறு அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டன. எனக்குத் தெரிந்தமட்டில் ரைஸ் மில் டீலர்ஸ் நோட்டீஸ் கிடைத்த நேரத்தில் தங்கள் கையில் இருக்கும் ஸ்டாக்கைப்பற்றி தெரிவிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அந்த ஸ்டாக் தெரிவிக்கப்பட்டவுடனே, அநேகமாக அவர்களிடத்தில் கொள்முதல் செய்ய முடியவில்லை. அவர்களுக்குத் தேவையான காலத்தில் அவர்கள் தெரியப்படுத்தின சில நாட்களுக்குள்ளே பணம் அவர்கள் கையில் வந்து சேருவதில்லை. அவர்கள் சரக்கை வாங்கி பலகாலம் வைத்திருக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அரிசியாகக் கொள்முதல் செய்வதில் நல்ல அரிசியாகக் கிடைக்காமல் சுகாதாரக் கோளாறான அரிசி வாங்கக்கூடிய துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது. இதை மாற்றியமைத்து நெல்லாகக் கொள்முதல் செய்ய முடியுமா என்று பார்க்கவேண்டும். இன்றையதினம் கனம் அங்கத்தினர் திரு. ஸ்ரீனிவாச அய்யர், ஏன் ஒரு விளம்பரப்படுத்தி நெல்லை வாங்குவதற்கு முடியாது என்று கேட்டார்கள். இன்றையதினம்கூட விளம்பரம் இருக்கிறது. யார் நினைத்தாலும் ரைஸ் மில்காரர்கள் மூலமாக அரசாங்கத்திற்குக் கொடுக்கலாம். நேரடியாகவும் கொடுக்கலாம். கொடுக்கும் அளவு விலை வீழ்ச்சி இல்லை. 50 ரூபாய்க்கு மூட்டையை வாங்கி 38 ரூபாய்க்கு யாரும் சப்ளை செய்வதற்கு வரமாட்டார்கள். அரிசியாக சப்ளை செய்வதில் இருக்கும் அனுகூலம் அவர்களுக்குக் கிடைக்கிறது. அதில் கிடைக்கும் ஆதாயத்தை மறுப்பதற்கில்லை. மில்லர்கள் அரிசி சப்ளையின் ஆதாயத்தைப் பயன்படுத்தும் நிலையில்தான் ஓரளவுக்கு சர்க்காருக்கு அரிசி கிடைக்கிறது. நெல்லானால் இத்தகைய நிலைமைகூட இருந்திருக்க முடியாது. இரண்டு லட்சம் டன் எந்த அளவு கொள்முதல் செய்யவேண்டுமென்று திட்டமிட்டு, அதைச் செய்ய முடியவில்லை, கோளாறு இருக்கிறது என்பதை நம்மால் தெரிந்துகொள்ள முடிகிறது. திட்டப்படி நம்மால் நிறைவேற்றமுடியவில்லை. இன்றைய தினம் அதிகமான விளைவு ஏற்பட்டாலும் பருவகாலத்தில்கூட கொள்முதல் செய்ய முடியவில்லை என்றால், எந்த அளவு நம்முடைய இலக்கை நாம் அடைய முடியும் என்று யோசிக்கவேண்டியிருக்கிறது. இந்த ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில், அரிசியை உணவாக உபயோகித்து வருகிறோம். சிலர் கோதுமை, இதர தான்யங்கள் உபயோகிப்பதை விடுத்துக்கூட அரிசியை உபயோகிக்கக்கூடிய அளவுக்கு மாற்றம் ஏற்பட்டு வருகிறது. ஜனங்களும் ஓரளவுக்கு தக்கவிதமாக பத்து வருஷ காலத்திற்குள்ளாக சக்தியில் வளர்ச்சியடைந்திருப்பதன் மூலமாக அரிசியை அதிகமாகக்கூட அருந்துகிறார்கள். ஆகவே அரிசித்தேவை மேலும் அதிகப்பட்டிருக்கிறது. கனடா தேசத்தில் இருக்கக்கூடியவர்கள் தங்களுக்கு இருக்கும் மிச்ச உணவை இந்த நாட்டுக்கு இலவசமாகக் கொடுப்பதற்கு முன்வந்தாலும்கூட, அவற்றை ஏற்றி வருவதற்கான வாடகைப் பணத்தை நாம் கொடுக்க முடியுமா என்று கவனிக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறோம்,

[Sri M. S. Selvarajan] [24th April 1959

ஆகவே இதை சமாளிக்க எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், நாம் அவர்களிடமிருந்து உணவுப்பொருள்களை வாங்கிவருவதுபோல் நாமும் அவர்களுக்கு நம்முடைய கைத்தறித் துணியை அனுப்பி வைக்கலாம். கதர் போன்றவைகளையும் அனுப்பி வைக்கலாம். அவைகளை அனுப்பி எந்த அளவுக்கு அவர்களுக்கு நாம் விலை சலுகை காட்ட முடியுமோ அந்த அளவுக்கு சலுகை காட்டலாம். அதற்கு வேண்டிய ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும். அந்த அளவுக்கு மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் யோசனை சொல்லி வேறு நாடுகளுக்கு நமது நாட்டிலுள்ள கைத்தறி, கதர்த்துணிகளை அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும். அதன் மூலமாக நமக்கு வேண்டிய அந்நியச் செலாவணியைப் பெருக்கிக்கொள்ளலாம். உணவு தரும் நாடுகளுக்கு இலவசமாகக் கூட கொடுக்க முன் வரலாம். அவர்கள் நமக்கு இலவசமாகக் கொடுக்கக்கூடிய அளவில் அவர்களுக்கு நாம் கொடுக்க முன் வரலாம். இதில் ஏற்படும் பண நஷ்டத்தை மத்திய அரசாங்கம் பொறுத்துக்கொள்ளலாம். இதன் மூலம் நமது நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய பயங்கர நிலையைப் போக்கிக்கொள்ளலாம். நமது நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய உணவு நெருக்கடியைப் பார்த்தால் அது ரொம்பவும் பயங்கரமாக இருக்கிறது. இன்னும் அதிகப் படியான நெருக்கடி ஏற்படுவதற்கு எதிர் நோக்கி இருக்கிறது. இது ஒரு முக்கியமான பிரச்னை. இதைத் தீர்க்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இப்படிப்பட்ட பயங்கர நெருக்கடியைப் போக்க எந்த அளவு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அந்த அளவு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பணியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Sri N. K. PALANISAMI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் அரிசியின் விலை விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிறது. விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நடவடிக்கை எடுத்துக்கொண்டு மூன்று மாத காலமாகிறது. இந்த மூன்று மாத காலத்தில் விலைவாசி எந்த அளவில் குறைந்திருக்கிறது. போன பிப்ரவரி மாதம் விலைவாசி புள்ளி விவரத்தைப் பார்த்தால் கிட்டத்தட்ட 417-ஆக இருந்தது. ஆனால் இப்பொழுது ஒரு வருஷமான பிறகு பார்த்தால் இந்த பிப்ரவரி மாதம் 419 ஆக இருக்கிறது. கண்ட்ரோல் ஆரம்ப காலத்தில் ஒரு மூட்டை அரிசி 37½ ரூபாயாக விற்கப்பட்டது. ஆனால் இன்றையதினம் அதன் விலை 48 ரூபாயாக இருக்கிறது. இன்னும் ஐம்பது ரூபாய்க்குக்கூட விற்கப்படுகிறது. கட்டுப்பாட்டுக்கு முன்னதாக படி அரிசி 15 அணு முதற்கொண்டு 1–1–0 வரை விற்கப்பட்டது. ஆனால் இன்றையதினம் 1–5–0 ஆக விற்கப்படுகிறது. தஞ்சை குண்டு சம்பா புழுங்கல் அரிசி படி ஒன்றுக்கு 14 அணுவாக விற்கப்பட்டது. ஆனால் இன்றைய தினம்அதன் விலை ரூ. 1–3–0 ஆக விற்கப்படுகிறது. இப்பொழுது விற்கப்படுகிற விலையைப் பார்த்தால் பச்சை அரிசிக்கும் புழுங்கல் அரிசிக்கும் அதிகப்படியான வித்யாசம் இருப்பதாகவே இல்லை. வித்யாசம் 2½ அல்லது மூன்று அணுக்கள்தான் இருக்கிறது. ஆகவே சர்க்கார் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று எடுத்துக்கொண்ட நடவடிக்கை தோல்வி அடைந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். விலையைக் குறைக்க வேண்டும் என்று எடுத்துக் கொண்ட நடவடிக்கை தோல்வி அடைந்துவிட்டது. அதற்குக் காரணம் கேரள ராஜ்யத்திற்கு அரிசி போகிறது என்றும், ஆந்திராவிலிருந்து இங்கு அரிசி வரவில்லை என்றும் சொல்லப்படுகிறது. மார்க்கெட்டில் பத்து லட்சம் டன் சர்ப்ளஸ் இருந்தும் கூட கேரளாவிற்கு இரண்டு லட்சம் அரிசி போனாலும் கூட இங்கு எட்டு லட்சம் டன் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி இருந்தும் அரசாங்கத்தாரால் இரண்டு லட்சம் டன் கூட சேகரிக்க முடியவில்லை. ஆனால் பதுக்கல் இல்லை என்றும் சொல்லுகிறார்கள். அப்படி இருந்தும் விலைவாசி என் குறையவில்லை? விலை இறங்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன? ஜோனல் சிஸ்டம் பல இடங்களில்

ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இது இங்கே சரியாக வேலை செய்யவில்லை என்றும் அதை எடுத்து விட வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். ஒரு சர்ப்பிளஸ் மாகாணத்தை வைத்துக்கொண்டு சோனல் சிஸ்டம் அமைத்திருக்கிறார்கள். டெபிசிட்டாக இருக்கக்கூடிய இடத்திற்கு அதிகப்படியாக இருக்கக்கூடிய இடத்திலிருந்து போகலாம் என்று அமைத்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் ப்ரோக்யூர் செய்ய வேண்டும் என்ற ஒப்பந்தமும் ஏற்பட்டது. அதற்கு இந்த சர்க்காரும் ஒத்துக்கொண்டது. அந்த நிலைமையில் ஆந்திராவிலுள்ள வியாபாரிகள் எல்லோரும் ஸ்ட்ரைக் செய்தார்கள். கொள்முதல் செய்யமுடியாது என்று சொன்னார்கள். அதன் பிறகு மத்திய சர்க்கார் தலையிட்டு ப்ரோக்யூர் செய்தார்கள். அதன் காரணமாக மற்ற மாகாணங்களுக்கு அரிசி வரக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆகவே இந்த ஸோனல் ஸிஸ்டத்தினால் கெடுதல் கிடையாது. ஆனால் எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் ஸோனல் சிஸ்டம் சரியாக வேலை செய்யவில்லை, எடுத்து விட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்வது சரியல்ல. ஸ்டேட் ட்ரேடிங் வரக்கூடிய காலத்தில் ஸோனல் சிஸ்டம் இருந்தால் என்ன நிலைமை ஏற்படும் என்று எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் கேட்கிறார்கள். அதனால்தான் ஸோனல் ஸிஸ்டத்தை எடுத்து விட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் சேர்க்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட ஸோனல் கவுன்சில் ஒவ்வொரு மாகாணத்திலும் தனித்தனியாக இயங்கிக்கொண்டுதான் வருகிறது. மற்ற மாகாணங்களில் எந்த அளவில் விலைவாசிகள் உயர்ந்திருக்கிறது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஸோனல் கவுன்சிலை எடுத்துவிட்டால் டெபிசிட்டாக இருக்கக்கூடிய ஒவ்வொரு மாகாணத்திற்கும் அரிசி போகக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். அரிசி வேண்டும் என்று போட்டி போட்டுக்கொண்டு அரசியை வாங்க முன் வருவார்கள். ஆகவே இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையைக் காட்டிலும் இன்னும் அதிகப்படியான பயங்கரமான நிலைமை ஏற்படுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே ஸோனல் கவுன்சிலை எடுத்து விட வேண்டும் என்று சொல்வது சரியல்ல. அந்த நிலைமைக்கு நாம் போகக்கூடாது. இன்னும் பயங்கரமான நிலைமை ஏற்படும் என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்றையதினம் ஸ்டேட் ட்ரேடிங் வேண்டும் என்று எல்லோரும் அபிப்பிராயப்படுகிறார்கள். இது வருவதற்குள்ளாகவே வியாபாரிகள் உஷாராக இருக்க ஆரம்பித்து விட்டார்கள். சாதாரணமான விவசாயிகள் யாரும் விற்காமல் இருப்பது இல்லை. அவர்கள் தங்களுடைய விளைச்சலை விற்றுத்தான் ஆக வேண்டும். ஆனால் யார் விற்காமல் இருப்பார்கள் என்றால் பெரிய நிலப் பிரபுக்கள்தான் விளைச்சலை விற்காமல் வைத்துக்கொண்டிருப்பார்கள். அறுவடையான காலத்தில் விற்காமல் எப்பொழுது அதிகப்படியான விலை விற்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டு அப்பொழுது விற்பதற்கு முயற்சி செய்வார்கள். ஆறு அல்லது எட்டு மாதங்கள் வைத்துக்கொண்டு அதற்குப்பிறகுதான் விற்க ஆரம்பிப்பார்கள். சர்க்கார் விலையைக் கட்டுப்பாடு பண்ணும்போது அதிகப்படியாக விற்க முயற்சி எடுத்துக்கொள்ளுவார்கள். முத்தையா செட்டியார் போன்ற பெரிய பணக்காரர்கள் அறுவடை காலங்களில் தானியங்களை வாங்கி வைத்துக்கொண்டு விலை அதிகமாக விற்கக்கூடிய காலத்தில் அவற்றை விற்க முற்படுவார்கள். ஆனால் சாதாரண விவசாயிகள் அப்படி இல்லாமல் அறுவடையானவுடனேயே விற்க முற்படுவார்கள். அப்படி விற்றால்தான் அவர்கள் தங்களுடைய வேலைகளைச் செய்துகொள்ளமுடியும். அப்பொழுது பணம் படைத்தவர்கள் அவற்றை வாங்கி வைத்துக்கொண்டு அதிகப்படியான விலைக்கு விற்க முற்படுவார்கள். அதற்காகத்தான் ஸ்டேட் ட்ரேடிங் கொண்டு வரவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதன் உண்மை நிலை என்ன என்று நமக்கு எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் ஸ்டேட் ட்ரேடிங் அவசியம் வர

[Sri N. K. Palanisami] [24th April 1959.

வேண்டும் என்று சொல்லுகிருர்கள். ஏனென்ருல் பொருளாதாரத்தில் மகத்தான நெருக்கடி இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. நெருக்கடி ஏற்பட்ட சமயத்தில் மார்க்கெட்டில் போதுமான உணவு கிடையாது. பல இடங்களில் பஞ்சம் ஏற்பட்டது. அன்கண்ட்ரோல்ட் ப்ரீ மார்க்கெட் இருந்தால் அங்குள்ள வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கி அதிகப்படியான விலைக்கு விற்க முற்படுகிருர்கள். அறுவடை காலத்தில் எல்லா வியாபாரிகளும் ஒன்று கூடி விளைச்சலைக் குறைந்த விலைக்கு வாங்கி தகுந்த காலத்தில் அதிகப்படியான விலைக்கு விற்க முற்படுகிருர்கள், அதன் மூலமாக லாபம் அடையப்பார்க்கிருர்கள். இப்படிப்பட்ட ஒரு நிலை தொடர்ந்து நடக்கக்கூடாது. அதனுல் திட்டப்பிரகாரம் சாதாரணமாக வாங்கக்கூடிய நிலைமை போய்விடும். அதனுல்தான் ஸ்டேட் டிரேடிங் அவசியம் கொண்டு வரவேண்டும் என்று சொல்லுகிருர்கள். ஆகவே இந்தத் திட்டத்தின் மூலமாக அரசாங்கம் சாதாரணமாக லாபத்தைக் கருதாமல் "நோ லாஸ் நோ ப்ராபிட்" என்ற முறையில் திட்டததைக் கொண்டு வரவேண்டும். வியாபாரத்தை நல்ல முறையில் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் ஸ்டேட் ட்ரேடிங்கைக் கொண்டு வரவேண்டும். வியாபாரிகளுக்கு லைசென்சு கொடுப்பது என்பது இடைக் கால ஏற்பாடு அல்ல. 75 பங்கு கொள்முதல் செய்ய வேண்டும் என்று சொல்லுகிருர்கள். அதன் மூலமாக கோடி ரூபாய் நஷ்டமடைந்தாலும் அதனுல் அவர்களுக்குப் பாதகம் இல்லை. இதனுல் பற்ருக்குறை இடங் களுக்கு நன்மை ஏற்படலாம். திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக் கொண்டால், திருச்சி ஜில்லாவை எடுத்துக்கொண்டால் பல ஜில்லாக்களில் இருக்கக்கூடிய கூட்டுறவு சொசைட்டிகளில் போதுமான உணவுப் பொருள்கள் கிடையாது. பற்ருக்குறை இருக்கிறது. பல இடங்களில் ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

(The Deputy Speaker sounded the gong.)

I may be given five minutes more, Sir.

DEPUTY SPEAKER : No, I cannot allow five more minutes. The hon. Member can take two minutes more. He is only repeating what he has already said.

SRI N. K. PALANISAMI : ஆகவே இன்றையதின ஏற்பாட்டின்படி சர்க்காருடைய கொள்கையில் பல குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே இது சம்பந்தமாக கார்போரேஷனுக்கு சட்டம் செய்ய வேண்டும். இப்பொழுது கூட்டுறவு சொசைட்டிகள் இருக்கின்றன, மார்க்கெட்டிங் சொசைட்டிகள் இருக்கின்றன. அவைகளின் மூலமாக சர்க்கார் வேலையைச் செய்ய வேண்டும். அது மட்டுமல்ல; அறுவடை காலங்களில் 75 பங்கு ப்ரோக்யூர் செய்யாமல் அரைவாசி ப்ரோக்யூர் செய்ய வேண்டும். இன்னும் ஸ்கேர்சிட்டியைப் போக்க வேண்டும். அறுவடை காலங்களில் ரிக்விசிஷன் செய்ய வேண்டும். அது மட்டுமல்ல ; போதுமான ஸ்டாக் வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் சர்க்கார் கண்ட்ரோல் செய்ய முடியும். கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாகத்தான் மேலும் மேலும் ஸ்டேட் ட்ரே டிங்கைச் செய்ய முடியும். இது முக்கியமான விஷயம். அதுமட்டுமல்ல முக்கியமான விஷயம். கன்னியாகுமரி போன்ற ஜில்லாவில் மொத்த வியாபாரிகள் தப்பான பிரசாரங்களைச் செய்து ஜனங்களைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிருர்கள். ஸ்டேட் டிரேடிங் என்பதே தப்பு என்ற முறையில் கருத்தை வளர்த்துக்கொண்டிருக்கிருர்கள். இதன் காரணமாக ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் மக்களி டையே ஒரு தெளிவான எண்ணம் உண்டாவதற்கு சர்க்கார் தக்க ஏற் பாடுகளைச் செய்ய வேண்டும். நேற்றையதினம்கூட பல வியாபாரிகள்

24th April 1959] [Sri N. K. Palanisami]

வந்திருந்தார்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன ? அவர்கள் பொதுமக்களிடையே செய்து வருகிற பிரசாரத்தினால் ஒரு பெரும் அபாயம் ஏற்பட இருக்கிறது. ஆகவே சர்க்கார் உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

SRI T. T. DANIEL : Mr. Deputy Speaker, Sir, so far as our State is concerned, in the matter of food production, we have made tremendous progress during the last ten years. I would like to remind the hon. Members of the House that Madras State at the commencement of the First Five-Year Plan was deficit in the matter of food just like Kerala. We were deficit by about 50 per cent. So the Government gave top priority for food production schemes in the First Five-Year Plan and allotted 28 crores of rupees for the construction of various irrigation projects in the State. As a result of this, tremendous progress was made in the matter of food production and to-day we are producing nearly 46 lakhs tons of food-grains as against our normal requirements of about 48 lakhs tons. It is believed and hoped that this gap would be filled before the end of the Second Five-Year Plan period. However, I would like to remind the Government that out of the 46 lakhs tons of food-grains produced by us, only 34 lakhs tons are rice and the balance of 12 lakhs tons are other foodgrains. Therefore, the Government should take into consideration the fact that the population is slowly taking to rice eating and giving up consuming other kinds of foodgrains. Rice is only the chief foodgrain consumed by the generality of the population. Our target should, therefore, be to produce not only 36 to 38 lakhs tons of rice but 48 lakhs tons of rice to meet the requirements of the entire population. Unless and until our State reaches this production of 48 lakhs tons of rice, we cannot claim to be self-sufficient in the matter of foodgrains and will continue to be deficit in the matter of food production. 3-30 p.m.

Coming to the measures adopted by the Government for reducing the price of foodgrains, I must say but for the measures taken by the Government the prices would have gone up to such an extent that the average citizen in the State would not be in a position to purchase rice and fill his stomach. Hon. Members should remember what the price of rice was before measures were taken by the Government to check rise in prices. Was it not Rs. 2 per pucca in several districts of our State? After suitable measures were taken by the Government, did not the price come down to annas 12 or 13? This is a patent fact which we have all noticed. These measures met a grave crisis which would otherwise have developed in our State. But for the timely action of the Government the price would have risen to such an extent that perhaps there would have been famine in many parts of our State. However, I would in this connection like to point out to the Government that after the price of rice came down and assumed a more or less normal level, somehow or other, the price has slowly gone up. We are told that in

[Sri T. T. Daniel] [24th April 1959.

Tirunelveli the price of one kottai or 112 Madras measures of rice has gone up to Rs. 45 to Rs. 50 as against the Government rate of Rs. 37 to Rs. 39. The price of raw rice has also gone up to the extent of Rs. 29 to Rs. 33. These are all glaring facts and we must seriously consider how these prices are going up. Though we may blame the Government, it is the merchants who actually play the trick behind the back of the Government. The policy formulated by the Government is correct. But when the policy is implemented, the merchants adopt methods to surmount or defeat the policy of the Government. Then, if the Kerala Government had also fixed the maximum price for paddy as our Government had done, we would not be faced with the present situation. As a sister State, as a Member of the Zonal Council, they should have fixed the maximum price for paddy as soon as this State fixed a maximum price for paddy. Clearly it was a mistake on their part not to have done so. Because they failed to fix the maximum price, the merchants in Kerala began to offer fancy prices for the producers in our State and it is no wonder that lakhs and lakhs of tons are flowing into Kerala State through the various gateways of our State. With so much rice moving into the State, I doubt whether it is only the requirement for a year or for more years that the Government of Kerala are stocking the rice. So far as the Zonal Council is concerned, this creates complicated problems. We have no doubt to treat the Kerala State as a sister State. We cannot say that that State should look after itself. That way we cannot find a solution for this difficult problem. That is not also the way in which we should look at this problem. I would request the Government to look at the problem with a human consideration and sympathy and look at the whole problem from a broad stand-point and find a satisfactory solution for the problem that actually faces us as well as the Kerala Government. If Kerala is to be left to itself to solve the problem, it is my confirmed opinion that it cannot solve it. The people of Kerala will have to die of starvation. That is the position of Kerala. Rightly or wrongly the position has come to that. It is because of this peculiar position that the Central Government also thought it wise to constitute the Zonal Council in which all the States became partners. It is the duty of the Central Government to ask the Kerala Government to state its requirements of rice, the amount of deficit and the kind and quantity of food required by them to make up the deficit. If such an estimate of their food requirements is furnished by the Kerala Government, it is the duty of the Central Government to find their requirements from some where, from some other State or even from foreign countries, and supply it to them in time. If that is done, the Kerala merchants would not be tempted to go to other States and offer fancy prices to producers in other States and create difficulties there. I would request hon. Members to put this State in the same position as that of Kerala which is deficit by 50 per cent and then say

24th April 1959] [Sri T. T. Daniel]

whether merchants here would not transgress and go into other States and offer fancy prices and get rice to meet the requirements of the people of this State.

I would, therefore, request—I have already stated it repeatedly—that if the Central Government desires that the Zonal Council should be allowed to continue, then for every year the Government of the Kerala State should make a clear and categorical demand of their exact wants. The Central Government should try to find out ways and means of supplying rice in time. Otherwise, these difficulties and crisis will again and again develop and they in turn create difficulties for the poor people of our State.

Then I come to another matter. So far as commission agents are concerned, I understand that they are encountering some peculiar difficulty. They are also asked to measure out a certain quantity of foodgrains which they have had in their stock. So far as these commission agents are concerned, I think, they are only intermediaries. They do not make any purchase nor do they make any sale. As long as their position is the position of intermediaries, they should be exempted from this policy of asking the commission agents also to keep stocks and measure out a particular quantity out of their stocks to the Government.

Coming to the price of paddy, several hon. Members of this House have correctly pointed out that the Government should also find out ways and means of reducing the cost of production, the cost of manure and the cost of all other necessaries for the production of foodgrains. . .

DEPUTY SPEAKER: The hon. Member's time is up. Now the hon. Member, Sri Krishnaswami Naidu, will speak.

* Sri R. KRISHNASAMI NAIDU: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய ராஜ்யத்தில் உணவு நிலைமையைப்பற்றி அடிக்கடி இந்தச் சபையினுடைய விவாதத்திற்கு வருவது சந்தோஷத்திற்குரிய ஒரு காரியமாகும். இப்படி விவாதத்திற்கு வருவதன் காரணமாக நல்லதொரு முடிவு ஏற்படும் என்கிற சந்தோஷம் நமக்கு இருந்தாலும் கூட நம் மனதில் எழக்கூடிய கவலைகள், குழப்பங்கள்—அதற்கு ஏற்றாற்போல நாட்டிலும் ஒரு நிலைமை உருவாகிக் கொண்டு வருவதைப் பார்த்தால் நாம் அனைவருமே ஒருவகையில் அதிகக் கவலை கொள்ள வேண்டியதாக இருக்கிறது. "கல்யாணம் ஆனால்தான் பைத்தியம் தெளியும். பைத்தியம் தெளிந்தால்தான் கல்யாணம் ஆகும்" என்கிற ஒரு பழமொழியை சில விஷயங்களுக்கு உதாரணமாகச் சொல்வது உண்டு. அந்த நிலைமையிலே விலைகள் குறைய வேண்டும். எல்லோருக்கும் அரிசி கிடைக்கவேண்டும் என்று நினைக்கிறபோது, விலையைக் குறைக்கப்போகும்போது அரிசித் தட்டுப்பாடு என்ற குரல் எழுகிறது. எல்லோருக்கும் நியாயமான விலைக்கு அரிசி கிடைப்பதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகளிலே வெற்றி ஏற்படவேண்டுமானால் அரசியல் கட்சியில் ஈடுபட்டவர்கள் உள்பட—எல்லோரும் உண்மையான தகவல்களை அப்போதைக்கப்போது அரசாங்கத்திற்கு தெள்ளத்தெளிய எடுத்துத்தர வேண்டும். நியாயமான எண்

[Sri R. Krishnasami Naidu] [24th April 1959

ணத்தோடு—சரியான முறையில்—அப்படிப்பட்ட விவரங்களைச் சேகரித்துத் தராததும் ஒரு குறைதான் என்று நினைக்கிறேன். அரசாங்கமும்கூட இப்போது தயாரித்திருக்கிற புள்ளி விவரங்களை அப்படியே ஒப்புக்கொள்ள முடியாத நிலைமைதான் இருக்கிறது. ஆகவே இன்றைக்கு நாட்டில் நெல் விலை என்னவாக இருக்கிறது, உற்பத்திச் செலவு என்னவாக இருக்கிறது, அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலை என்ன இதனால் ஏற்படுகிற தாரதம்மியம் என்ன என்கிற உண்மையான புள்ளி விவரங்களை அவ்வப்போது சேகரித்தாக வேண்டும். நாட்டில் உண்மையாகவே ஒரு மாறுதல் ஏற்பட்டாக வேண்டும். இப்போதுள்ள சூழ்நிலையில் அவசியம் அந்த மாறுதலைச் செய்தாக வேண்டும் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். "நெல் விலை குறைந்தால் புல் விலை குறையும்" என்பதாகச் சொல்வது எதுகை மோனையைப் பொறுத்துப் பொருத்தமாக இருக்கும். ஆனால் உண்மையில் அரிசியின் விலையைப் பொறுத்தா அவை இருக்கின்றன என்று பார்க்கவேண்டும். நம் ராஜ்யத்தில் அரிசியின் விலை ஏறிவிட்டது என்று ஒரேயடியாக நாம் பேசுவதற்கு முன்னால் நம் ராஜ்யத்தைத்தவிர, வேறு எந்த ராஜ்யத்திலாவது குறைவாக நெல் விலை, அரிசி விலை இருக்கிறதா—இங்குள்ளதைவிடக் குறைந்த விலைக்கு எந்த ராஜ்யத்திலாவது விற்கப்படுகிறதா என்கிற புள்ளி விவரங்களையும் சேகரித்து எந்த அங்கத்தினராவது கொடுத்திருந்தால் அது இன்றைய விவாதத்திற்கு மிகவும் உபயோகமாக இருந்திருக்கும். அந்த ராஜ்யத்தில் இன்ன விலைக்கு அரிசி விற்கிறார்களே, இங்கும் ஏன் குறைக்கக்கூடாது என்று கேட்டால் அது ஓரளவுக்கு இங்குள்ள விவசாயிகளின் தார்மீக உணர்ச்சியைத் தூண்டக்கூடியதாக இருக்கும். இன்றையதினம் வெளி ராஜ்யங்களில் இந்த ராஜ்யத்தை விட அதிகமான அளவுக்கு விலை இருந்து கொண்டிருக்கும்போது இங்கே அரசாங்கம் மிகக் குறைவான விலையை நிர்ணயித்திருக்கிறார்கள் என்றால் இது ஓரளவு மக்களிடையே அதிருப்தியைத் தான் உண்டாக்கும். அப்படிப்பட்ட அதிருப்தி ஏற்படுவதும் நியாயம் தான். ஆகவே விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை என்ன, இதர ராஜ்யங்களோடு ஒப்பிட்டு நம் ராஜ்யத்திலும் என்ன விலைக்கு நியாயமாக நிர்ணயிக்க வேண்டும் என்பதையும் யோசித்தாக வேண்டும். அரிசி படி $12\frac{1}{2}$ அணாவுக்கு விற்கப்படுவதுதான் நியாயம் என்பதாக கலெக்டர்கள்கூட ஜில்லாக்களில் பேசி வருகிறார்கள். ஆனால் இன்றைய தினம் அப்படி $12\frac{1}{2}$ அணாவுக்கு விற்பவர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்களை கடவுளுடைய அவதாரமாகவே நான் கருதுகிறேன். காரணம் என்னவென்றால் எப்படி $12\frac{1}{2}$ அணாவுக்குக் கொடுக்க முடியும்? அதிலும் எந்த ரகம் அரிசி? பல விஷயங்களை நாம் யோசித்துப் பார்த்தாகவேண்டும். விவசாயி நூறு படி நெல் அரைத்தால் 50 படி அரிசி கூடக் கொண்டு வரமாட்டான். வியாபாரிகள் என்றால் அதையே 57 படியாகக் கூடக் காட்டுவார்கள். அது வியாபார சாமர்த்தியம். இருந்தாலும் அவர்களுக்கும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இன்றையதினம் சாகுபடிச் செலவு என்ன, சாகுபடி ஆகும் தானியம் எவ்வளவு, விவசாயிகளது சொந்த உபயோகத்திற்குப் போய் விடுவது எவ்வளவு, மார்க்கெட்டுக்கு வரக்கூடிய அளவு என்ன, வந்து கொண்டிருக்கிற அளவு என்ன, எப்படி கள்ள மார்க்கெட்டில் கொண்டுபோகப்படுகிறது, பொது மக்களுக்கு இன்றைக்கு ஏன் அச்சம், கவலை எல்லாம் உண்டாகிறது, போதுமான அளவு நாட்டில் சாகுபடி இல்லையா என்பதையெல்லாம்—பத்திரிகைகளிலும் சரியான முறையில் வருவது இல்லை. சரியான ஆராய்ச்சியும், விவரமும் சேகரிக்கப்படவில்லை. இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதைப்பற்றி நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். என் மனதில் ஒன்று தோன்றுகிறது. நியாயமான விலையை நிர்ணயித்துவிட்டு, ரீடைல் ப்ரைஸையும் நியாயமாக நிர்ணயித்துவிட்டு கேரள ராஜ்யத்திற்குத் தேவையான அரிசியை தார்மீகமான முறையில் அரசாங்கமே கொடுப்பதாக ஒப்புக்கொண்டு மற்றபடி இந்த ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் முன்பு இருந்ததுபோலவே

24th April 1959] [Sri R. Krishnasami Naidu]

கட்டுப்பாடு இல்லாமல் கொள்முதல் செய்வதற்கும் விற்பதற்கும் அனுமதித்துவிட்டால் என்ன என்று என் சிறிய அறிவுக்குப் படுகிறது. ஆனால் நான் சொல்வதுதான் தீர்க்கதரிசனமான முறை, இதில் கஷ்டமான நிலைமை ஒன்றும் உண்டாகாது என்று நான் சொல்லத்தயாரில்லை. என் மனதில் தோன்றுவதைச் சொல்கிறேன். இப்படிச் சொல்வதனால் அரசாங்கம் இப்போது எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கையில் இருந்து பின் வாங்கியதாக ஆகாதா என்று கேட்கலாம். அதோடு நான் ஒன்று கேட்கிறேன். 12½ அணுவுக்குத்தான் விற்க வேண்டும் அல்லது 14 அணு, அல்லது 1 ரூபாய்க்குத்தான் விற்கவேண்டும் என்று சொல்கிறவர்களினால் இன்றுள்ள நிலைமையில் இதற்குள் நெல் சாகுபடி செய்ய முடியுமா என்று கேட்கிறேன். வாதங்கள் செய்யலாம். ஆனால் உண்மை நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும். எங்கள் ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூக்காவில் முதல் தரமான அரிசியை படி 14 அணுவுக்குத்தான் அரைத்து விவசாயியே தன் வீட்டுக்குக் கொண்டுவர முடியும். எப்படி வியாபாரிகள் இந்த விலைக்குக் கொடுக்க முடியும் ? உண்மையை உணர்ந்து கொள்ளாத முறையில்—அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்—இன்றைய விவாதத்தில் அரிசி விலை உயர்ந்துவிட்டதே என்பதாக வெறும் பேச்சுப் பேசுவது கூட அத்தனை பொருத்தமாக இல்லை என்று நான் கருதுகிறேன். இன்றுள்ள நிலைமையைப் பார்த்து விலை நிர்ணயம் செய்ய வேண்டும். எந்த எந்த இடத்தில், எந்த எந்த நிலைமை இருக்கிறது என்பதைப் பார்த்து—சர்க்காருக்கும் கொள்முதல் தலைவலியைக் குறைத்துக்கொண்டு—நியாயமான விலை நிர்ணயித்து எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாமல், கட்டுப்பாட்டைத் தளர்த்திவிடலாம். இப்படிச் சொல்வது நியாயமான யோசனையாக இருக்காதா என்று பார்க்கவேண்டும். நாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கையில் இருந்து பின் தங்கிவிட்டோம் என்று நினைக்க வேண்டியதில்லை. இப்படிப்பின்தங்கி, தளர்ந்து கொடுப்பதும் சோதனை காலத்தில் நல்ல பலனை அளிக்கும். தஞ்சை ஜில்லா போன்ற இடங்களில் உள்ள விவசாயிகளே இன்றைய தினம் கட்டைச் சம்பா போன்ற அரிசியை தாங்களே அரைத்து 12½ அணுவுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட உரிமையை அவர்களுக்குக் கொடுத்துப் பார்க்கலாம். ஆகவே கட்டுப்பாட்டைக்கொஞ்சம் தளர்த்துவது நல்லதா என்கிற யோசனையை சர்க்கார் ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட இந்தச் சந்தர்ப்பத்தில் சட்டசபை அங்கத்தினர்களும் சட்ட சபைக்குள்ளும் சரி, வெளியிலும் சரி "நான் ஜில்லாவுக்குப் போக அஞ்சுகிறேன்" என்பதாகவெல்லாம் பேசுவது அவ்வளவு பொருத்தமாக இல்லையென்று நான் கருதுகிறேன். பத்திரிகைகளில் எழுதுவதோ, மறைமுகமாகத் தலையங்கம் எழுதுவதோ உள்ள நிலைமையை மிகைப்படுத்தப்பட்டு வீணான பீதியை உண்டாக்குவதற்குத்தான் பயன்படுமே தவிர நிலைமையைக் கட்டுப்படுத்த உதவாது. எல்லாப் பண்டங்களுடைய விலைவாசியையும் கட்டுப்படுத்தி—நாட்டில் சீரான நிலைமையை உண்டாக்குவது எப்படி என்பதை அறிந்து நாம் நியாயமான முறையில் ஒரு பரிகாரம் காணவேண்டும் என்கிற முறையில் யோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக்கொள்கிறேன்.

Sri V. SUBBIAH: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய பிரச்னைகளில் முக்கியமான பிரச்னை உணவுப் பிரச்னை. இன்றையதினம் எங்கு பார்த்தாலும் அரிசிப் பஞ்சம், உணவுப் பஞ்சம் என்ற நிலைமை இருக்கிறது. இவ்வளவு காலம் என்ன நிலைமை இருந்து வந்தது என்று பல மதிப்புக்குரிய நண்பர்கள் பேசினார்கள். பல விஷயங்களைச் சொன்னார்கள். அரசாங்கம் இப்பொழுது எதற்கெடுத்தாலும் கட்டுப்பாடு வைக்கிறது. இந்தக் கட்டுப்பாடு இருக்கும் வரை இந்த நாட்டில் உணவுப் பஞ்சம் இருக்கத்தான் செய்யும். விலைக் கட்டுப்பாட்டை நிர்ணயிக்கும் போது அரசாங்கம் உற்பத்திச் செலவை அதற்குத் தக்கபடி நிர்ணயிக்கிறார்களா

என்று பார்க்கவேண்டும். உண்மையிலேயே உணவு உற்பத்தி பெருக வேண்டுமானுல், நாட்டு மக்களுக்கெல்லாம் உணவு அளிக்க வேண்டு மென்ற எண்ணம் இருக்குமானுல் விவசாயிகள் பேரில் எந்த விதக் கட்டுப்பாடும் இருக்கக்கூடாது. அப்படிக் கட்டுப்பாடு இல்லாமல் இருந்தால் 60, 70 தினங்களில் லட்சக்கணக்கான குறுகிய காலப் பயிர்களைப் பயிரிட முடியும். இந்த நாட்டில் எதற்காகப் பஞ்சம் இருக்கவேண்டும் ? ஒரு கோட்டை நெல் 50 ரூபாய்க்குக் கிடைக்கவில்லை என்ற நிலைமை ஏன் ஏற்படவேண்டும் ? தப்பான முறையிலே விவசாயிகளைக் கட்டுப்படுத்து கிருர்கள். அரசாங்கம் போடக்கூடிய அவ்வளவு வரியையும் அந்த விவசாயிகள் சுமந்து கொண்டிருக்கிருர்கள். அம்மோனியம் சல்பேட், நைட்ரேட், பாஸ்போட், யூரியா போன்ற ரசாயன உரங்களை என்ன விலைக்கு விவசாயி வாங்குகிருன் ? 50 ரூபாய்க்குக் கள்ள மார்க்கட்டில் வாங்க வேண்டியிருக்கிறது. விவசாயிகள் வண்டிப்பட்டை வாங்க மெட்ருஸ் கந்தசாமி கோயில் பக்கத்தில் இருக்கும் கடைகளுக்கு வந்து வாங்க வேண்டியிருக்கிறது. நான்கு ரூபாய் விற்றது இன்றையதினம் 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விவசாயக் கருவிகளின் நிலைமை என்ன ? மெஷின் ஸ்டார்ட்டர்களுக்கு உருண்டையான ஸ்டார்ட்டர்களைக் கொடுத்துவிட்டு அதைக் கம்பியாக அடித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிருர்கள். டாடா கம்பெனியில் தண்ணீர் இறைக்கும் சால் கேட்டால் எம்.எஸ். அரை அங்குலம் ப்ளேட்டைக் கொடுத்துவிட்டு நீயே செய்துகொள் என்று அரசாங்கம் கூறிஞல் விவசாயி எப்படி உற்பத்தி செய்ய முடியும் ? எதிர்காலத்தில் என்ன நிலைமை ஏற்படப் போகிறதோ என்ற பயம் உண்டாகிறது. தஞ்சை போன்ற பிரதேசங்களில் எல்லாம் பணத்தை அள்ளிக் கொடுக்கிற கரும்பு, புகையிலை போன்ற பொருள்களைப் பயிரிடப் போகிருேம் என்று சொல்லுகிருர்கள். அந்த நிலைமையைத்தான் அரசாங்கம் உண்டாக்கிக்கொண்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

எங்கள் பகுதி பஞ்சப் பிரதேசமாக, வரண்ட பிரதேசமாக இருக்கிறது. அங்கு நெல் கிடைப்பதே இல்லை. உண்மையில் அது "மில்லெட் ஏரியா". அந்த இடத்தில் எப்படி நெல் கிடைக்க முடியும் ? அதற்கு என்ன செய்திருக்கிறது இந்த அரசாங்கம் ? அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. பஞ்சாலைத் தொழிலாளர்கள், உத்யோகஸ்தர்கள் ஆகியவர் களுக்கெல்லாம் வெளி நாட்டிலிருந்து வாங்கி விநியோகிக்கலாம். ஏகமாக விவசாயிகளைக் கட்டுப்படுத்துவதால் உற்பத்தி பெருக வழியில்லை. எந்த வித சலுகையும் விவசாயிகளுக்குக் கொடுப்பதில்லை. மகாத்மா காந்தியவர் கள் உப்புச் சத்தியாகிரஹம் செய்தார்கள். இன்றைக்கு உப்பு மூட்டை 10 அணுவுக்கு விற்கும் நிலைமை இருக்கின்றது. இந்தக் கட்டுப்பாட்டை யெல்லாம் எடுத்துவிட்டால் இன்னும் 70 தினங்களில் இந்தப் பற்ருக் குறையைத் தீர்த்துவிடலாம் என்று சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member Sri Authimoolam will now speak and he will take only five minutes and finish.

SRI D. S. AUTHIMOOLAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மாகாணத்தில் கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிற படி உணவுப் பஞ்சம் கிடையாது. நமக்குப் போதிய அளவு உணவு உற்பத்தியாகி இருக்கிறது. ஆந்திராவைப் பார்த்தால் கிட்டத்தட்ட 4 லட்சம் முதல் 5 லட்சம் டன் வரை அரிசி உபரியாக இருக்கிறது. நாம் ஏன் இந்த விஷயத்தில் குழப்பமடைய வேண்டுமென்று தெரியவில்லை.

இதன் காரணமாக ஏழைகளிடம் ரொம்ப அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. சமீபத்தில் நடந்த முனிசிபல் தேர்தல்களில் காங்கிரஸ் அபேட்சகர்கள் நாமினேஷன் போடவே பயந்து கொண்டிருந்தார்கள். இலகுவாக அவர்

களைத் தோற்கடித்துவிடலாம் என்ற நிலைமை இருந்தது என்பதை இந்த அரசாங்கம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். முக்கியமாக ஆந்திர சர்க்கார் இந்திய சர்க்காரோடு எந்த வித மனப்பான்மையோடு நடந்து கொள்ளுகிறார்கள்? கட்டுப்பாடான ரேட்டையும், நேஷனல் டெவலப் மெண்ட் சொன்னால் அதையும் அமுல் நடத்துவார்கள் அங்குள்ளவர்கள். நம்முடைய ராஜ்ய சர்க்கார் மந்திரிகள் இந்திய சர்க்கார் என்ன சொன் னாலும் உடனே நிறைவேற்றிவிடவேண்டுமென்று துடிக்கிறார்கள். நல்ல பிள்ளை என்ற பெயர் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று "ஹேஸ்டி"யாக காரியங்களைச் செய்வதால் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இந்தக் கஷ்டங் கள் ஆர்டிபிஷியலாக ஏற்படுகின்றன என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நாம் இப்பொழுது செய்யவேண்டிய காரியம் ரொம்பச் சின்னக் காரியந் தான். லெவி சிஸ்டத்தில் இந்த 2 லட்சம் டன்னையும் கொள்முதல் செய்துவிடலாம். அதோடு உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும். வாங்குபவர்களுக்கும் விலை கூடக்கூடாது. உற்பத்தியாளர் களுக்கு சர்க்கார் ஏன் போனஸ் கொடுக்கக்கூடாது ? அப்படிச் செய்தால் தான் உற்பத்தியாளர்கள் உற்சாகமாக இந்த நாட்டில் உற்பத்தியைப் பெருக்குவார்கள். இதைப் பற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்யவேண்டும். கேரளாவில் அரிசிப் பற்றாக் குறை என்று சொன்னால் எந்த விலைக்கு அவர்கள் வாங்குகிறார்கள் ? அப்படி வாங்குவதால் நாம் ரைஸ் மில் காரர்களிடம் ப்ரொக்யூர் செய்ய முடியாது. அந்தச் சர்க்காரின் விளம் பரத்திற்காகப் பேசவில்லை. அவர்கள் இந்தத் தொகையை எப்படிச் சரிக் கட்டுகிறார்கள்? "எக்ஸ்பிரியன்ஸ்" உள்ள சென்னை சர்க்கார் ஏன் இந்த முறையில் காரியம் செய்யவில்லை ? உணவு விஷயத்தில் சீரான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். எனக்கு 5 நிமிஷந்தான் கொடுத்ததால் இதோடு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri V. K. KOTHANDARAMAN : On a point of order. Sir, 16 அங்கத்தினர்கள் இந்தச் சபைக்கு வரவில்லை. அவர்கள் பேசக்கூடிய ஒரு சந்தர்ப்பம் எல்லாருக்கும் சரி சமமாக பிரித்துக்கொடுக்க வேண்டும். எப்பொழுதும் போல் எதிர்க் கட்சியில் 4 பேர்தான் பேசியிருக்கிறார்கள்.

DEPUTY SPEAKER : It is not a point of order. The hon. Member will resume his seat.

(Sri V. K. Kothandaraman was still standing and heard to say something in Tamil.)

DEPUTY SPEAKER : The hon. Member will resume his seat. The Hon. Minister will proceed.

Sri R. SRINIVASA IYER : On a point of order, Sir. Is the conduct of the hon. Member (Sri Kothandaraman) in order?

DEPUTY SPEAKER : It is not.

Sri V. K. KOTHANDARAMAN : எங்களுக்கும் சரிசமமாக "டைம்" கொடுக்க வேண்டும். நியாயம் செய்ய வேண்டுமென்று தான் நியாயத்தை நான் கேட்கிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member will resume his seat. The Hon. Minister may proceed.

[24th April 1959

4-00 p.m. **The Hon. Sri M. BHAKTAVATSALAM :** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, உணவு நிலைமையைப் பற்றி இன்று இந்த விவாதம் செய்வதற்கு சந்தர்ப்பம் அளித்த கனம் எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்று நான் கூறியதுபோல் உணவு நிலைமையைப் பற்றி அப்போதைக்கப்போது அரசாங்கம் விளக்கிக்கொண்டு வருகிறது என்றாலும் மீண்டும் மீண்டும் நிலைமையை எடுத்துக் கூறும் சந்தர்ப்பத்தை நான் எப்பொழுதும் வரவேற்கிறேன். ஏனெனில், உணவு நிலை சுலபமாக அடியோடு தீர்க்கப்படக்கூடியதல்ல என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆகவே அப்போதைக்கப்போது நிலைமையை எடுத்துக்சொல்வது அவசியமாகிறது. இங்குள்ள கனம் அங்கத்தினர்களுக்கு கவலை இருப்பது போல் வெளியில் உள்ள பொதுமக்களுக்கும் கவலை இருக்கிறது. இது ஒரு முக்கியமான பிரச்னையாகும். ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில், இங்குள்ள கனம் அங்கத்தினர்களின் யோசனைகளையும் கேட்டு இந்த நிலைமையை மேலும் சீர்படுத்துவதற்கு ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளக்கூடுமா அல்லது நாங்கள் எடுத்துக்கொண்டு வருகிற நடவடிக்கைகள் தவறுதலா என்றெல்லாம் கூட பரிசிலனை செய்வதற்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த விவாதத்தைக் கிளப்பிய போது அவர்கள் சொன்னார்கள், இங்கு நிலைமை மிகவும் " க்ளூமியாக" இருக்கிறது, " ப்ரிக்கேரியஸ்" ஸாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். உணவு நிலை கவலைக்கிடமானதாகவும், ஆபத்துள்ளதாகவும் இருக்கிறது என்று சொன்னார்கள். " ஸ்கேர்ஸிட்டி " இருக்கிறது என்றும் சொன்னார்கள். இந்த இரு விஷயங்களைப் பற்றியும் நான் முதலில் சொல்ல விரும்புகிறேன். உணவு நிலைமை இன்னும் சீராகவில்லை என்றால் அது எல்லோருக்கும் கவலையைக் கொடுக்கிறது. ஆனால் நாம் நிலைமையை மிகைப்படுத்திச் சொல்வது சரியல்ல. யுத்த காலத்தில் சொல்வார்கள், நாம் எதையும் மிகைப்படுத்திச் சொல்லக் கூடாதென்று. நம்மை அறியாமல் நாம் மிகைப்படுத்திச்சொல்லும்போது அது மற்றவர்களுக்கு வேறு விதமான உணர்ச்சிகளைக் கிளப்பி விடுகிறது. பயங்கரமான உணர்ச்சிகளைக் கிளப்புவது சரியல்ல. சில நாச சக்திகள் நம் நாட்டில் இருக்கின்றன. அந்த நாச சக்திகள் இவைகளைப் பயன்படுத்தப் பார்க்கிறது. சுயநலச் சக்திகள் அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது. எல்லாம் சரியாக இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. நிலைமை அடியோடு சீராகவில்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இன்றுள்ள நிலைமை மோசமாகயில்லை. " க்ளூமி அல்லது ப்ரிக்கேரியஸ் " என்ற நிலைமையில்லை. உணவு கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. நான் அப்போதைக்கப்போது ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள நிலைமையைப்பற்றி விசாரித்துக் கொண்டுதான் இருக்கிறேன். இன்று அரிசி கிடைக்கவில்லை என்ற புகார் கிடையாது. அரிசி விலை அதிகமாகத்தான் இருக்கிறது. ஆனால் விஷம்போல் மேன் மேல் ஏறிக்கொண்டிருக்கிறது என்று சொல்வதற்கில்லை. முன்பு, அரிசி விலை அதிகமாக இருந்தது. இப்பொழுது அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகளின் முக்கியமான உத்தேசம் விலையைக் குறைக்க வேண்டுமென்பதுதான். ஏனெனில் உற்பத்தி செய்பவர்களும், அதை வாங்கிச் சாப்பிடுகிறவர்களும் எல்லோரும் சாப்பிட் வேண்டியிருக்கிறது. உணவு தான்யங்களின் விலையைக் குறைத்தாலன்றி நிரந்தரமான க்ஷேமம் ஏற்படாது. அரிசியின் விலை, அதிகப்படும்போது மற்ற தான்யங்களின் விலையும் அதிகப்படுகிறது. அப்பொழுது நமது திட்டங்களையும் சீராக நடத்த முடியாது. ஆகவே இதை நன்கு சமாளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ஸ்டேட் டிரேடிங் கொண்டு வந்து நிறைவேற்றலாம் என்று மத்திய அரசாங்கமும், நாஷனல் டெவலப்மென்ட் கௌன்ஸிலும் ஏற்பாடு செய்து முடிவு செய்திருக்கிறார்கள். நாம் உத்தேசிக்கும் அளவு விலை குறையவில்லை. ஆனால் விலைகள் அதிகப்பட்டுக் கொண்டே போகிறது

24th April 1959] [Sri M. Bhaktavatsalam]

என்பதை எந்த புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு பழனிசுவாமி அவர்கள் குறிப்பிட்டார்களோ, இந்த லிவிங் இண்டக்ஸ் எந்த யந்திரத்தை வைத்து அதைத் தயார் செய்தார்களோ, அந்த இயந்திரம் மூலம் எனக்கு கிடைத்திருக்கும் தகவலை நான் சொல்கிறேன். சென்ற எப்ரல் நாலாம் தேதி முடிவடைகிற வாரத்தில் உள்ள ரீட்டேல் ப்ரைஸஸ், முதல் ரகம் அரிசியும் நெல்லும், இரண்டாவது ரகம் அரிசியும் நெல்லும், ஒவ்வொரு மாவட்டத்திலும் என்ன விலையில் இருந்தது என்ற விவரம் என்னிடம் இருக்கிறது. நமது கவலை எல்லாம் இரண்டாவது ரகத்தைப் பற்றித்தான். ஏனெனில் அதுதான் ஏழை மக்கள் வாங்கும் ரகம். முதல் ரகத்தின் விலையும் இருக்கிறது. இரண்டாவது ரகத்தைப் பார்த்தால், மதருஸ் படி ஒரு ரூபாய்க்கு மேல் இல்லை, சாதாரணமாக. சிற்சிலயிடங்களில் இரண்டாவது ரகத்தில் மூன்று நான்கு வகைகள் இருக்கின்றன. தஞ்சாவூரில் நான் விசாரித்து தெரிந்து கொண்டிருக்கிறேன். சென்னை படி ஒன்றுக்கு 13 அணு புழுங்கல் அரிசி. 72 நயா பைசா என்றும் இருந்திருக்கிறது. இன்னொரு ரகம் 78 நயா பைசா, இன்னொரு ரகம் 78 நயா பைசா, இன்னொரு ரகம் 1 ரூபாய் 6 நயா பைசா இரண்டாவது ரகத்தில் இருக்கிறது. ஆக, 81, 72 1.6 என்றிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றியதும் இருக்கிறது. சென்னையில் அரிசி ரூ. 1-5அணு விற்கிறது என்று சொன்னார்கள் பழனிசுவாமி அவர்கள். ஆனால் சென்னை நகரில் பச்சை அரிசி உயர்ந்த ரகம் 1-6 நயா பைசா, 1-22, என்றிருக்கிறது. இரண்டாவது ரகம் 75 நயா பைசா ஒரு ரகம், ஒரு ரகம் 1 ரூபாய், ஒன்று 87 நயா பைசா, ஒன்று ரூ. 1-9 நயா பைசா என்றிருந்தது அந்த வாரத்தில். உதகையில் கூட நேற்று கூட நான் விசாரித்தேன். ரீட்டேல் ப்ரைஸ் புழுங்கல் அரிசி இண்டாவது ரகம் சென்னை படி ஒன்று ஒரு ரூபாய்க்கு விற்கிறது. இதற்கு உயர்ந்த ரக அரிசியாகயிருந்தால்கூடுதல் ஒன்றல்லது இரண்டு அணு கூடுதல் இருக்கும். ஹில் ஸ்டேஷனில் கூட இன்று அரிசி கிடைக்கவில்லை என்ற நிலை இல்லை. அடுத்தபடியாக, தொழிலாளர்கள் தேவையைப் பற்றி குறிப்பிட்டார்கள். அவர்கள் அவதிப்படுவதைப்பற்றி குறிப்பிட்டார்கள். இப்பொழுது நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிற ப்ரொக்யூர்மெண்ட் திட்டத்தின் கீழ் ஓரளவு ஒதுக்கி வைத்து தொழிலாளர்கள் கோவாப்பரேட்டிவ் ஸ்டோர்ஸ்க்கு கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அது நிறைவேற்றப்பட்டு வருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், வால்பாரையில், யானைமலைக்கு சென்றிருந்தேன், இங்குள்ள ப்ளாண்டேர்ஸ் அஸோஸியேஷன் கூட அவர்கள் கஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள் என்று. அவர்கள் தேவை முக்கியமாக கவனிக்கப்பட்டு வருகிறது. இங்கு போதுமான ஸ்டாக் இருக்கிறது. மேற்கொண்டும் தஞ்சையில் இருந்து இவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைப் பிரகாரம் அரிசி வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் மீண்டும் என்னை இன்று சந்திப்பார்கள். அவர்களுக்கு எவ்விதமான கவலைக்கும் இடமில்லை. ஆனால் விலை அதிகமாகயிருக்கிறது. அதை இன்னும் குறைக்க வேண்டும். அதற்கான அடிப்படை நடவடிக்கைதான் இந்த ப்ரைஸ் கண்ட்ரோல். விலை குறைய வேண்டியது அவசியம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வர். விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் கையாள்கிற வழி இந்த ப்ரைஸ் கண்ட்ரோல் ஏற்படுத்தியிருப்பது. ப்ரைஸ் கண்ட்ரோலை நாம் எப்படி நிறைவேற்றுவது ? ஏட்டளவில் நாம் ப்ரைஸ் கண்ட்ரோல் போட்டு விட்டால் போதாது. அது நிறைவேற்றப்படவேண்டும் அதை நிறைவேற்ற ப்ரொக்யூர்மெண்ட் செய்ய வேண்டும். தான்யம் வாங்கி வியாபாரம் செய்ய வேண்டுமென்பதல்ல நோக்கம். ஆனால் பின்னால் அவசியம் ஏற்படுகிறபோது நியாயவிலைக் கடைகள் வைக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கம். எப்பொழுது அவசியம் ஏற்படுகிறதோ அப்பொழுது நியாயவிலைக் கடைகள் வைத்து கொடுக்க வேண்டும். நியாயவிலைக் கடைகள் எங்கும் இருக்க

[Sri M. Bhaktavatsalam] [24th April 1959

வேண்டும். அரசாங்கம் வைக்கும் நியாயவிலைக்கடைகளில் மட்டும் நியாய விலை, மற்றக் கடைகளில் எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்கலாம் என்று இருப்பது கூடாது. அதுதான் அரசாங்கத்தின் நோக்கம். ஆகவே தான் ப்ரொக்யூர்மென்ட் செய்கிறோம். விலையை நாம் கண்டிரோல் செய்திருக்கிறோம். அப்படி விலை நிர்ணயிப்பதிலே அதிகப்பட்ச விலையை நாம் நிர்ணயித்திருக்கிறோம். இப்பொழுது குறைந்த விலை இன்னும் அதிகமாக குறையவில்லை என்று பொதுவாக ஒரு அதிருப்தி. ஆனால் நான் சொல்லுவேன், 2, 3 மாதங்களுக்கு முன்னால் நாம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லையென்றால்—இப்பொழுது போகின்ற போக்கை கவனித்து நான் சொல்லுகின்றேன்—இன்னும் விலை அதிகமாக இருந் திருக்கக்கூடும், பற்றாக்குறையும் ஏற்பட்டிருக்ககூடும். ஆகவே, நாம் கேரளாவுக்கு நெல் போவதை தடுக்க மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப் போடு நடவடிக்கை எடுத்ததால், ஓரளவுக்கு இந்த விலை குறைக்கப்பட்டி ருக்கிறது. சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளினால் ஒன்றுமே பிரயோசனம் இல்லை, பயனற்றுப் போய்விட்டன என்று சொல்லுவதற்கு இடமே இல்லை. இப்பொழுது விலை இந்த நிலைமையில் இருப்பதற்குக் காரணம் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் தான். அதோடு நான் திருப்தி அடையவில்லை. அது இன்னும் சீராக நடைபெறவில்லை என்பதை உணர்ந்துதான், மேலும் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளக்கூடும் என்பதில் கவனம் செலுத்திக்கொண்டு வருகி றோம்.

நான் இன்னொன்று சொல்லுகிறேன். ஏதோ "ஸ்டேட் டிரேடிங்" ஆரம்பித்தோம் அது சரியாக நடைபெறவில்லை என்று சில கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இன்னும் சில அங்கத்தினர்கள் இது ஒரு "ஹாப் ஹார்டெட் மெஷர்", ஏனோதானோ என்று ஏதோ செய்கிறார்கள், மனப்பூர்வமாக அரசாங்கம் இதை ஏற்றுக்கொள்ள வில்லை என்று சொன்னார்கள். இரண்டும் தவறு என்றுதான் தாழ்மை யுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். "ஸ்டேட் டிரேடிங்" இன்னும் நாம் பரிபூரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. அதை அவ்வளவு சுலபமாக எடுத்துக்கொள்ள முடியாது. "நாஷனல் டெவலப்மெண்டு கவுன்சிலில் "ஸ்டேட் டிரேடிங்" செய்யவேண்டும், இல்லையென்றால் இப்பொழுது இருக்கிற நிலையை நாம் சீராக்க முடியாது என்பதை நன்றாக உணர்ந்து ஆலோசனை செய்யப்பட்டது. அவசரப்பட்டு ஒன்றும் முடிவு செய்துவிட வில்லை. அவர்கள் நன்றாக ஆராய்ந்து பார்த்துத் தான் ஸ்டேட் டிரேடிங் செய்வது என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். "ஸ்டேட் டிரேடிங்" செய் வது என்று முடிவு எடுத்தவுடன், ஸ்டேட் டிரேடிங் எப்படிச் செய்வது என்பது பற்றி பரிசீலனை செய்ய ஒரு நிபுணர் குழுவை அமைத்தார்கள். அந்த நிபுணர் குழு அதுபற்றி ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது. அந்த அறிக்கையும் சென்ற நாஷனல் டெவலப்மெண்டு கவுன்சில் கூட்டத் தில் விவாதிக்கப்பட்டது. மற்ற ராஜ்யங்களும் அது பற்றி நன்றாக ஆலோசனை செய்து, ஆராய்ந்து பார்த்து தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை தெரிவித்தார்கள். உடனேயே **State trading** எடுத்துக்கொள்ள முடியாது. அது பற்றி பரிசீலனை செய்ய ஏற்படுத்தப்பட்ட நிபுணர் குழு பூர்வாங்கமாக சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது. அதற்குப் பிறகு ஸ்டேட் டிரேடிங் கார்பரேஷன் வைத்து அதன் மூலம் ஸ்டேட் டிரேடிங் எடுத்துக் கொள்ளுவது என்பதையும், இன்னும் சில விவரங்களையும் முடிவு செய்திருக்கிறார்கள். பூர்வாங்கமாக எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்று அவர்கள் சொன்னது வியாபாரிகளுக்கு லைசென்ஸ் வழங்குவது, விலை நிர்ணயம் செய்வது, ப்ரொக்யூர்மென்ட் செய்வது என்ற மூன்றும் தான் அவர்கள் இதை சொல்லுவதற்கு முன்னதாகவே, அதை எதிர்பார்த்து நாம் அம்மாதிரி யான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டோம். பிறகு நாம் எதிர்பார்த்த

24th April 1959] [Sri M. Bhaktavatsalam]

படி அவர்கள் செய்த சிபார்சுகளையும் ஏற்றுக்கொண்டு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். ஆகவே, ஸ்டேட் டிரேடிங்கில் இது முதல் படி. இதைச் செய்தால் தான், பின்னால் ஸ்டேட் டிரேடிங்கை எடுத்துக்கொள்ள முடியும். இதைச் சரியாக செய்யவேண்டும். இதை நாம் செய்துகொண்டு வருகிறோம். நாம் செய்துகொண்டு வருவதில் எத்தனையோ இடைஞ்சல்கள் இருக்கின்றன, எத்தனையோ எதிர்ப்புகள் இருக்கின்றன. இது முற்றிலும் திருப்திகரமாக நடைபெறுகிறது என்று நாங்கள் சொல்லவில்லை. இப்பொழுது ப்ரொக்யூர்மெண்டு என்ன செய்கிறார்கள், மூன்றில் ஒரு பங்கு தான் ப்ரொக்யூர் செய்திருக்கிறார்கள். இப்பொழுது நெல் இல்லை, எங்கே இருக்கிறது என்றெல்லாம் சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். வாஸ்தவம் தான். 3, 4 நாட்களுக்கு முன் வரையில் 62,000 டன் வரையில் ப்ரொக்யூர்மெண்டு ஆகியிருக்கிறது. நாம் எதிர்பார்த்தது 2 லட்சம் டன் என்று பொதுவாக போட்டோம். ஒரு வருஷத்திற்கு 10 லட்சம் டன் மார்கெடிங் ஸர்பிளஸ், அதில் ஐந்தில் ஒரு பங்கு 2 லட்சம் டன் எடுத்துக்கொள்ளலாம் வருஷத்திற்கு என்று திட்டம் போட்டோம். இந்த அறுவடையிலே 62,000 சொச்சம் டன் 3, 4 நாட்களுக்கு முன்பு வரையில் ப்ரொக்யூர் செய்யப்பட்டிருக்கிறது. நாங்கள் எதிர்பார்த்தது லட்சம் டன். லட்சம் டன் ப்ரொக்யூர்மெண்டு செய்துவிடலாம். எப்பொழுது அவசியமோ அப்பொழுது தயங்காமல் வேறு யாரையும் எதிர்பார்க்காமல் நியாய விலைக் கடைகளை வைத்து நடத்தமுடியும். லட்சம் டன் இருந்தாலே நடத்த முடியும். லட்சம் டன் வரவேண்டுமென்று கூட இல்லை. எப்பொழுது, எங்கு நியாய விலைக் கடைகளுக்கு அவசியம் ஏற்படுகின்றதோ, அப்பொழுது தயங்காமல் நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்தலாம். அதுதான் ப்ரொக்யூர்மெண்டின் நோக்கம்.

இப்பொழுது "ஸோனை"ப் பற்றி சொன்னார்கள். "ஸோன்" என்றால் ஒரு ராஜ்யத்திலிருந்து மற்றொரு ராஜ்யத்திற்கு தானியம் போவதை தவிர்ப்பது என்பது தான். இந்த அதிகாரம் மத்திய சர்க்காரிடம் இருக்கிறது. இப்பொழுது இருக்கிற அரசியல் சட்டப்படி "எஸென்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட்" என்ற ஒரு சட்டத்தை மத்திய அரசாங்கம் அமுல் நடத்திக்கொண்டு வருகிறது. ஒரு ராஜ்யத்திலிருந்து மற்றொரு ராஜ்யத்திற்கு தானியங்கள் போகலாமா, அல்லது அதைத் தடுக்கவேண்டுமா என்பதைத் தீர்மானிக்க மத்திய அரசாங்கத்தினிடம் தான் அதிகாரம் இருக்கிறது. அவர்கள் தான் உத்தரவு போடவேண்டும். நான் முன்பு சொன்னதுபோல் தென்மண்டலத்தின் மூலம் ஒரு முக்கியமான அனுகூலம் இருந்துவருகிறது. அதாவது, தென் மண்டலத்திற்கு அப்பால் இந்த ராஜ்யங்களிலிருந்து தானியங்கள் மற்ற ராஜ்யங்களுக்கு பெர்மிட் இல்லாமல் போகமுடியாது. அது ஒரு பெரிய அனுகூலம். அதை நாம் மறுப்பதற்கு இல்லை. அது மட்டும் போதாது. தென்மண்டலத்திலுள்ள எல்லா ராஜ்யங்களும் ஒரே மாதிரியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டால் தான் இது சரியாக இருக்கும். தென் மண்டலத்தைச் சேர்த்துப் பார்த்தால் பற்றாக்குறை இல்லை. எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்தால் தேவைக்கு தகுந்த உற்பத்தி இருக்கிறது என்று கணக்கில் சரியாக இருக்கிறது. என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டாலும், "ப்ரொக்யூர்மெண்டு" அல்லது "பிரைஸ் கண்டிரோல்" எந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டாலும், நான்கு ராஜ்யங்களும் ஒரே மாதிரியாகச் செய்ய வேண்டும். இப்பொழுது அதுமாதிரி செய்யப்படவில்லை. அதைத்தான் நான் முன்பு இந்த மன்றத்திலே குறிப்பிட்டுச் சொன்னேன். மத்திய அரசாங்கத்திடமும் தெரிவித்திருக்கிறோம் இது சரியாக நடைபெறவில்லை என்று. ஒவ்வொரு ராஜ்யமும் தனி மண்டலமாக இருந்தால் நல்லது என்று ஆந்திர ராஜ்யமும் அபிப்பிராயப்பட்டது. நான் கலந்தபொழுது, மற்ற இரண்டு ராஜ்யங்களும்கூட அதை ஒப்புக்கொண்டன. அதற்குப்

[Sri M. Bhaktavatsalam] [24th April 1959

பிறகு அவர் மாற்றிக்கொண்டார்கள். நான் பேசியபொழுது தென் மண்டல முறை சரியாக நடக்கவில்லை என்று ஒப்புக்கொண்டார்கள். ஆந்திர ராஜ்யமும், மற்ற ராஜ்யங்களும் ஒப்புக்கொண்டார்கள். எங்களிடம் 5, 6 லட்சம் டன் உபரியாக இருக்கிறது, தென் மண்டலமாக இருந்தால் நாங்கள் ப்ரொக்யூர் செய்ய தயாராக இல்லை, தனித் தனி ராஜ்ய மண்டலமாக இருந்தால் ப்ரொக்யூர் செய்கிறோம், உங்களுக்கு வேண்டிய நெல்லூர் அரிசியைக் கொடுக்கிறோம் கேரளாவிற்கும் கொடுக்கிறோம் என்று ஆந்திர ராஜ்ய சர்க்கார் சொன்னார்கள். அப்பொழுது மற்ற ராஜ்யங்களும் சரி என்று சொன்னார்கள். இப்பொழுது அவர்களுக்கு ஒரு கவலை. தனித்தனி மண்டலமாகப் பிரிந்து விட்டால், அரிசி வராமல் போய்விட்டால் என்ன செய்வது என்று கவலை அவர்களுக்கு. தென்மண்டலமாக இருந்தாலும் சரி, தனி ராஜ்ய மண்டலமாக இருந்தாலும் சரி, மற்ற ராஜ்யங்களுக்குக் கொடுப்போம். நமது ராஜ்யம் வேறு, மற்ற ராஜ்யம் வேறு என்று வேறு ராஜ்யம் பட்டினி கிடப்பதை யாரும் பார்த்துக்கொண்டு இருக்கமாட்டார்கள். எந்த ராஜ்யமாக இருந்தாலும், எல்லோருக்கும் பொறுப்பு உண்டு. தனியாகப் பிரிந்து விட்டால் கேரளாவுக்கு கொஞ்சம் குறைவாக போகும். இப்பொழுது அதிகமாகப் போயிற்று. அதனால் கவலைப்படவில்லை. நாம் கேரளாவிற்கு எப்பொழுதும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஒரு லட்சம் டன் கொடுக்கிறோம். $1\frac{1}{2}$ லட்சம் டன் கூட கொடுக்கலாம். தனி மண்டலமாக பிரிந்துவிட்டால் ஆந்திராவிலிருந்து நமக்கு அரிசி அதிகமாக வரும். கேரளாவிற்கும் கொடுக்கிறோம் என்று ஆந்திரர்கள் சொல்லுகிறார்கள். இப்பொழுது இருக்கிற அனுபவத்தை வைத்துக்கொண்டு பார்த்தால், தனித்தனி மண்டலமாக இருந்துவிட்டால் அந்தந்த ராஜ்யத்திற்கு வேண்டியதை கணக்குப்பார்த்து அந்தந்த ராஜ்யத்தில் ஸ்டேட் டிரேடிங்குக்கு ஏற்பாடு செய்யலாம். ஸ்டேட் டிரேடிங்கை எதிர்ப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அது சரிப்படாது. ஸ்டேட் டிரேடிங் மூலம் இருக்கிற தானியத்தை சேகரித்து மற்ற ராஜ்யங்களுக்கும் கொடுக்கலாம், மற்ற ராஜ்யங்களிலிருந்தும் வாங்கலாம். அதுதான் நம்முடைய சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் சிறந்த ஏற்பாடு. இந்த ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், அதுதான் நல்ல ஏற்பாடு என்று இப்பொழுது எங்களுக்கு தோன்றுகிறது. ஆனால், மத்திய அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. கேரள அரசாங்கம் முதலில் பேசும்பொழுது சரி என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது அவர்களுக்கு ஒரு கவலை. இப்பொழுது தஞ்சாவூர் அரிசி அங்கே போகிறது, ஆந்திராவிலிருந்தும் போகிறது, போதாவிட்டால் மத்திய அரசாங்கத்தையும் கேட்கலாம், எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. ஆனால், தனித்தனி ராஜ்ய மண்டலமாக பிரிந்துவிட்டால் அவர்களுக்கு அரிசி வருமோ, என்னவோ என்று ஒரு கவலை. மத்திய அரசாங்கத்திற்கும் தங்கள் பொறுப்பு அதிகமாகப் போய்விடுமோ என்று அவர்களுக்கும் சங்கடமாக இருக்கிறது. நாம் அதையெல்லாம் ஆராய முடியாது. தென் மண்டலத்தையே வைத்துப் பார்க்கலாம், உங்களுக்கு அரிசி கிடைக்காவிட்டால் நாங்கள் வாங்கிக்கொடுக்கிறோம் என்று மத்திய அரசாங்கம் சொல்லுவது, இப்படியெல்லாம் பேச்சு இருக்கிறது. நான் இப்பொழுது விளக்குவதெல்லாம் என்னவென்றால் இப்பொழுது இது ஒரு பிரச்னையாக இருக்கிறது. நாங்கள் ஏதோ அவர்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ளவில்லை, அது இல்லை, இது இல்லை என்று சொல்வது என்பது இல்லை. தென் மண்டலமாக இருந்தால் இந்த வகையிலே செய்யவேண்டுமென்று சொல்லுகிறோம். எங்களுடைய அபிப்பிராயம் தனி மண்டலமாக இருந்தால் நலம் என்பது தான், அதையும் எப்படிச் செய்வது என்பதையும் சொல்லியிருக்கிறோம். இப்பொழுது பிரச்னையெல்லாம் விலையை குறைக்கவேண்டும். விலையைக் குறைப்பதற்கு விலைக் கட்டுப்பாடு செய்யவேண்டும். பிரைஸ் கண்டிரோல் செய்தால் தானியங்களை உற்பத்தி செய்கிறவர்களுக்கு விலை கொஞ்சம் குறைகிறது. இந்தக் கண்டிரோல்

24th April 1959] [Sri M. Bhaktavatsalam]

இல்லாமல் இருந்தால் அதிக விலை கிடைக்கிறது. விலைக் கட்டுப் பாட்டினுல் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய விலை ஓரளவுக்குக் குறைகிறது. விலை குறைந்தால் அவர்களுக்கு கஷ்டம் தான். ஒரு பெரிய வியாபாரி, ரொம்ப அனுபவப்பட்டவர் அவர் சொன்னுராம். இந்தத் தடவை எவ் வளவு லாப நஷ்டம் என்று கேட்டபொழுது இரண்டு லட்சம் நஷ்டம் என்று சொன்னுராம். எப்படி என்று கேட்டால், " முன்னுல் 6 லட்சம் லாபம் வந்தது, இந்த வருஷம் 4 லட்சம் தான் லாபம் வந்தது, அதனுல் 2 லட்சம் எனக்கு நஷ்டம் " என்று சொன்னுராம். அம்மாதிரி சொல்லுவது சகஜம். நான் ஒன்றும் குறையாகவோ, அல்லது பரி காசமாகவோ சொல்ல வில்லை. விவசாயிகள் கஷ்டப்பட்டு வேலை செய் கிருர்கள். அவர்கள் அதிகமாக லாபம் சம்பாதிப்பவர்கள் அல்ல. ஆனுல், அவர்களுக்கும் கட்டுபடியாகவேண்டும். கொஞ்சம் விலை குறைந்தால் அவர் களுக்கு கஷ்டம் தான். ஆனுல், மற்ற அம்சத்தையும் பார்க்கவேண்டும். வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் ஏழை மக்கள். " ரீடைல் பிரைஸ் " எங்களுக்கு கட்டுபடியாகாது, விலை அதிகம் என்று சொல்லுகிருர்கள். முன்னுல் நியாய விலைக் கடையிலே அரிசி படி 11½ அணுவுக்கு விற்றுக்கொண்டி ருந்தோம்.

இப்போது நிர்ணயித்திருக்கிற விலையின்படி ரீட்டெயில் விலையில் 13 அல்லது 13½ அணுவுக்குத்தான் விற்க முடியும். அதற்குமேல் விற்க வேண்டும் என்று யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். தான்யங்களை உற்பத்தி செய்கின்றவர்கள் வேண்டுமானுல் இப்போது நிர்ணயித் திருக்கின்ற விலை மிகவும் குறைவாக இருக்கிறது என்று சொல்லலாம். ஆனுல் நடுத்தர மக்கள் வாங்கக்கூடிய அளவில் இப்போது இருக்கின்ற விலையை அதிகப்படுத்தி 15 அணு என்ருே ஒரு ரூபாய் என்ருே நிர்ணயிக்க வேண்டும் என்று இந்த சபையில் இருக்கின்ற யாரும் சொல்ல முன் வர மாட்டார்கள். இப்போது இருக்கின்ற நிலையில் 13 அணு என்றுதான் நிர்ணயிக்க முடியும். அதற்கு மேல் விலையை ஏற்ற முடியாது. இதைப் பற்றி **Food Advisory Committee**-யில் சொன்ன கருத்துக்களை எல்லாம் கவனிக்கவில்லை என்று கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னுர்கள். இந்த விலையை நாம் மட்டும் நிர்ணயித்துவிடவில்லை. ஆந்திரா, மைசூர், கேரளம் முதலிய ராஜ்யங்களுடன் கலந்து ஆலோசித்துத் தான் இந்த விலை நிர்ணயிக்கப்பட்டது. மற்ற ராஜ்யங்களில் கூட இதன் அடிப்படையில்தான் விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இது மிகவும் குறைந்த விலை என்று சொல்லுவதற்கில்லை. இன்னொரு விஷயம் என்னவென்ருல், பின்னுல் ஒரு காலத்தில் விவசாயிகளுக்கு கட்டுப்படி யாகாத முறையில் விலைவாசிகள் வருமானுல் அந்த சமயத்தில் குறைந்த பட்ச விலையை நிர்ணயம் செய்யலாம் என்று மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. நாமும் ஒப்புக்கொண்டிருக்கிருேம். ஆகவே இப்போதுள்ள விலையைவிட இன்னும் குறைந்த அளவில் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று வருகின்ற காலத்தில் அப்போதும் எதிர்ப்பு இருக்கும் என்று தான் நினைக்கவேண்டியிருக்கிறது. உற்பத்திச் செய்கின்றவர்களுக்கு இன்று நிர்ணயித்திருக்கக்கூடிய விலை குறைவாக இருக்கிறது என்று நினைக்கலாம். விலை எந்த சமயத்திலும் ஒரே மாதிரி யாக இருக்கும் என்று சொல்ல முடியாது. விலை திடீரென்று ஏறும், இறங்கும். ஆகவே எல்லோரும் ஒப்புக்கொண்டு ஒரு நியாயமான விலையை நிர்ணயித்திருக்கின்ற நேரத்தில் இது மிகவும் குறைவாக இருக்கிறது என்று சொல்வது அவ்வளவு சரியல்ல என்பதைத்தான் நான் சொல்ல விரும்பு கிறேன். இதைப்பற்றி கனம் அங்கத்தினர் ஆலோசித்துப் பார்க்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். கனம் அங்கத்தினர் சுப்பையா முதலியார் அவர்கள் கொஞ்சம் ஆத்திரத்தோடு சொன்னுர்கள். விவசாயிகளுக்கு வாங்க வேண்டிய சாமான்களின் விலை எல்லாம் உயர்ந்து கொண்டே போகிறது. அதுமட்டுமல்ல, தான்யங்கள் வாங்க வேண்டுமென்ருல்

[Sri M. Bhaktavatsalam] [24th April 1959

அதுவும் விலை உயர்ந்துகொண்டிருக்கிறது, மூட்டை 48 ரூபாய் 50 ரூபாய் என்று வாங்கவேண்டியிருக்கின்றது என்று ஆத்திரத்தோடு சொன்னார்கள். பின்னால் அவர்களே சொன்னார்கள், விவசாயிகளுக்கு இப்போது நிர்ணயித்திருக்கின்ற விலை மிகவும் குறைவாக இருக்கிறது என்றும் பேசினார்கள். இந்த விலையானது அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கிறது. ஹாட் அண்ட் கோல்ட் மாதிரி, உதகையில் இருக்கும் சீதோஷ்ணத்தை மாதிரி, சில சமயங்களில் வெயில் அடிக்கிறது, கொஞ்ச நேரத்திற்குள்ளாக குளிர் வந்து விடுகிறது, அதே நிலைமையில் விலையும் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கிறது. கொஞ்ச காலத்திற்கு முன்னால் இருந்த நிலைமையைப்பற்றி அங்கத்தினர்களுக்கு நினைவு இருக்கும் என்று நம்புகிறேன், எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. கண்டிப்பான ரேஷன் இருந்து கொண்டிருந்தது, ப்ரொக்யூர்மெண்ட் எல்லாம் கண்டிப்பாக நடந்துகொண்டிருந்தது, லெவி ஸிஸ்டம் இருந்து கொண்டிருந்தது, திறமையான முறையில் கண்ட்ரோல் முறை நடந்துகொண்டிருந்தது, அந்த சமயத்திலும்கூட கள்ள மார்க்கெட்டில் தான்யங்களை விற்றுக் கொண்டுதான் இருந்தார்கள் பலர். சென்னை நகரத்தில் பார்த்தால் கூடை கூடையாக தான்யங்கள் விற்றுக்கொண்டிருப்பதை நானே பார்த்திருக்கிறேன். இதற்காக போடப்பட்டிருந்த தண்டனைகளை எல்லாம் பலர் அனுபவிக்கவும் செய்தார்கள். அந்த சமயத்திலும்கூட நெல் எல்லாம் நாட்டில்தான் இருந்துகொண்டிருந்தது. அதே முறையில்தான் இன்று நம் நாட்டிலுள்ள நெல் எங்கேயும் போய்விட வில்லை. இன்றைக்கு 65 ஆயிரம் டன் வாங்கியிருக்கிறோம் என்று சொன்னேன். இந்த நிலைமையிலும் ஓரளவு கேரளாவுக்கு அரிசி போய்க்கொண்டுதான் இருக்கிறது. அது வாஸ்தவந்தான், ஆனாலும் நம் நாட்டில் நெல் இல்லாமல் இல்லை. விவசாயிகளின் நெல்லை வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இப்போது அவர்கள் விற்பதற்கு ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் விலை உயராதா என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி அவர்கள் எத்தனை நாட்களுக்கு இருக்க முடியும்? எப்படியும் விற்றுத்தான் ஆக வேண்டும். வியாபாரிகளிடத்தில் நெல் ஒன்றும் இல்லை என்று பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட சொன்னார்கள், வியாபாரிகளிடத்தில் தான்யங்கள் அதிகமாக இல்லை. அவர்களுக்கு இப்போது இருக்கின்ற நிலைமையில் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்றும் தெரிவித்தார்கள். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், வியாபாரிகளிடத்தில் நெல் இல்லை என்று யாரும் சொல்லிவிட முடியாது. எனக்குத் தெரியும், இந்த பகுதிக்கு அடுத்ததாக இருக்கும் ஜில்லாவை சேர்ந்த ஒரு வியாபாரியிடத்தில் ஒரு லட்சம் மூட்டை தான்யங்கள் இருந்தது. அவைகள் பல பல இடங்களில் வைக்கப்பட்டிருந்தது. இவர் வால்பாறை பிளான்டேஷன் அஸோஸியேஷனுக்கு சப்ளை செய்ய வேண்டியவர். இவரிடத்தில் போய் தான்யங்கள் கொடுக்கவேண்டும் என்று கேட்டதற்கு, சர்க்கார் இப்போது கொண்டு வந்திருக்கின்ற முறைகளினால் எங்களுக்கு பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே என்னால் உங்களுக்கு சப்ளை செய்ய முடியாது என்று பிளாண்டேஷன் அஸோயிஸியேஷன் நிர்வாகஸ்தர்களிடத்தில் சொல்லிவிட்டதாக எனக்கு தகவல் வந்தது, அதோடு அவர் பல இடங்களிலும் மூட்டைகளை சேமித்து வைத்திருக்கிறார், அதை சர்க்கார் கண்டு பிடித்து எடுக்க வேண்டும் என்றும் தகவல் கிடைத்தது. அந்த தகவல் கிடைத்த பின்னால் மறைத்து வைத்திருந்த தான்யங்களை எல்லாம் ரெக்விஸிஷன் செய்ய வேண்டும் என்று ஆர்டர் போட்டோம். இவ்விதம் ஆர்டர் போட்டதற்குப் பின்னால் அந்த வியாபாரியே எங்களிடம் ஓடி வந்தார். நான் கொடுக்கமாட்டேன் என்று சொல்லவில்லை, ரைஸ்-மில்லில் அரைப்பதற்காக வைத்திருந்தேன், ரைஸ் மில்லில் அரைத்து அரிசியாக கொடுக்கலாம் என்று எண்ணியிருந்தேன் என்று பல சமாதானங்களை சொன்னார். அவ்விதம் சொன்னதில் உண்மையில்லை என்பது அவர் ரைஸ் மில்லில் மூட்டைகளை

வைத்திருக்கவில்லை என்பதிலிருந்து தெரிந்தது. பின்னால் இதற்கு தனியாக வழக்கு போடப்பட்டிருக்கிறது. அது எப்படியிருந்தாலும் இந்த வியாபாரியிடத்தில் ஒரு லட்சம் மூட்டைகள் இருந்தது என்பது உண்மை. ஆகவே வியாபாரிகளிட்த்தில் தான்யங்களே இல்லை என்று சொல்லுவதை நம்புவதற்கில்லை. சிலரிடத்தில் இல்லாமல் இருக்க லாம். இருந்தாலும் பெரும்பாலும் வியாபாரிகள்டத்தில் தான்யங்கள் இருக்கத்தான் செய்கிறது. அதே போன்றுதான் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளிடத்திலும் தான்யங்கள் இருக்கின்றது. வியாபாரிகளை பொறுத்தமட்டில் அவர்களுக்கு அதிகமான அளவில் லாபம் கிடைக்கவில்லையே என்ற வருத்தம் இருக்கலாம், அந்த வருத்தம் இப் போது எதிர்ப்பாக மாறுகிறது. இப்போது இருக்கின்ற விலை நியாயமாகத் தான் இருக்கிறது என்று எத்தனையோ வியாபாரிகளும் என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள், விவசாயிகளும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதிகமாக லாபம் கிடைக்கவில்லையே என்ற /வருத்தத்தின் காரணமாக இந்தக் கொள்கையைப்பற்றி வேண்டுமானால் எதிர்க்கலாம். அதைப்பற்றி நாம் கவலைப்படுவதற்கில்லை. கடைசியாக பேசிய அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், இந்த அரசாங்கம் விவசாயிகளுக்காக ஒன்றும் செய்ய வில்லை என்று. அரசாங்கம் இந்த வேலையை எடுத்துக்கொள்வது, அரசாங்கத்திற்கு வேறு எந்த வேலையும் இல்லாமல் அல்ல, இப்போது இருக்கின்ற பிரச்னையை எப்படி தீர்ப்பது என்பதைப்பற்றி ஆராய்ந்துதான் விலை அதிகப்படக்கூடாது, அதை தடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் விலையை கட்டுப்படுத்த வேண்டும் என்று நினைத்து விலையை நிர்ணயம் செய்திருக்கிறோம். அதோடு உற்பத்தியை அதிகமாக பெருக்கு வதற்காக வேலை செய்து கொண்டிருக்கிறோம். நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்த அளவில் பற்றாக்குறை என்பது இல்லை. ஆந்திராவை எடுத்துக் கொண்டால் அவர்களும் தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள், அதோடு ஒன்றரை லட்சம் டன் தான்யங்கள் வெளியே கொடுக்கலாம் என்று சொல்லுகிறார்கள். தென் ராஜ்யங்களுக்கு மட்டுமல்ல, வங்காளத்திற்குகூட கொடுக்கலாம் என்று சொல்லிக்கொண்டி ருக்கிறார்கள். நேற்றுகூட கனம் அங்கத்தினர்கள் பத்திரிகை மூலம் பார்த்திருப்பார்கள், ஆந்திர முதல் அமைச்சர் அவர்கள் கூறியிருக் கிறார்கள், ஆந்திராவிலிருந்து கேரளத்திற்கு அதிகமாக அரிசி போய்க் கொண்டிருக்கிறது, அதன் காரணமாக விலை அதிகமாகத்தான் போய்க் கொண்டிருக்கிறது என்று கவலைப்படக்கூடிய முறையில் சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே விலை உயர்வு ஏற்படுவது என்பது பற்றாக்குறை ஏற்படுவதினால் அல்ல, பற்றாக்குறை இல்லாத ஆந்திராவில்கூட விலை அதிகமாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது என்று நமக்குத் தெரிகிறது. இந்த விலை நிச்சயமாக குறைந்துதான் ஆகவேண்டும். விலை எல்லா ராஜ்யங்களிலும் ஏகதேசம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற அளவில்தான் அகில இந்திய நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்ஸில் கூட்டத்தில் ஸ்டேட் டிரேடிங்-யைப்பற்றி ஆலோசனை செய்து ஒரு குறிப்பிட்ட விலையை அதிலுள்ள அங்கத்தினர்கள் நிச்சயித்தார்கள். அந்த முடிவை நாமும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகவே வியாபாரிகளை கஷ்டப் படுத்துவதற்காக நாம் இந்த கொள்கையை கொண்டு வரவில்லை. வியா பாரிகள் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும், அதன் மூலமாகத்தான் தங்களுடைய வியாபாரம் பெருகும் என்பதை அவர்கள் உணர வேண்டும். தங்களுடைய லாபம் குறைந்து விடுமே, அதற்கு என்ன செய்வது என்று மட்டும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் தங்க ளுடைய லாபத்திற்கு குறுக்கே யார் நின்றாலும் அவர்களுக்கு ஆத்திரம் வருகிறது. அவ்விதம் ஏற்படுகின்ற ஆத்திரம் எதிர்ப்பாக மாறுகிறது. அவர்கள் எல்லாம் இங்கேகூட வந்திருப்பதாக பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் என்னிடம்கூட வந்திருக்கிறார்கள். அவர்கள் பல கோரிக்கைகளை சொல்லுகிறார்கள். அதில் உண்மையிலேயே ஏதாவது

[Sri M. Bhaktavatsalam] [24th April 1959

குறைகள் இருந்தால் அதை நீக்குவதற்கு அரசாங்கம் நிச்சயமாக முயற்சி செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அரசாங்கத்தி லிருந்து அடிக்கடி உத்தரவுகள் போட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. இந்த உத்தரவுகள் எல்லாம் புதுப்புது உத்தரவுகள் அல்ல. முதலாவதாக போடப்பட்ட உத்தரவில் ஏதாவது சங்கடங்கள் இருந்தால், அதில் ஏதாவது சந்தேகங்கள் ஏற்பட்டால் அவைகளை நீக்கு வதற்காக, விளக்கம் கொடுக்கின்ற முறையில் பல உத்தரவுகளைப் போட்டுக் கொண்டிருக்கிறோம்.

4-30 p.m. புதிய புதிய உத்திரவு ஒன்றும் இல்லை. சலுகை எவ்வளவு தூரம் அளிக்கக்கூடுமோ—விவசாயிகளுக்கோ அல்லது வியாபாரிகளுக்கோ—அந்த அளவுக்குத்தான் நாம் புதிது புதிதாக உத்திரவு போடுகிறோமே தவிர, வேறு வகையிலே, குழப்பம் ஏற்படக்கூடிய அளவிலே எவ்விதமான உத்தரவும் ஸிவில் ஸப்ளைஸ் இலாகா மூலம் போடப்படுவதில்லை.

உதாரணமாக, மில்லிலே அரிசி குத்துகிறவர்களுக்கு கொஞ்சம் சலுகை இருக்கிறது. இவ்வளவு சலுகை இருந்தாலும் அவர்கள்தான் எதிர்ப்பு செய்கிறார்கள். அவர்களுக்கு நிர்ணயித்திருக்கும் விலை கொஞ் சம் ஒரு மாதிரியாக இருக்கிறது என்று நெல் விற்கக் கூடியவர்களும் நெல் வியாபாரிகளும் சொன்னார்கள். அதை நாம் பரிசீலனை செய்து பார்த்தோம். அதிலே கொஞ்சம் ஆதாரம் இருக்கிறது என்று புலப் பட்டது. சமீபத்திலே ஒரு உத்திரவு போட்டோம். வண்டிச் சத்தம் இருக் கிறது என்றார்கள். இப்பொழுது நாம் நிர்ணயித்திருக்கும் விலைக்குமேலே மணங்குக்கு 45 நயே பைசே அதிகப்படுத்துவது என்று உத்திரவு போட்டிருக் கிறோம். டெலிவரி கொடுப்பதற்கு 55 நயே பைசேதான் வருகிறது. நெல் வியாபாரம் செய்கின்றவர்கள் நெல்லாகக் கொடுக்கவேண்டும் என்று விரும் புகிறார்கள். நெல் அதிகமாக வாங்குவதுதான் நமக்கும் பிரியம். அரிசி கெட்டுப்போய்விடும் என்பது வாஸ்தவம். நெல் வியாபாரி சொல்வதில் ஆதாரம் இருக்கிறது என்று ஏற்பட்டது. 45 நயே பைசே மணங்குக்கு கணக்குப்பார்த்து அதை அதிகப்படுத்தியிருக்கிறோம். முன்பெல்லாம் நெல் கொடுக்கின்றவர்களுக்கு அந்தச் சலுகை இல்லை, அரிசிக்குத்தான் இருக்கிறது என்று சொன்னார்கள். மேலும், கணக்குப் பார்த்து, எப். ஓ. ஆர். டெலிவரி என்று செய்திருக்கிறோம். விவசாயிகள் நேரடியாக தானியங்களைக் கொடுக்க வேண்டுமென்று வந்தாலும் 45 நயே பைசேவும், பத்து நயே பைசேவும் அந்த அனுகூலம் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டது. விவசாயிகள் இதைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

இம்மாதிரி நிறைவேற்றுகின்ற நடவடிக்கைகளிலே, அந்த வியாபாரி கள் என்னிடம் வந்து பேசினார்கள். இன்று மாலையிலும் வந்து பேசப் போகிறார்கள். ப்ளாண்டர்ஸ், ஒர்க்கர்ஸ் ரெப்ரஸன்டேடிவ்கள் வருகிறார் கள். நாம் எல்லோரும் கேட்கிறோம். எதில் நியாயம் இருக்கிறதோ, எதிலே அவசியம் இருக்கிறது என்று புலப்படுகிறதோ அந்த வகையிலே தான் உத்தரவுகளை மாற்றுகிறோம்.

அரிசி வாங்குவதிலே எச்சரிக்கை செய்தார்கள். எச்சரிக்கை செய்தவர் களுக்கு நன்றி பாராட்டுகிறேன். எங்களுக்கும் அந்தக் கவலை இருக்கிறது. எச்சரிக்கையை நல்ல மனதோடு, அரசாங்கத்திற்குக் கஷ்டம் வரக்கூடாது என்று செய்தால் சரி. ஆனால், "ஏண்டா இதைச் செய்கிறாய்? இதையெல்லாம் விட்டுவிட்டு சும்மா இரு" என்ற நோக்கத்தோடு பயப் படுத்தக்கூடிய அளவிலே எச்சரிக்கை செய்வதிலே பயன் இல்லை. அரிசி வாங்கி வைத்து, அது கெட்டுப் போனால், நஷ்டம் ஏற்படும், அபவாதம் ஏற்படும், குறைபாடு ஏற்படும் என்பதுபற்றி எனக்கே கவலை இருக்கிறது. ஆகையால், கூடிய வரையில் அரிசி வாங்குவதிலே விவசாய இலாகா

மார்க்கெட்டிங் ஆபீசர்களைக் கொண்டு தரத்தைப் பார்த்துத்தான் வாங்கச் சொல்லியிருக்கிறோம். இதெல்லாம் பார்த்து வாங்குகி றோம். பாதி நெல்லாக வாங்குகிறோம். நெல் கெட்டுப்போகாது என்பதற்காக அரிசி வாங்குவதையும் அப்போதைக்கப்போது கவனித்துக் கொண்டு வருகிறோம். வாங்கி சேமித்திருக்கும் அரிசி கெட்டுப் போகக்கூடிய நிலைமை எப்போதாவது ஏற்படும் என்று தோன்றினால், பார்த்துக்கொண்டே வருகிறோம். அதை உடனே விற்பதற்குக்கூட செய்கி றோம். அம்மாதிரியான நிலை ஏற்பட்டால் எடுத்து கட்டுப்பாடான விலைக்கு விற்று விடுகிறோம். அதிலும் கவனம் செலுத்திக்கொண்டுதான் வரு கிறோம்.

ப்ரொக்யூர்மெண்ட் செய்வதில், 75 பங்கு வாங்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஐம்பது சதவிகிதம் ப்ரொக்யூர்மெண்ட் என்று வைத் திருக்கிறோம். கனம் அங்கத்தினர் திரு. சின்னதுரை அவர்கள் குறிப் பிட்டது போல், தொழிலாளர்களுடைய கூட்டுறவு ஸ்டோர்ஸ், பள்ளிக் கூடங்கள், கல்வி ஸ்தாபனங்கள், ஹாஸ்டல்கள் இவைகளுக்கு வேண்டிய உணவுத் தேவை, மற்ற ஸ்தாபனங்களின் உணவுத் தேவை, இதற் கெல்லாம் 25 சதவிகிதத்தை அப்படியே அவர்களுக்கு விற்று விடுகிறோம். எடுத்துக் கொண்டு எங்கேயோ போவது இல்லை. என்னிடம் பார்த்த பிரமுகர்களுக்குச் சொன்னேன். நாங்கள் எடுத்துக் கொண்டு போகவில்லை. இங்கே விற்கிறவர்களுக்குப் பற்றாக்குறை நிலைமை தெரியும். எங்கேயோ வெளியிலே போவது இல்லை. இருபத்தைந்து சதவிகிதம் இங்கேயே சுற்றிவருகிறது. கட்டுப்பாடு விலைக்கு விற்கவேண்டும். "கட்டுப்பாடு விலைக்கு விற்கவேண்டுமென்றால், அதிக விலைக்கு நாங்கள் வாங்க வேண்டியிருக் கிறது" என்று சொன்னார்கள். நேற்று சொன்னேன். என்னிடம் வந்த பிரமுகர்களும் ஒப்புக் கொண்டார்கள். கட்டுப்பாடு விலைக்கு நெல் வேண்டு மென்றால் அதற்கும் நாங்கள் ஏற்பாடு செய்கிறோம். நெல் வியாபா ரிக்கு நாற்பத்தைந்து நயே பைசே அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். வியாபாரிகள் வாங்கிக் கொள்ள முடியும். அப்படியும் வாங்குவதற்குக் கஷ்டம்இருந்தால், நாங்கள் எங்களுடைய அதிகாரிகளைக் கொண்டு, இன்ன ரைஸ் மில், இவ்வளவு கபாசிடி, எவ்வளவு வேண்டும் என்று கணக்கிட்டு அரிசியை நாங்கள் கண்ட்ரோல் ப்ரைசுக்கு வாங்க ஏற்பாடு செய்து இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. இப்பொழுது புதிய ஏற்பாட்டின்படி உத்தரவு போடப் பட்டிருக்கிறது. இம்மாதிரி 25 சதவிகிதம் வாங்குவதிலே கூட்டுறவு ஸ்டோர்ஸ், மற்ற ஸ்தாபனங்களுக்கு கொடுப்பதோடுகூட, சிற்சில இடங்களில் குறிப்பிட்ட ரீடெயில் வியாபாரிகளுக்கு இந்த கண்ட்ரோல் ப்ரைசுக்கு அவர்கள் கொடுக்கவேண்டும். நாங்கள் நியாய விலைக் கடைகள் வைக்காம லேயே இப்போதே சிற்சில இடங்களில் ரீடேயில் வியாபாரிகள் குறைந்த விலைக்கு, நியாய விலைக்கு விற்கவேண்டும், அதிலும் அவர்களுக்கு வாங்கிக் கொடுப்பதை கலெக்டர் கவனிக்க வேண்டும் என்று நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

ஆந்திராவிலேயிருந்து வருவதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கே பச்சை அரிசி அதிகமாகத் தேவைப்படுகிறது. சாதாரணமாக வருவதில்லை. அங்கே அவர்கள் வாங்கிக் கொடுப்பதை ஒப்புக் கொள்ளவில்லை. இப்பொ ழுது மத்திய அரசாங்கம் சொல்லி வருகிறது. "ஸோனல் கவுன்சில் இருந் தால் நாங்கள் வாங்கிக்கொடுக்கிறோம்" என்று சொன்னார்கள். இதற்கு முன் அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. அரிசியாக வரைவழைக்கிறோம். "அரிசியாக வரவழைப்பதில், நீங்கள் ப்ரொக்யூர்மெண்ட் செய்யவேண் டாம்" என்று சொன்னார்கள். வெளியிலே இருந்து வருகிறது. ப்ரொக்யூர்மெண்ட் பண்ணுவதில்லை. ஆந்திராவிலிருந்து வந்து கொண்டிருக்கிறது.

[Sri M. Bhaktavatsalam] [24th April 1959

காலையிலே வந்தவர்கள் சொன்னார்கள்—" நாங்கள் நெல்லை வாங்குகிறோம், மில்லிலே குத்துகிறோம். அதற்குப் ப்ரொக்யூர்மெண்ட் வேண்டாம் " என்று சொல்கிறார்கள். நான் நேற்று சொன்னேன். " தஞ்சாவூர் நெல் இருக்கிறது, அதைக் கண்ட்ரோல் விலைக்குக் கொடுக்க நாங்க ஏற்பாடு செய்கிறோம், நீங்கள் அங்கே போய் வாங்க வேண்டாம் " என்று. ஆந்திராவிலிருந்து அரிசி வாங்க வேண்டுமென்றால், ஆந்திரா அரிசி என்று தெரிகிறது. நெல்லைக் குத்தினால், எது ஆந்திரா அரிசி, எது மற்ற அரிசி என்று எப்படித் தெரியும் ? சில வியாபாரிகள், அதிகமாகப் புகார் செய்கிறார்கள். அவர்களுக்கு என்ன ஆத்திரம் என்றால், ஏன் ப்ரொக்யூர்மெண்ட் செய்ய வேண்டும் ? என்பது. ப்ரொக்யூர்மெண்ட் செய்யாவிட்டால் விலையைத் தூக்கலாம் என்பது அவர்களுக்கு. விலையைத் தூக்கி விற்றாலும் விவசாயிகளுக்குப் பணம் வருகிறதா என்றால் விவசாயிகளுக்குப் பணம் வரவில்லை. அதுகூட இல்லை. இவர்கள் விற்பது மட்டுமல்ல, இன்னும் அதிக விலைக்குக் கேட்டால், கேரளாவுக்கு அளவு கடந்து விற்றுக்கொண்டிருக்கலாம் என்பது, விற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு வியாபாரம் நடக்கவேண்டும். எங்கே போனால் என்ன, எங்கே வந்தால் என்ன, யார் அதிகம் கொடுக்கிறார்களோ அங்கே போகட்டும் என்பது வியாபாரிகளுக்கு. அதைத் தவிர்ப்பதற்குத்தான் 50 சதவிகிதம், 75 சதவிகிதம் என்று நாம் வைத்திருக்கிறோம். கண்ட்ரோல்ட் ப்ரைசுக்கு வாங்கும்போது கண்ட்ரோல்ட் ப்ரைசுக்கு நெல் அவர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்கிறோம். இதெல்லாம் அவர்களுக்கு திருப்தி அளிப்பதில்லை. " எங்களுக்கு மில் கூலி கிடைத்தால் போதும் " என்று சில இடத்திலே சொல்கிறார்கள். சில பேருக்கு இதில் திருப்தி இல்லை. இஷ்டம் போல் விற்கலாம் என்பதற்காக அரசாங்கத்திற்கு உபதேசம் செய்ய முற்படுகிறார்கள். நாம் என்ன செய்வது ? " ஒன்றும் செய்ய வேண்டாம் சும்மா இருங்கள் " என்று நமக்கு யோசனை சொல்கிறார்கள். சில விவசாயிகள் தங்கள் இஷ்டம்போல விற்கலாம் என்று நினைக்கலாம். கொஞ்சநாள் அது நன்மை போல தெரியும். அதன் பிறகுதான் அதனுடைய விபரீதம் என்ன என்பதை அவர்கள் உணருவார்கள். தற்காலம் லாபம் கிடைக்கிறது என்பதற்காக வியாபாரிகளைச் சும்மா விட்டு விடவேண்டுமென்று நினைக்கிறார்கள். சும்மாவிட்டால் எங்காவது வியாபாரம் செய்யலாம் என்பது அவர்களுக்கு. அதனால் தான், "ஒன்றும் செய்யாதேயுங்கள் " என்று சொல்கிறார்கள். " வெஸ்டட் இன்ட்ரஸ்ட் " என்று சொல்கிறார்களே, அதுதான் இதில் இருக்கிறது. சிலபேர் சொல்வதைக் கேட்டால் மனதுக்குக் குழப்பம் ஏற்படுகிறது. ப்ரொக்யூர்மெண்ட் செய்கிறோம். சரியாக நடக்கவில்லை தான். ப்ரைஸ் கண்ட்ரோல் சீராக நடக்கவில்லை என்றாலும், நாம் கவனித்துக் கொண்டு வருகிறோம். இன்னும் அதிக விலைக்கு விற்பதாக இருந்தால் 50 அல்லது 75 சதவிகிதம் ஆகிவிடும். இதனால்தான் அவர்களுக்குக் கோபம் வருகிறது. எழுபத்தைந்து சதவிகிதம் நாம் வாங்குவததென்றால் விலையை இன்னும் அதிக வெற்றிகரமாகக் கண்ட்ரோல் செய்யலாம். இதெல்லாம் செய்வதால்தான் ரீடெயில் ப்ரைஸ் இம்மாதிரி இருக்கிறது.

இப்போதே நியாய விலைக்கடைகள் வைக்கலாமே என்று கனம் அங்கத்தினர் திரு. கரையாளர் சொன்னார்கள். நியாய விலைக் கடைகளை உடனடியாக வைப்பதென்றால், இப்பொழுது வைப்பது சரியல்ல என்பது அரசாங்கத்தினுடைய அபிப்பிராயம். ஆனால், ரொம்பக் கவலையோடு நிலைமையைக் கவனித்துக் கொண்டிருக்கிறோம். நான் முன்பு கூறியது போல் வியாபாரிகளிடம் வாங்கி சிற்சில இடங்களிலே குறைந்த அளவுக்கு ரீடெயில் ப்ரைஸ் வைப்பது என்று இப்பொழுது ஏற்பாடாகியிருக்கிறது.

இதற்குப் பின்னால் நிலைமை மோசமாகலாம். நெருக்கடி ஏற்படலாம். அப்பொழுது தேவையானால் நியாய விலைக் கடைகளை ஆரம்பிக்கலாம்.

24th April 1959] [Sri M. Bhaktavatsalam]

பெரிய நெருக்கடி வரும்போது அதைப்பற்றி யோசிக்கலாம். அவசியம் இல்லாத சமயத்தில் நியாய விலைக்கடைகளை ஆரம்பிப்பதில் பிரயோசனம் இல்லை. அப்பொழுது நியாய விலைக் கடையை ஓரளவுதான் வைக்கலாம். ஏற்கனவே நாம் 100 அல்லது 200 நியாய விலைக் கடைகளை ஆரம்பித்தோம்; அது கடைசியில் 96 ஆக குறைந்தது. அப்படியிருந்தும் உணவு விலை குறையவே இல்லை. இதைப்பற்றி எவ்வளவோ தடவை இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். நியாய விலை கடைகளை ஆரம்பித்தால் மட்டும் விலை குறைந்துவிடாது என்று கண்டு பிடித்தோம். நியாயவிலை கடைகள் வைத்தால் ரொம்பவும் ஏழைகளாக இருக்கக்கூடியவர்களுக குத்தான் அவைகள் உபயோகப்படுகின்றன. ஏழைகளுக்குத்தான் ஓரளவு நிவாரணம் கிடைக்கிறது. இன்றைக்கு அதன் கணக்கைப்பார்த்தால் ஒரு சிலருக்குத்தான் அது பயன்படுகிறது. எல்லோருக்கும் பயன்படுவதாக இல்லை. நடுத்தர வகுப்பினருக்கு அது அவ்வளவாக பயன்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். நியாய விலைக்கடைகளை வைத்தால் அதில் மட்ட ரக அரிசிதான் கொடுக்கப்படுகிறது. அதனால் நடுத்தர வகுப்பினர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அவைகள் ஒரு சிலருக்குத்தான் பயன்படுகிறது. நாம் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்துக்கொண்டால் அது எல்லோருக்கும் பயன்படக்கூடியதாகத்தான் இருக்கவேண்டும். சில நடுத்தர வகுப்பினருக்கு பச்சை அரிசி சாப்பிட்டு பழக்கம் இல்லை. அவர்களுக்கெல்லாம் நியாய விலைக்கடைகளில் நல்ல முறையில் அரிசி சப்ளை செய்யவேண்டியதாக இருக்கிறது. இன்னும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப்பற்றியும் சொல்லப்பட்டது. அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் கொடுக்கப்பட்டுதான் வருகிறது. அவர்களால் மட்ட ரக அரிசியை வாங்கிச் சாப்பிட முடியாது. அதனால் நடுத்தர வகுப்பினர் பூராவும் பாதிக்கப்படுகிறார்கள். இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளைப்பற்றி சொன்னார்கள். விலையைக் குறைக்காவிட்டால் நிலைமையை சீராக்க முடியாது. ஆகவே அவசியம் ஏற்பட்டால் எதைச் செய்யவும் தயங்க மாட்டோம். நாம் எதைச்செய்தாலும் அது விவசாயிகளுக்குப் போகாமல் வியாபாரிகளுக்குத்தான் போய் சேருகிறது. வியாபாரிகள் நியாய விலைக்கு விற்கவேண்டும். என்பதுதான் எங்களுடைய கொள்கை. நியாயமாக அவசியமான விலைக்குத்தான் அவர்கள் விற்கவேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே அவர்களிடமிருந்து ப்ரொக்யூர் செய்ய வேண்டியதாக இருக்கிறது. என்போர்ஸ் பண்ணி வாங்க வேண்டியதாக இருக்கிறது. அப்படிச்செய்தால் அவர்களுக்கு ஆத்திரம் வருகிறது. இது வரையிலும் நாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளில் ஒரு பலனும் அளிக்கவில்லை என்று சொல்வதற்கு இல்லை. கனம் அங்கத்தினர்கள் திருச்சியிலுள்ள நிலைமையைப்பற்றி சொன்னார்கள். திருச்சியிலுள்ள குறைகளைப்பற்றி அடிக்கடி என்னிடம் வந்து சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அங்கு விற்பனை வரியைக்கூட கட்டாமல் கள்ளத்தனமாக அரிசியை விற்றுக்கொண்டு வருகிறார்கள் என்று தெரிய வருகிறது. ஆனால் திருச்சியின் பெயரைச் சொல்வது அவ்வளவு சரியல்ல. அங்கே போய் ப்ரோக்யூர்மெண்ட் செய்தால் அவர்களுக்கு ஆத்திரம் வருகிறது. அங்கு கொள்ளை லாபம் அடிப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படியிருந்தும் அங்குள்ள வியாபாரிகள் எங்களுக்கு உபதேசம் செய்கிறார்கள். நாட்டின் நன்மையை உத்தேசித்து அவர்களுடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்களிடத்தில் விரோத மனப்பான்மைதான் இருக்கிறது. லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஒரே கருத்தில்தான் அவர்கள் இருக்கிறார்கள். அங்கே போய் கேட்டால் பல பிரச்னைகளைக் கிளப்புகிறார்கள். அவர்களை அனுசரித்து பல பத்திரிகைகளும் எழுதுகிறது. இதைப்பற்றிகூட எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் குறிப்பிட்டார். அதாவது சர்க்கார் உத்தியோகத்திலிருந்து ரிடயரான சீப் இஞ்சினியர்கூட, ஏ. ஆர். வெங்கடாச்சாரிகூட சர்க்காருடைய உணவுக் கொள்கையைப்பற்றி கண்டித்து எழுதியிருப்பதாச

குறிப்பிட்டார். அப்படி எழுதியவர்கள் ஏ . ஆர். வெங்கடாச்சாரி இல்லை. ஒரு பத்திரிகையின் ஆசிரியர் அதாவது ஏ. ஜி. வெங்கடாச்சாரிதான் அப்படி எழுதியிருக்கிறார். அவர் சொல்லியதில் நமக்கு ஒரு கவலை ஏற்பட்டது. கடைசியில் அவர் சொல்லியபடி இல்லை என்று தெரிய வந்தது. இன் னும் உணவு பொருள்களின் விலை குறையவே இல்லை அது குறையத் தான் வேண்டும். அதைக் குறைப்பதற்கு வேறு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடியதாக இருந்தாலும் அதை எடுத்துக்கொண்டுதான் வருகிறோம். நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால் இப்பொழு துள்ள நிலைமையில் இதையெல்லாம் விட்டுவிட்டு சும்மா இருக்கலாம் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கக் கூடிய நடவடிக்கைகளில் ஏதாவது குற்றம் குறைகள் இருந்து அதை எடுத்துச் சொன்னால், அது நியாயமாக இருந்தால், அது உருப்படியான யோசனைகளாக இருந்தால் அதை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றத்தயா ராக இருக்கிறோம். விலை குறையவில்லை என்று சொல்லிக்கொண்டிருப் பதில் பயன் இல்லை. கனம் ஸ்ரீநிவாசய்யர் இப்பொழுது எடுத்துக்கொண் டிருக்கக்கூடிய நடவடிக்கைகளைப்பற்றி சொன்னார். இப்படிப்பட்ட ஒரு நட வடிக்கையை ஏன் திடீரென்று கொண்டு வந்தீர்கள் என்று கேட்டார். இதை நாங்கள் அவசரமாகக் கொண்டு வரவில்லை. அவசியம் ஏற்பட்ட தால்தான் கொண்டு வந்தோம். தஞ்சையில் குருவை சாகுபடி காலத்தில் விலை அதிகமாகத்தான் இருந்தது. சாதாரணமாக அங்கே அறுவடை காலங்களில் விலை குறைந்து போகும். ஆனால் இப்பொழுது அறுவடை யானாலும் விலை குறையவில்லை. பார்க்கலாம் என்று பொறுத்திருந் தோம். அதில் ஒன்றும் பரிகாரம் ஏற்படவில்லை. நிலைமையை நன்றாக கவனித்துப்பார்த்த பிறகுதான் ப்ரொக்யூர்மென்ட் நடவடிக்கையை எடுத் துக்கொண்டோம். இதைப்பற்றி மத்திய அரசாங்கத்துடன் கலந்து ஒரு முடிவுக்கு வருவதற்குத்தான் காலதாமதம் ஏற்பட்டது. அனாவசிய மாக காலதாமதம் ஏற்படவில்லை. சிலர் கண்ட்ரோல் வருவதற்கு முன்னா லேயே விற்றுவிட்டார்கள் அவர்களுக்கு லாபம் கிடைத்துவிட்டது. கண்ட் ரோல் வந்த பிறகு விற்றவர்களுக்கு லாபம் கிடைக்கவில்லை என்று புகார் சொல்லப்பட்டது. முதலில் விற்றவர்களுக்கு லாபம் வரத்தான் வரும். சட்டம் வருவதற்குள் அதிகப்படியான லாபத்திற்கு விற்று விட்டால் அது அவர்களுடைய அதிருஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். துவரை, மற்ற உணவுப் பொருள்களைப்பற்றி குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி மத்திய அரசாங்கத்துடன் கலந்து ஒரு முடிவுக்கு வரவேண்டியதாக இருக்கிறது. அதை வெளியிலிருந்து வரவழைக்க வேண்டியதாக இருக்கிறது. ஏனென் றால் இங்கு அதற்கு பற்றாக்குறை இருக்கிறது. மத்திய அரசாங்கத்தி னுடைய அனுமதி பெற்றுதான் அதை வரவழைக்கவேண்டியதாக இருக் கிறது. குருணையைப்பற்றியும் கூறினார்கள். அதையாவது வெளியிலிருந்து வரவழைக்கலாம் என்றும் சொல்லப்பட்டது. அப்படி அதை வரவழை க்க வேண்டிய அவசியம் இல்லை. நம்மிடத்தில் அரிசி இல்லாமல் இருந் தால் அதை வரவழைக்கலாம். நம்மிடம் அரிசி இல்லாமல் இல்லை. அரிசி வேண்டிய அளவு இருக்கும்போது குருணையை வெளியிலிருந்து வரவழைக்க வேண்டிய அவசியம் இல்லை. பற்றாக்குறை இருக்கும்போது அதை வரவழைக்கலாம். பருப்பு வகையறுக்கள் வேண்டியதாக இருக்கி றது. அதை வாங்குவதற்கு மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டி ருக்கிறோம். மொத்தத்தில் அரசாங்கம் நிலைமையை கவனித்துக்கொண்டு தான் வருகிறது. எவ்வாறு மக்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டுமோ அந்த அளவில் அளிக்க தயாராக இருக்கிறது. அதில் வேண்டிய அள வில் கவனமும் செலுத்தப்பட்டு வருகிறது. அதற்கு மக்களுடைய ஒத்துழைப் பும் வேண்டியதாக இருக்கிறது. வியாபாரிகளுடைய ஒத்துழைப்பும் வேண்டிய தாக இருக்கிறது. விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என் பதை எல்லோரும் உணரவேண்டும். வியாபாரிகள் லாபம் சம்பாதிப்ப தையே கருத்தில் கொள்ளக்கூடாது. அவர்களும் அரசாங்கத்துடன் ஒத்

24th April 1959] [Sri M. Bhaktavatsalam]

துழைக்க வேண்டும். இம்மாதிரி அவர்கள் எதிர்ப்பு காட்டினால் அது அவர்களுக்கு நல்லது அல்ல என்பதை அவர்கள் உணர வேண்டும். அவர்களும் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஒத்துழைக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri A. R. SUBBIAH MUDALIAR : **On a point of explanation,** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, உற்பத்தி செலவு ஜாஸ்தியாக அதாவது காஸ்ட் ஆப் ப்ரொடெக்ஷன் ஜாஸ்தியாக இருக்கிறது என்றுதான் சொன்னேன். உற்பத்திச் செலவைக் குறைக்கக்கூடிய அளவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். உணவுப் பொருள்களின் விலையை மட்டும் கட்டுப்படுத்திவிட்டு காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷன் கூடுதலாக இருந்தால் விவசாயிகள் ரொம்பவும் பாதிக்கப்படுவார்கள். அவர்களுக்கு வருமானம் வரக்கூடிய அளவில் அவர்களுடைய காஸ்ட் அப் ப்ரொடெக்ஷனை குறைக்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ள வேண்டும். உணவுப் பொருள்களின் விலையை மட்டும் கட்டுப்பாடு செய்வதில் பிரயோசனம் இல்லை. உற்பத்திச் செலவைக் குறைத்தால் தான் விவசாயிகள் நியாயமான விலைக்குக் கொடுக்க முன் வருவார்கள். முன்னுக்குப் பின் ஒன்றும் தெரியப்படுத்தவில்லை.

Sri K. RAMACHANDRAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ப்ரொக்யூர்மெண்ட் வந்த பிறகும் அரிசி விலை குறையவே இல்லை. புள்ளி விவரங்களைப் பார்த்தால் விலை உயர்ந்து இருக்கிறதாகத்தான் தோன்றுகிறது. இதைப்பற்றி சர்க்கார் ஏதாவது பரிசீலனை செய்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்பொழுது விலை அதிகரித்து இருக்கிறது என்று ஒப்புக்கொள்ள முடியாது. ஒன்று அல்லது இரண்டு இடங்களில் அதிகப்பட்டு இருக்கலாமேயொழிய மொத்தமாகப் பார்த்தால் பட்டணம்படிக்கு ஒரு அணு அல்லது இரண்டு அணு குறைந்துதான் இருக்கிறது.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் முதலில் பேசியதற்கு கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லி விட்டார். அதற்கு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். ஏ. ஜி. வெங்கடாச்சாரியார் என்பதற்கு பதிலாக ஏ. ஆர். வெங்கடாச்சாரியார் என்று நான் தப்பாக சொல்லியிருந்தால் அதை திருத்திக்கொள்ள விரும்புகிறேன். எதிர் கட்சி தலைவர் சில விஷயங்களை மிகைப்படுத்திச் சொல்லுகிறார் என்று கனம் மந்திரி அவர்கள் குறிப்பிட்டார். மிகைப் படுத்திச் சொல்வது என்பது "**exaggerate**" பண்ணி சொல்வது என்பதுதான். அப்படி "**exaggerate**" பண்ணி ஒன்றும் நான் சொல்லவில்லை. அப்படிப்பட்ட வழக்கம் என்னிடம் இதுவரையிலும் கிடையாது. அந்த முறையில் நான் சொல்லவில்லை. நான் சுற்றுப் பிரயாணம் செய்த காலத்தில் என்னிடம் வந்து அநேகம் பேர்கள் சொன்னார்கள், முறையிட்டார்கள். நானே இரண்டொரு இடங்களில் சென்று பார்த்தேன். அப்படிப் பார்த்துதான் சொன்னேனேதவிர மிகைப்படுத்திச் சொல்லவில்லை. அப்படி மிகைப்படுத்திச் சொல்வதற்கும் அவசியம் இல்லை. ஆனால் இன்னும் அதிகமான கஷ்ட நிலைமை ஏற்பட்டு எங்கும் ஸ்டார்வேஷன் டெத் (**Starvation death**) ஏற்பட்ட பிறகுதான் அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி மிகவும் கவலையோடு நினைப்பார்களோ என்னமோ எனக்குத் தெரியவில்லை. முக்கியமாக உணவு உற்பத்தி பெருகவேண்டும். அதேசமயத்தில் விலைகள் குறைய வேண்டும். எங்கு பார்த்தாலும் நியாய

விலைக் கடைகளை ஏற்படுத்தி, எல்லோருக்கும் நியாயமான விலைக்கு அரிசி வழங்கவேண்டும் என்பதுதான் எல்லோருடைய கருத்தும். இதில் சர்க்காருக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அவ்வளவு அக்கறை அதை விட பன்மடங்கு அக்கறை எதிர்கட்சியில் உள்ளவர்களுக்கு இருக்கிற தென்பதை வற்புறுத்திக்கூற விரும்புகிறேன். முக்கியமாக இப்போது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ப்ரொக்யூர்மெண்டு செய்கிறோம். இப்படி இல்லாமலும் செய்யலாம். ஆனால் வியாபாரிகளைப்பற்றி குறை கூறினார்கள். உற்பத்தியாளர்களைப் பற்றியும் சொன்னார்கள். உற்பத்தியாளர்களைப் பொறுத்த வரையில் நியாயமான விலை என்ன என்பதைப் பற்றிச் சொல்லவில்லை. இப்பொழுதுள்ள விலையே கட்டுபடியாகிறது என்று சில உற்பத்தியாளர்கள் சொன்னார்கள் என்பதைப்பற்றிச் சொன்னார்களே தவிர அப்படிச் சொன்னவர்கள் யார் என்பதை அவர் சொல்லத் தயாரில்லை.

(THE HON. SRI M. BHAKTAVATSALAM : தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ளவர்கள் நல்ல விவசாயிகள்தான்.) முக்கியமாக எங்களுடைய கருத்து என்னவென்றால் புட் கமிட்டியிலும் சொல்லியிருக்கிறோம். இப்போதும் சொல்லவிரும்புவது சிமிண்டு, இரும்பு, மோட்டார்கார் முதற்கொண்டு எல்லாப் பொருள்களின் விலையும் நிர்ணயம் செய்திருக்கிறீர்கள். விவசாயிகளுக்குத்தேவையான கருவிகள், உரங்கள் முதலிய எல்லாவற்றின் விலையும் ஒரே அடியாக உயர்ந்துகிடக்கிறது. அவைகளை என் விலை நிர்ணயம் செய்யவில்லை. நீங்களேதான் அநேகம் மாடல் விதைப்பண்ணைகள் வைத்திருக்கிறீர்களே அந்த இடத்திலேயே பெரிய உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தைத் தள்ளிவிடுங்கள். பாக்கி எரு, விதை, சாகுபடிச் செலவு, களை யெடுக்கும் செலவு, அறுவடைச் செலவு ஆகிய எல்லாம் என்ன ஆகிறது, அதில் விளையக்கூடியவை எவ்வளவு, உற்பத்திச் செலவுக்கு ஏற்ப நியாயமாக என்ன விலைக்கு உற்பத்தியை விற்றால் அவனுக்குக் கட்டுபடியாகும் என்று கணக்குப் போட்டீர்களா? இப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை சாகுபடிச் செலவு ஒரேயடியாக உயர்ந்திருக்கிற நேரத்தில் சரியாக இல்லை என்று நாங்கள் சொன்னால் நம்பமாட்டீர்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அநேகம் பேர்களும் பல ஜில்லாக்களில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருடைய வார்த்தைகளையும் நீங்கள் நம்பமாட்டீர்கள் என்றாலும் ஒரு சிலருடைய வார்த்தைகளையாவது நம்பலாம். அவர்களையே வேண்டுமானாலும் கேட்டுப்பாருங்கள். இன்னசெலவு ஆகிறது, இன்ன விலைக்கு விற்கலாம் என்பதாக அப்படி ஒர்க்கவுட் ஒரு எக்கருக்கு பண்ணி விலை நிர்ணயம் செய்தால்தான் நியாயமாக இருக்கும். (ஸ்ரீ சிதம்பர பாரதி என்ன விலைதான் நியாயமாக இருக்கும் என்று நீங்களே தான் சொல்லுங்கள்) நான் சொல்வானேன். உங்களிடத்தில் மாதிரிப் பண்ணைகளே நிறைய இருக்கின்றன. அங்கே ஆக்சுவலாக ஒர்க்கவுட் பண்ணிப்பார்த்து நீங்களே சொல்லலாம். நீங்களே நியாயமான ஒரு விலையை நிர்ணயிக்கலாம். அவ்வாறு பண்ணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது இப்போது ப்ரொக்யூர்மெண்டு பண்ணுகிறபோது திண்டிவனம், செஞ்சி முதலிய தாலூக்காக்களில் வீட்டுக்குள் புகுந்தே நெல்லை அள்ளி வருவதாகத் தெரிகிறது. கேட்டால் அமைச்சர் அப்படி இல்லை என்கிறார். ஆனால் அங்கே இப்படி நடக்கிறதே என்று கேட்டால் கலெக்டர் உத்தரவு, என்கிறார்கள். இப்போது சர்க்காருடைய கொள்கைப்படி 2 லட்சம் டன்தான் தேவை. அதைக் கொள்முதல் செய்துகொண்ட பிறகு பாக்கி தானியங்களும் மார்க்கட்டில் இருக்கும். நிறைய பெயர் ப்ரைஸ் ஷாப் (**Fair price shops**) ஏற்படுத்தினால் விலை நிச்சயமாகக் குறையக் கூடும். எங்கு பார்த்தாலும் நியாயவிலைக் கடைகள் வைத்தால்தான் விலை இறங்கும். அதை சர்க்கார் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆந்திர அமைச்சர் அவர்கள் நமக்கு மிகவும் உதவி செய்ய விரும்புகிருர்கள் என்று அமைச்சர் சொன்ஞர்கள். நானும் அவர் முதலைக் கண்ணீர் விடுகிறதைப்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். அங்கிருந்து வருகிற அரிசியின் விலை ஜாஸ்தியாகத்தான் இருக்கிறது. என்னைக் கேட்டால் நான் ஒன்று சொல்வேன். முதலில் ஜோனல் கவுன்ஸிலை விட்டு நம் ராஜ்யம் வெளியேறவேண்டும். இனி அதில் நாம் இருப்பதில் பிரயோஜனமே இல்லை. உங்களுக்கு கட்ஸ், **guts** இருந்தால் இதைப் பற்றி நன்ருக வலியுறுத்திக் கூறிவிட்டு ஜோனல் கவுன்ஸிலைவிட்டே வெளியேறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைவிட்டு வெளியேறி நம் ராஜ்ய உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழிவகைகளைச் செய்து, மேலும் எங்கு பார்த்தாலும் நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்தி, தானியத்திற்கும் உற்பத்திச் செலவுக்கும் ஏற்ப நியாயவிலையை நிர்ணயித்து உடனடியாக இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு சர்க்கார் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

Sri N. K. Palanisami and some other hon. Members rose. . .

DEPUTY SPEAKER : There cannot be any discussion at this stage.

The resolution moved by hon. Member Sri V. K. Ramaswamy Mudaliyar was talked out.

DEPUTY SPEAKER : I adjourn the House till 1 p.m. on Monday, the 27th April 1959. 4-49 p.m.

The House then adjourned.

VI.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

B.—Reports and other papers.

* 9. *Speech of the Hon. Sri V. Ramaiah, Minister for Electricity, commending the Annual Financial Statement of the Madras State Electricity Board for* 1959.60 *for the consideration of the House.*